உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# சோதிடமர்மசாஸ்திரம்.

இஃது

சோதிடவல்லவர்களின்

அனுக்கிரகத்தின்படி

பர்ப்பல கணிதநூற்களைக் கொண்டு

ஆரய்ந்து

செஞ்சி

ஏகாம்பர சோதிடரவர்களால்

எழுதப்பட்டு,

Cl. 50467
1937

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1924

இதன்விலை அணா—8.

அனுபவமானது! பிரசித்தி யடைந்தது!! சஞ்சீவிபோன்றது

# அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடி வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அனேக ஆ ரங்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனா வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப்பே யிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்திதருவதில் இது நி ரற்ற மருந்தாகும். ஆங்கிலேயமுறைப்படி தயாரிக்கப்பட்ட அ மையானமருந்து சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இரும நோய்கண்டு அவஸ்தைப்படுவர்கள் இதை உட்கொண்டால் இரவ டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனு தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினாலாவது பு வெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர்வியாதிகள் தீ கண்ணெரிச்சல்கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத் உண்டாக்கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் ந பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். ம்புகளுக்கு அதிகவலுவைத்தரும், தேகத்தில் நல்ல இரத்தத்தை சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாதபித் சிலேத்துமத்தா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சப் தாதுகளுக்கும் நல்லபலத்தைதரும். மூலச்சூடு மூலவாய்வு ம சிக்கல் இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல யோஜனத்துடன் 20-நாள் ச பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோ தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறும தே கிடையாது 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தே வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

## திராவகத்தை உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5- அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண் பத்தியமேகிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு த்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 1 4 0 டஜன் 1-க்கு ரூபா—12.

ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2 0 0 டஜன் 1-க்கு ரூபா—21

இப்படிக்கு,

சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதரா

உ

கடவுடுணை.

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# சோதிட மர்ம்மசாஸ்திரம்.

விநாயகர் துதி.

வெண்பா.

மாதிடமாம்பதினெண்மர் மருள்கணிதனூலாய்ந்து
சோதிடமாமர்ம சாஸ்திரத்தை - மேதினியில்
செந்தமிழாலோதுதற்குச் செல்வகலைவாணியுற
தந்திமுகத்தைங்கரத்தாட் காப்பு.

## நூன் முகம்.

——()——

காரக நிகண்டு.

மேஷத்தின் உருவமுங் காரகமும்.

மேடம் மேஷவிராசி, உருவம் வெள்ளாடு, சஞ்சாரங் காடு நாற்கால் ஜீவன் தாதுவிராசி, திசை கிழக்கு, நிரஞ் சிகப்பு, ஜாதி க்ஷத்திரியன், அங்கந்தலையெனக் கொள்ளவும். (க)

ரிஷபத்தின் உருவமுங் காரகமும்.

ரிஷபம் ரிஷபவிராசி, உருவம் எருது, சஞ்சாரம் வழியில், நிரம் வெண்மை, திசை கிழக்கு, ஜாதி வேளாளன், அங்கம் முகமெனக் கொள்ளவும். (உ)

மிதுனத்தின் உருவமுங் காரகமும்.

மிதுனம் மிதுனவிராசி, உருவம் ஸ்ரீபுருஷரூபம், ஆயுதம் வீணையுந் தடியும், ஜாதி வைசியன், சஞ்சாரம் ஊருக்குள், நிரங் கருப்பு, திசை கிழக்கு, அங்கங் கழுத்தெனக் கொள்ளவும். (ங)

கடகத்தின் உருவமுங் காரகமும்.

கடகங் கடகவிராசி, உருவம் நெஞ்சுண்டு, சஞ்சாரம், நீர்க்கரை, ாதி பிராமணன், திசை தெற்கு, நிரம் வெள்ளை, பலகால் ஜீவன், ாதுவிராசி, அங்கம் தோளெனக்கொள்ளவும். (ச)

## சிம்பத்தின் உருவமுங் காரகமும்.

சிம்பம் சிம்பவிராசி, உருவஞ் சிங்கம், நாற்கால்ஜீவன், சஞ்சாரம் மலை, திசை தெற்கு, நிரஞ் சிகப்பு, ஜாதி க்ஷத்திரியன், அங்கம் மார் பெனக்கொள்ளவும். (ரு)

## கன்னியின் உருவமுங் காரகமும்.

கன்னி கன்னியாவிராசி, உருவம் பெண், கனல் யேந்தி நிற்கும், இருகால்ஜீவன், ஜாதி சூத்திரர், சஞ்சாரம் ஊருக்குள், திசை தெற்கு, நிரங் கருப்பு, அங்கம் பக்கமெனக்கொள்ளவும். (சு)

## துலாத்தின் உருவமுங் காரகமும்.

துலாம் துலாவிராசி, உருவம் புருஷன், கையில் திராசு பிடித்தி ருக்கும், ஜாதி வைசியன், சஞ்சாரம் நீர்க்கரையில், நிரம், நிரம்வெள் ளை, திசை மேற்கு, தாது விராசி, அங்கம் முதுகெனக்கொள்ளவும். ()

## விருச்சிகத்தின் உருவமுங் காரகமும்.

விருச்சிகம் விருச்சிகவிராசி, உருவந் தேள், சஞ்சாரங் கிணத்தரு கில், ஜாதி பிராமணன், திசை மேற்கு, பலகால் ஜீவன் பெண், நிரம் பச்சை, அங்கம் பீஜமெனக்கொள்ளவும். (அ)

## தனுசின் உருவமுங் காரகமும்.

தனுசு தனுசுவிராசி, உருவம் மானிடம், அரையின்கீழ் குதிரை வடிவம், கையில் வில்லேந்திநிற்கும், சஞ்சாரம் தோட்டத்தில், திசை வடக்கு, ஜாதி க்ஷத்திரியன், நிரஞ் சிகப்பு, இருகால் ஜீவன், அங்கம் தொடையெனக்கொள்ளவும். (சு)

## மகரத்தின் உருவமுங் காரகமும்.

மகரம் மகரவிராசி, உருவம் முதலை, மான் இவை இரண்டுருவ மாகும், சஞ்சாரம் நதிக்கரை, திசை வடக்கு, ஜாதி வேளாளன், நிரங் கருப்பு, தாது விராசி, அங்கம் முழங்காலெனக்கொள்ளவும். (கo)

## கும்பத்தின் உருவமுங் காரகமும்.

கும்பம் கும்பவிராசி, உருவம் புருஷன், கையில் குடமேந்தி நிற் கும், சஞ்சாரம் ஊருக்குள், இருகால் ஜீவன் திசை வடக்கு, நிரம் பச் சை, ஜாதி வைசியன், அங்கங் கணுக்காலெனக்கொள்ளவும். (கக)

## மீனத்தின் உருவமுங் காரகமும்.

மீனம் மீனவிராசி, உருவம் மீன்பெண், சஞ்சாரம் நீரிற்குள்,

திசை வடக்கு, ஜாதி பிராமணன்; நிறம் பச்சை, இருதலை இருவாழ்
உள்ளஜீவன், அங்கம் பாதமெனக்கொள்ளவும். (௧௨)

இராசிவிழிப்புக ளரியும்படி.

மேஷம் ரிஷபம் மிதுனங் கடகந் தனுசு மகரம் இவை-௬-ம் இரா
முழுதுஞ் சந்திரனுக்குரவாய் விருக்குமென வரிகவும். (௧௩)

ஆண்ராசி அல்லது ஒற்றைராசி.

மேஷம் மிதுனஞ் சிங்கந் துலாங் கடகந் தனுசு கும்பம் இவை
ஆறு இராசிகளென் றறியவும். (௧௪)

பெண்ராசி அல்லது இரெட்டை இராசி.

ரிஷபங் கடகங் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவை ஆறு
ராசிகளென் றறியவும். (௧௫)

சரராசிகள்

மேஷங் கடகந் துலாம் மகரம் இவை நாலுஞ் சரராசிகளென்
றறியவும். (௧௬)

ஸ்திரராசிகள்.

ரிஷபஞ் சிங்கம் விருச்சிகம் கும்பம் இவைநாலுமாம். (௧௭)

உபயராசிகள்.

மிதுனங் கன்னி தனுசு மகரம் இவை நாலும் உபயராசிகளென்
றறியவும். (௧௮)

இருகால்ராசிகள்.

மிதுனங் கன்னி துலாங் கும்பம் இவை நான்கும் இருகாலிராசி
களென்றறியவும். (௧௯)

நாற்கால் இராசிகள்.

மேஷம் ரிஷபம் சிங்கந் தனுசு இவை நான்கும் நாற்கால் ராசிக
ளென்றறியவும். (௨௦)

பலகால் ராசிகள்.

கடகம் விருச்சிகம் இவை இரண்டென்றறியவும். (௨௧)

பாக்கும் ராசிகள்.

மகரம் மீனம் இவை இரண்டென்றறியவும். (௨௨)

தலை உதையராசிகள்.

மிதுனஞ் சிங்கங் கன்னி விருச்சிகங் கும்பம் இவை ஐந்துதலை
உதைய ராசிகளென் றறியவும். (௨௩)

### கால் உதையராசிகள்.

மேஷம் ரிஷபங் கடகந் தனுசு மகரம் இவை ஐந்துங் காலுதைய இராசிகளென் றறியவும். (உச)

### உடல் உதையராசிகள்.

மீனராசி ஒன்றேயாமென வறியவும். (உரு)

### பகற்குருட்டு இராசிகள்.

மேஷம் ரிஷபஞ் சிங்கம் இவை மூன்றுமாம். (உசு)

### இராக்குருட்டு இராசிகள்.

மிதுனங் கடகங் கன்னி இவை மூன்றுமாம். (உஎ)

### பகற்செவிட்டு இராசிகள்.

துலாம் விருச்சிகம் இவை இரண்டென் றறியவும். (உஅ)

### இராச்செவிட்டு இராசிகள்.

தனுசு மகரம் இரண்டெ றறியவும. (உகூ)

### இராசிகளின் மூடம்.

கும்பம் பகல்மூடம் மீனம் இராமூடமென்றறியவும். (௩0)

### கிரகங்களின் பெயர்.

சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது இவை ஒன்பதாம்.

## நட்பாட்சி உச்சம் நீசம் பகை அறியும்படி.

மேஷராசியில் சூரியன் வுச்சம், சந்திரன் பகை, செவ்வாய் ஆட்சி, புதன் நட்பு, வியாழன் பகை வெள்ளி நட்பு, சனி நீசம், இராகு கேது பகை. (க)

ரிஷபராசியில் சூரியன் பகை, சந்திரன் நட்பு, செவ்வாய் நட்பு, புதன் நட்பு, வியாழன் நட்பு, வெள்ளி பகை, சனி நட்பு, இராகு ஆட்சி, கேது நட்பு. (உ)

கடகவிராசியில் சூரியன் பகை, சந்திரன் ஆட்சி, செவ்வாய் நீசம், புதன் நட்பு, வியாழன் உச்சம், வெள்ளி பகை, சனி இராகு கேது இவர்கள் பகை. (௩)

சிங்கவிராசியில் சூரியன் ஆட்சி,சந்திரன் பகை,செவ்வாய் பகை, புதன் பகை, வியாழன் நட்பு, வெள்ளி பகை, சனி பகை, இராகு பகை கேது நீசம். (ச)

கன்னியாவிராசியில் சூரியன் பகை, சந்திரன் நட்பு, செவ்வாய் நட்பு, புதன் ஆட்சி உச்சம், குரு நட்பு, சுக்கிரன் நீசம், சனி நட்பு, இராகு நட்பு, கேது ஆட்சி. (ரு)

துலாமிராசியில் சூரியன் நீசம், சந்திரன் பகை, செவ்வாய் நட்பு புதன் நட்பு, வியாழன் நட்பு, வெள்ளி ஆட்சி, சனி உச்சம், இராகு நட்பு, கேது நட்பு. (சு)

விருச்சிகவிராசியில் சூரியன் பகை, சந்திரன் நீசம், செவ்வாய் ஆட்சி, புதன் பகை, வியாழன் பகை, வெள்ளி, நட்பு, சனி பகை, இராகு உச்சம், கேது ஆட்சி. (எ)

தனுசுவிராசியில் சூரியன் நட்பு, சந்திரன் நட்பு, செவ்வாய் பகை, புதன் நட்பு, வியாழன் ஆட்சி, வெள்ளி நட்பு, சனி ஆட்சி, இராகு நட்பு, கேது ஆட்சி. (அ)

மகரவிராசியில் சூரியன் பகை, சந்திரன் பகை, செவ்வாய் உச்சம், புதன் நட்பு, வியாழன் நீசம், வெள்ளி நட்பு, சனி ஆட்சி, இராகு நட்பு, கேது ஆட்சி. (கூ)

கும்பவிராசியில் சூரியன் சந்திரன் செவ்வாய் இவர்கள் பகை, புதன் நட்பு, வியாழன் நட்பு, வெள்ளி நட்பு, சனி ஆடசி, இராகு நட்பு, கேது உச்சம். (க0)

மீனவிராசியில் சூரியன் நட்பு, சந்திரன் நட்பு, செவ்வாய் பகை, புதன் நீசம், வியாழன் ஆட்சி, வெள்ளி உச்சம், சனி இராகு நட்பு, கேது ஆட்சி. (கக)

## இராசிகளின் பலாபலன்.

### மேஷராசியின் பலன்.

சனி புதன் சுக்கிரன் இவர்கள் பாபிகள், குரு சூரியன் இவர்கள் நல்லவர்கள், சனி சம்பந்தமுற்றால் குரு எப்போதும் அவனுக்கொத்த பாபபலனைக்கொடுப்பன், (இதற்குதாரணம்) தன்மகன்மப்பதிகடா மெட்டுடன் பதினொன்றின் றலைவனுவது தான் மாரகஸ்தானதிபதியாகிய சுக்கிரன் கொல்லான், சனி முதலானவர்கள் கொல்லுவாரென் றறியவும்.

### ரிஷபவிராசியின் பலன்.

குரு வெள்ளி சந்திரன் பாபிகள், சனி இரவி நல்லவர்கள், சனி ஒருவனே சிறப்புப்பொருந்தி மேலான ராஜயோகக் கொடுப்பன் குரு

முதலானவர் கொல்வர், குரு சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் சம்பந்தப்பட்ட கிரகங்களை யாராய்ந்து அவர்கள் நிலைகளறிந்து சொல்லத்தக்கதெனவறிக.

### மிதுனவிராசியின் பலன்.

அங்காரகன் குரு சூரியன் கொடியபாபிகள், சுக்கிரன் ஒருவனே சுபன் குரு சனியுடன் சேருவானுகில் மேடவிராசியில் பிரந்தோர்க்கொத்தபடி அவயோக காரகனுவான், சந்திரன் துதியாதிபத்தியதோஷத்தை அடைந்தவனுயிருந்தாலு மாரகங்கொண்டான் குஜன் குரு சூரியன் மாரகத்தைக்கொடுப்பார்கள், குருவுஞ்சனியுந் தரும கருமாதிபதிகளாகையால் யோககாரகாள் வலியறிந்து சொல்லுவீர்களெனவறிக.

### கடகவிராசியின பலன்.

சுக்கிரன் புதன் பாபிகள், செவ்வாய் குரு விசேஷசுபர், செவ்வாய் ஒருவனே யோககாரன், சூரியன் துதியாதிபதியானபோதிலுங் கொல்லான், சுக்கிரன் முதலியோர் கொல்லுவார்களெனவறிக.

### சிங்கவிராசியின் பலன்.

புதன் சுக்கிரன் துதிக்கத்தகாத பாபிகள், செவ்வாய் ஒருவனே நல்லவன், செவ்வாயுஞ் சுக்கிரனும் யோககாரகாள் யிவர்கள் சம்பந்தமுற்ருல் தீயபலனைக்கொடுப்பார், செவ்வாய் யோககாரகனுனபோதினுஞ் சதுர்த்தகேந்திராதிபதி பம்பந்தத்தினுல் தீயபலனைக்கொடுப்பாரென்றதாயிற்று, புதன் முதலானபேர் மாரகக்குறியுற்ருராஞல் கொல்வரென்று ஆலோசித்துச் சொல்வாயாக.

### கன்னிவிராசியின் பலன்.

செவ்வாய் குரு சந்திரன் பாபிகள், வெள்ளி ஒருவேனே சுபன் வெள்ளி புதன் யோககாரகாள், சுக்கிரன் துதியாதிபதியாயிருந்தாலுங் கொல்லான் குஜன் முதலானபேர்கள் எப்போதுங்கொல்வாரென்றறியவும்.

### துலாவிராசியின் பலன்.

பிரகஸ்பதி சூரியன் செவ்வாய் பாபிகள், சனி புதன் சுபாள், சந்திரன் புதன் யோககாரகாள், செவ்வாய் துதியசப்தமாதிபதியாயிருந்தபோதிலுங் கொல்லான், குரு முதலானவர்கள் கொல்லுவாரென்றுயூகித்துச் சொல்லுவாயாக.

# முதற்பாகம்.

## விருச்சிகவிரர்சியின் பலன்.

புதன் செவ்வாய் சுக்கிரன் பாபிகள், சந்திரன் ஒருவனே சூரியன் சந்திரன் யோககாரகாள், குரு துதியாபதியா யிருந்தபோ[illegible] லும் மாரகத்தைச் செய்யானென்றும், புதன் முதலானவர்கள் கொல் வார்களென்றுஞ் சோதித்துச் சொல்வாயாக.

## தனுசுவிராசியின் பலன்.

சுக்கிரன் ஒருவனே பாபி, செவ்வாய் சூரியன் சுபாள், சூரியன் புதன் யோககாரகாள், சனி துதியாதிபதியா யிருந்தபோதிலுங் கொல் லானென்றறிக, சுக்கிரன் முதலானவர்கள் எப்போதுங் கொல்வார்க ளென்று சொல்லுவாய்.

## மகரவிராசியின் பலன்.

செவ்வாய் குரு சந்திரன் பாபிகள், சுக்கிரன் புதன் சுபர், வெள் ளி ஒருவனே இராஜயோககாரகன், சனி துதியாதிபதியாயிருந்தாலும் மாரகத்தைக் கொடான், செவ்வாய் முதலானபேர் கொல்வாரென்று தெரிந்தவர்கள் ஆலோசித்துச் சொன்னூர்களென்று சொல்லுவாயாக.

## கும்பவிராசியின் பலன்.

குரு சந்திரன் செவ்வாய் பாபிகள், சுக்கிரன் ஒருவன் சுபன், சுக் கிரன் யோககாரகன், குரு துதியாதிபதியாயிருந்தபோதிலும் மாரகத் தைக்கொடான், செவ்வாய் முதலானபேர்கள் கொல்வார்களென்று கூறுவாயாக.

## மீனவிராசியின் பலன்.

சனி சுக்கிரன் சூரியன் புதன் பாபிகள், செவ்வாய் சந்திரன் சுபர், செவ்வாய் குரு இராஜயோககாரர்கள், செவ்வாய் துதியாதிபதி யாயிருந்தபோதிலுங் கொல்லான் கிரகங்களுடைய வலுமையை யூகித் துச்சொல்க, சனி முதலானவர் சொல்வாரென்று கூறுவாய்.

# இராஜயோகங் கூறுகின்றது.

தருமகருமாதிபதிகள் தோஷத்துடனே கூடியிருந்தாலும் தோஷ த்துடனே கூடாதிருந்தாலும் இராஜயோகத்தைக் கொடுப்பார்கள்.

தருமகருமாதிகளைப் போலப் பலன்களைக் கொடார்களெனக் கொள்க.

## விருத்தம்.

விளையும்புதனுஞ்சூரியனும் விரும்பியெட்டினுன்கொன்றில்
வளையக்கூடின்மன்னவனு மதியுக்கதிருமுடன்கூடி

# சாதிட மர்மசாஸ்திரம்.

தன்மகன்மத்தி விரண்டிலிருக்கக்கீர்த்தியுளன்
யாரவிபொன்பன்னென்றிற் கேடில்சன்மத்துறிலரசே.

எல்லாக்கோள்களுடைய நன்மைதுன்மை கூறுகின்றது.

வெண்பா.

ஐந்தொன்பானுதிபரா யாவர்வரினுமவர்
அந்தமிலின்பப்பலனை யாற்றுவார்—அந்தமுறும்
அற்பபலனாற்றுவா ரம்மூன்றும்பதினென்
றற்பதிகளிவ்வுலகு ளோர்க்கு.

இலக்கினத்துக்கு ரு-கூ-ஆ மிடத்துக்கு அதிபருய் எந்தக்கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத இன்பபலனைக் கொடுப்பார்கள்.

ங-சு-கக ஆ மிடத்துக்கு அதிபருய் எந்தக்கிரகங்கள் வந்தாலுந் துன்ப பலனைக் கொடுப்பார்கள்.

ங-சு-கக ஆ மிடங்களி லிருக்கிறவர்கள் பாபபலனைக் கொடார்கள்.

இலக்கினத்துக்கு போஷகன் பாசகன் மாரகனறியும்படி.

ச-ரு-கூ-ஆ மிடம்வுடையவன் போஷகன் ரட்சிப்பான்.

ங-சு-ய-கஉ-ஆ மிடம்வுடையவன் பாசகன் பலன்கொடான்.

உ-எ-அ-கக-ஆ மிடம்வுடையவன் மாரகன் கொல்லுவான்.

விருத்தம்.

அஞ்சொன்பதுக்கதிபர் பாபிசுபரானாலும்
மிஞ்சுபலனைத்தருவார் மேன்மூன்று - ரெஞ்சுபதி
னென்பதுக்கதிபதியே மெப்படியேயொன்றிவரில்
போன்றபலனைக்குடுப்பார் பூண்டு.

போகஞ்சுகமாம்லக்கினத்துக் கொண்றேநல்லோர்முன்னிருக்கப்
போகன்றனவான்வாழரசன் பொருந்தும்பின்னேகிரகமுறில்
ஆருமஸ்வயோகமதாம் அணிஜன்மத்தினிருபுறமும்
தாகமுடனேசுபரிருக்கிற் ருனுமரசனெனவருமே.

வருமேசென்மலக்கினதி வந்துமித்திரன்றன்வீடும்
பொருமேயுச்சமனையிரண்டிற் புகருங்கூடிற்றனவானுந்
தருவேஜென்மஞ்சிங்கமது தன்னிற்பரிதிதானிருக்க
அரிவைமனையிற்புதனிருந்தா னனீசுவரனுமாம்.

அரசேமூன்றிலீரைந்திலாறிலிருக்கச்சென்மாதி
சிரசாய்நல்லோர்தனைப்பார்க்கச் செகத்துக்கதியனுகுமிவன்
கரமாந்துலாத்திற்புகர்மேஷந் தன்னிற்செவ்வாய்கடககுரு
பொரவேநிற்கத்தனபதியாய்ப் பொருந்துமரசன்கண்டீரே.

கண்டரிஷபஞ்சென்மமதாய்க் காணுமதியந்தானிருக்கக்
கொண்டுபெரிதிசிங்கத்திற் கூறுந்தேளிற்குருவிருக்க
மண்டுகும்பச்சனிவரினும் வந்தால்ராஜயோகபலன்
பண்டேயுள்ளபூபதியாய்ப் பாருக்கரசாயிருந்திடுவன்

திடமாஞ்சென்மமகரமதாய்ச் செப்புங்காரிதானிருக்க
அடைவேசெவ்வாய்மதிகூடி யானகடகந்தானுறவே
தொடர்சேர்மரிதிசிங்கத்திற் சொல்லுமிதுனம்புந்தியுற
வடிவாற்கோலிற்புகரிருக்க வாழுந்துற்கத்தரசனிவன்.

இருதயராசியையும் மதிலக்கினத்தையுங் குருநிற்குதல் நோக்குதல் செய்யில் குருபுத்திரனென்க. இப்படி அல்லாதது பிறர்க்குப் பிறந்தானெனவறிக.

கிரகவலி அறியும்படி.

உதையத்தில் வியாழம் புதன் நிற்கினும் நோக்கினும், இலக்கினதிபன் நிற்கினும் நோக்கினும் வுதையம் வலிதாம் சனி பாம்பு கால் நோக்கில் வலியர், குரு அரை நோக்கில் வலியன், குஜன் முக்கால் நோக்கில் வலியன், யிரவி புதன் சுக்கிரன் மதி முழுநோக்கில் வலியரெனவறிக.

வுதயத்தையாதல் மதி லக்கினத்தையாதல், குரு சுக்கிரன் புதன் தேறி நோக்குதல் நிற்குதல் செய்யில் தீவினைகளெல்லாம்வென்று பெருஞ் செல்வமாகி ஞானேசுரமாகி சர்வாகமங்களுக்குந் தானேதேறி அறிவும் அன்புங்கருத்தும் அருளும் பெருந்தயவு முடையருமென்று மனமே ஆலயமாகிப் பூமணமாகி யிருக்குமெனவறிக.

கவி.

வருந்துசசியினிருபுறமும் வரவேநல்லோர் துரியோகந்
திருந்துயோகனயிஸ்வரியன் றேசஜனத்துக்கதிபதியே.

இலக்கினபாகம் அறியும்படி.

நற்கோளாகிய குரு சுக்கிரன் மதி நாற்கண்டங்கள்நிற்க, கடகத்தில் குரு வுதயமாக-ச-எ-ஆ மிடத்தில் சுபக்கிரகங்கள் தேறிநிற்கப் பிறந்தான் அநேகநாள் சுகத்துடனே யிராச்சிய்பாரம் பண்ணுவன்

# சோதிட மர்மசாஸ்திரம்.

...தில் குருவுதிக்க நட்பினு மாட்சியினும் ஆறுகோள்நிற்கில் அரசாளுவன், இன்னெறிய சிங்கத்தில் குருவுதிக்க ரிஷபத்தில் பூரண மதியும் மேஷத்தில் யிரவியும் நிற்கப்பிறந்தானாகில் இராச்சியமாள்வன் மூன்றுகோளுச்சத்தில் நிற்கப்பிறந்தவன் ஒரு மண்டலமாள்வன் நாலு கோளுச்சமாகில் தேசமாள்வன், ௫-கோள் ௬-கோளுச்சமாகில் ௫௬-தேசமுமாள்வன், ௭-கோளுச்சமாகில் திரிலோகங்களையு முணர்ந்து திக்குவிஜயங்களும் பண்ணுவனெனவறிக.

இரவி யிருபாலும் நற்கோள்தேறிநிற்க அரசனாவன், பிறைமதிக்கிருபாலும் நற்கோள்தேறிநிற்க இராசஸ்திரீயாவள், ௨-ஆ மிராசியிற்றேறிய கோட்கள் நிற்கினும் நோக்கினும் தனச்செல்வன் ௩-ஆ மிடத்தில் நற்கோளுண்டாகில் சிநேகமுஞ் சகோதரப்பிரியமுமுடையவன், ௫-ஆ மிடத்தில் நற்கோள் தேறிநிற்குதல் நோக்குதல் செய்யில் வெகு தானதர்மங்களைச் செய்வான், ௧௧-ஆ மிடத்தில் தேறின கோட்கள் நோக்குதல் நிற்குதல்செய்யில் சகலமும் புகழுந்தேவன் கிரகங்களெல்லாம் அணியணியாய் நிற்கில் வற்றுதசெல்வன்.

குஜன் வுடன்பிறந்தார்க்கு வெள்ளி பெண்திறம், குரு புத்திருக்கு கல்விக்கு ராகுயிடத்திறம், ௫-புதன் கல்வி சனி மரணகாலங்களென்று சொல்க, இரவி நட்பாட்சி யுச்சத்தில் நிற்கில் நற்கோள் நிற்கிலும் பிதாவுக்கு நன்மை, மதி யின்னிலையாகில் மாதாவுக்குச்சுகமெனவறிக.

## இராசி ௧௨-லும் நன்மை தீமை அரியும்படி.

வுதையராசியின் பலன்கொண்டு ஜெனித்தபிள்ளைக்குச் சொல்க.

| | |
|---|---|
| ௨-ஆ மிராசி | சுற்றத்தாருக்கு தனஸ்தானம் |
| ௩-ஆ மிராசி | வுடன்பிறந்தார் |
| ௪-ஆ மிராசி | போசனம் வாகனஞ் சவுக்கியம் |
| ௫-ஆ மிராசி | மக்கட்டிறம் புத்தி கல்வி |
| ௬-ஆ மிராசி | பகைத்திறம் பிணித்திறம் |
| ௭-ஆ மிராசி | பெண்டீர் |
| ௮-ஆ மிராசி | மரணம் |
| ௯-ஆ மிராசி | குருநிலை பாக்கியம் |
| ௰-ஆ மிராசி | தொழில்நிலை யாகாதிகர்மம் |
| ௧௧-ஆமிராசி | செல்வமும் புகழும் |

௧௨-ஆ மிராசியில் நற்கோள் நிற்கினும் நோக்கினும் நட்பாட்சி வுச்சக்கோள் நிற்கினும் அவன்பொருள் அவத்துக்குச் செலடாமல்வி

## முதற்பாகம்.

தர்மச்செலவிடுவன், பகை நீசக்கோளும் பாபக்கோளும் பார்க்கில ச்சிலவுந் தெண்டமுங்கொடுப்பன், இன்னிலை வுதையமுதல் கஉ-இராசியும் நற்கோள் நன்மை, தீக்கோள் தீமை, அவரவர் ஸ்தானங்கொண்டு பலன்சொல்க, தீக்கோள் நாற்கண்டங்களிலும் பகை நீசமாய் நிற்கப் பிறந்தான்-சுகதேகியல்ல வெனவறிக.

### பிணிதுர்க்கருமம் சிரை ஆக்கினை தரித்திரம் அறியும்படி.

ஜெனிக்கும்போது நாற்கண்டத்திலுந் தீக்கோட்கள் நிற்க நற்கோள் பகை நீசங்களில் நிற்கப்பிறந்தார்கள் கொடியவசனராய் கொலை பாதகருமாய் தூஷணராய் எமனுக்காளாகி நரகங்களை அனுசரிப்பாரெனவறிக.

சனி ராகு கண்டத்தில் நிற்க குஜன் வுதிக்கில் சிறைப்படுவெனன வறிக.

சு-ஆ மிடத்தில் தீயர் பகை நீசமாக நோக்கில் வறிஞராய் நோயால் மெலிவரெனவறிக.

சனிவுதிக்கில் எ-ஆ மிடத்தே மதிநிற்கில் அவனுடன் இராகு கூடி நிற்கில் பொன்னேக்காணுகில் கைகால் தறிப்புண்பன், அறத்தையும் நற்றவத்தையும் மெலிவார் பெறும்பேறு இதுவாமெனவறிக.

### ஆக்கினையின் அவயவம்.

இரவியுடனே மதிநிற்கில் காலறுப்புண்ணும், மதியுடனே கேது நிற்கில் தலையறுப்புண்ணும், விருச்சிகம் மேஷத்தில் குஜன் நிற்க சனி வுதித்த ௬-ஆ மிடம் சு-ஆமிடம் புதனிற்க பிறக்கும்பிள்ளை கூனுமுடமுமாமென்க.

இரவிமுதலான கிரகங்கள் பகை நீசமான அங்கிசங்களில் நிற்கினும் பெருந்துயரமுடையவன், கஉ-ஆ மிராசியில் இரவி மதிநிற்கில் இரண்டு கண்ணும்போம், இரவி-வலக்கண், மதி-யிடக்கண், குரு நோக்கில்லையாற் சொல்வதெனவறிக.

### தரித்திரம் ஆயுதம் அக்கினி யிவற்றால் வாதை பரிகொடுத்தல் குரு புத்திரனுதலறிதல்.

ஜனிக்கும்போது சு-ஆ மிராசியிலும், அ-ஆ மிராசியிலுந் தீக்கோள் பகை நீசமாகநிற்குதல் நோக்குதல் செய்யில் நற்கோளில்லையாகில் தீராதமிடிகளாலுங் கருவிகளாலும் அக்கினிகளாலும் வெகு வாதைப் படுவரெனவறிக.

# சோதிட மர்மசாஸ்திரம்.

பாவக்கோள் நீசக்கோள் பார்க்கில் நிற்கப்பிறந்தான் பொருளெல்லாம் பகைவர்களும் இராஜாக்களுங் கொள்வாரெனவறிக.

குரு உதய இராசியையும் மதிலக்கினத்தையுங் குரு நிற்குதல் நோக்குதல் செய்யில் குரு புத்திரனுவானெனவறிக.

மேற்கூறியபடி அல்லாதது பிறர்க்குப் பிறந்தானெனவறிக.

உயிருடலைநோக்கின கிரகங்களாலே நிறமுஞ்சாதியுங் குணமுந்திசைகளும் முன்சொன்னபடி எல்லாங்கண்டு வகுத்துரைக்கவல்லன் பூலோகப் பிரம்மா, மதிநின்ற ராசியையாதல் ஜென்மராசியையாதல் குரு சுக்கிரன் புதன் இவர்களிலொருவர் நிற்கினும் நோக்கினும்-குரு புத்திரனும் பாபக்கிரகம் நிற்கினும் நோக்கினும் பாபகர்மியென்றறிக.

குரு சுக்கிரன் புதன் இந்த மூவரிலொருவர் நிற்கிலும் நோக்கினும் சர்வதோஷமும் நீங்குமென ஆன்றோர் கூறுகின்றனர்.

## நஷ்டஜாதகம் கணிக்கும் வகை.

கிரகத்தலைவரான இரவி ஆட்சியான சிங்கமுதல் ௬-ராசியும்வுயிரென்றும் பூர்வமென்னும் யிவ்வாறிலும் நற்கோள் நிற்கில்-வுயிர்சுகம் தீக்கோள் நிற்கில் வுயிரழிவு.

கும்பமுதல் ௬-ராசியும் வுடலென்றும் அமரபட்சமென்றுமறிக, இவ்வாறில் நற்கோள்நிற்கில்-சுகதேகியென்றும் தீக்கோள் நிற்கப்பிறந்தவன் பீடைதேகியா மென்றறிக.

## நாளும் ஓரையும் பிறந்தநாளும் அறியாதார்க்கு ஜாதகம் நிட்சயம் பண்ணும்படி.

ஒற்றித்த ஆண்ராசியாகிய மேஷம் மிதுனஞ் சிங்கந் துலாந் தனுசு கும்பமிவைகளுதிக்க வினவினபோது மேஷாதி ஆறுக்குளெண்க.

ஆண்ராசிமுன்னரையாகில் மேஷமுதல் மூன்றுக்குளெண்க, பின்னரையாகில் கடகமுதல் மூன்றுக்குளெண்க, மேற்படி ராசியை மூன்றுகூறுக்கி முதற்கூறுகில் மேஷம், நடுக்கூறுகில் ரிஷபங், கடைக்கூறுகில் மிதுனமென்றறிக, கடகமுதல் மூன்றுக்கும் இன்னெறியேகொள்க, முதற்கூறுனல் அந்தக்கூறுப் மூன்றுகூறுயீந்து அந்தக்கூறை ௨-ஆகயீய்ந்து அப்போவுற்றப் பட்சிக்காலென்றறிக.

பெண்ராசி வுதிக்கில் துலாமுதலாறுக்குளென்றறிக, மற்றதுன் சொன்னபடி நிச்சயம்பண்ணிக்கொள்வது அப்போதேறிநிற்கிற கிரகநிலையிலும் நோக்கினும் இன்னநாளென்றும் இன்னவாரமென்றும் இன்னமாதமென்றும் இன்னவருஷமென்றும் ஆகமநீதிகளெல்லாந் தெரிந்து திகையாமற் சொல்வதெனவறிக.

## இலக்கின பலாபலன்.

யாதாமொருவன் ஜெனித்தபோது.

சூரிய. இலக்கினத்தில் தேறிநிற்கில் சூரன் அபிமானி வுத்தமன்.

சந்திர. போகவான் தாட்சண்ணியசீலன்.

செவ். கோபவான் சூரன் அபிமானி சவுரியன் சபலன் வுத்தியோக முள்ளவன் கலகமுள்ளவன் ஆயுத அப்பியாசி வீரன் வியாதி யுடையவன் சேய் முதியகோபி.

புதன். வுச்சமாகநிற்கில்-ஞானி விருத்தன் புத்திவிஸ்தாரசீலன் கரவி யலட்சணமறிவன், நீசன் அஸ்தமனமானல் - அற்பவித்தை, பகைராசியில் நிற்கில்- அன்னியவித்தைபடிப்பன்,புதன் ஞானி.

குரு. உத்தியோகன் குலசிரேஷ்டன் சரீரமழகுடையவன் பாக்கிய ஸ்திரீயுடையவன் இராஜசேவையுடையவன் ஆத்மசவுக்கிய முடையவன் மனேபல முடையவன் தனதான்னியவிதியில் அயிஸ்வரிய முடையவன், வுச்சத்திலுதயமானல் பட்டாபி ஷேகத்தலைவன், அந்தணன் முத்தியன்பன் குலவேந்தன்.

சுக்கிர. அதிக செல்வமுடையன் சுகவான் பிரசன்னத்தை யுடையன் நயனகுணமுஞ் சரீரமழகியன் பந்துகுணமுடையன் புத்திர வர்த்தனையுந் தேவப்பிராமண பத்தியுமுடையவன் கிருஷிபலி ப்புள்ளவன் தான்சுகித்து வாழப்படுஞ், சுங்கனே யதிகசெல் வன்.

சனி. மனேவியாதியும் என்னேரமுஞ் சரீர ஆலசியமுடையவன் இவை க்ஷேத்திரத்திலாகுதல் நிற்கில் பிரபுக்கள் சன்மானிக்க வும் கிருமஜனம் ஜன்மானிக்கவும் வித்வானுமாய் பூமியுடைய வனுமாய் சனிமனரோகியா மாயுபீடைக்கொடியர் கடும்பிணி.

ராகு. விஷவியாதியுடையவன் நீசரோகி குஷ்ட வெளுப்புடையன் புத்திரயீனன் அங்கரோகி.

கேது. விஷரோகி சரீரமெலிதாயிருப்பன் பலயீனன் இவை நட்பா ட்சி வுச்சத்தில் வலிபெற்று நின்றகோளின் திறமறிந்து சொல் வதெனவறிக.

## இரண்டாமிடப் பலாபலன்.

சூரிய. உ-ஆ மிடத்தில் நிற்கில்-மக்களாலும் இராசாக்களாலும் பொரு ட்சேதமாம்.

சந்தி. வுச்சனுகிநிற்கில்-தனவான் பந்துசுகமும் புத்திரசுகமுமுள்ள வன் நல்லவசன முடையவன் வித்வானும், பகைநீசமாகில்-அற்

பபலம், நட்பாட்சியாகில் பரதாரியப் பிரவிர்த்தியாம், ஸ்திரீ சொல் கேட்பன்.

செவ். கடுஞ்சொல்லுடையவன் பலவிதத்திலுந் திரவியநாசன் கோபவான் தந்தரோகி கண்டித்துச் சொல்லுங் கலகப்பிரியன்.

புதன். நல்லவசனஞ் சொல்லவல்லவன் தனவான் சுபத்திரவியமுடையவன் வாகனயுத்தன் கணக்குக்காரியங்கள் சொல்லசமர்த்தன்.

குரு. வெகுசெல்வன் தனவான் தியாகி வெகு சுவாத்தியமுடையவன் சீமான் வாகனமுடையவன் இராஜப்பிரியன் சொல்லும்வாக்கு பலிக்கும் ஆயுசுடையவன் வீரியமுடையவன் புத்திமான் தான்சுகித்து வாழப்படும் புத்திரமித்திர களத்திர சுகமுடையவன்.

சுக்கிர. வாசாசித்தியுடையவன் வெகு தனதானிய முடையவன் கிருஷிவிர்த்தியுடையவன் பிரசித்தியுடையவன் பரயாத்பசீலன் கதை காவியஞ்சொல்லவல்லவன் வித்தியாப்பியாச முடையவன்.

சனி. அக்குடிக்குக் கலெவுண்டாந் திரவியநாசம் விநோதஞ் சொல்லவல்லவன் அன்னியதேச சஞ்சாரன் வுபமானங்களை கூட்டிச் சொல்லுவன்.

ராகு. விஷவாக்குடையவன் பிரத்திஷ்டஞ் சொல்லுவன்.

கேது. சம்பிரமிக்க வார்த்தைசொல்லுஞ் சபலன் துஷ்டவசனன் எல்லாரையுந் தூஷிப்பனெனவறிக.

## மூன்றுமிடப் பலாபலன்.

சூரிய. ௩-ஆ மிடத்தில் நிற்கில் புத்திமான் சவுரியன் பிறுதாக்களுடனே சினேகமாயிருப்பன் கண்டபட்சணங்கள் பொசிப்பன்.

சந்தி. பிராதாக்களுடையவன் சூரன் பலர் திரவியஞ் சேர்க்கவல்லவன் வித்தை பரிஞானம் பண்ணுவன்.

செவ் சூரன் வுடன்பிறந்தார்மேல் கலகப்பிரியன் கலகபோசனமுஞ் சுடசுடப் போசனமும் பண்ணுவன்.

புதன். பிறுதுருகுணமுடையவன் பிரபலன் சுவாகன் சகலமும் அனுஜீவிக்கும் அற்பவித்தை யுடையவன் அன்னியசங்கார கர்த்தன்.

குரு. சவுபாக்கியன் பிராதுரு சுகமுடையவன் இலட்சுமீகரமுடையவன் இராஜசேவை யுடையவன் தானினைத்தது சாதிக்கவல்லவன் பரிபூதன் லோகவசியமுடையவன்.

சுக்கி. புத்திரயீனன் புரபுகுணமுடையவன் கிருஷிபண்ண வுச்சாக முள்ளவன் யினயபட்சணமுள்ளவன்.

சனி. சுகாத்மா சுகஸ்திரீயையுடையவன் தேகமு மாத்மமுஞ் சுக முடையவன் பரிஞானமுடையவன் தான் சுகித்துவாழப்ப டும் தனதானிய வர்த்தனையுடையவன்.

ராகு. முதரோகி தீர்க்கவசனி சபலன பிராதாக்களுடன் இதங்கு ரைச்சலுடையவன் ஸ்ரீமான்.

கேது. லோகப்பிரியன் பலவான் பந்துடையவுன் பிருதுருக்கங்குறை ச்சலுடையவன் இவையெல்லாம் வலிபெற்றகோளின் றிறமறி ந்து சொல்வதெனவறிக.

## நான்காமிடப் பலாபலன்.

சூரிய. ச-ஆ மிடத்தில் நிற்கில் பந்துசுகங் குறையும்.

சந்தி. தாய்க்கினியவன் தான்சுகித்து வாழப்படும் மாத்திரை யறிந்த வன் பந்துசுகமுடையவன் பரிசனசுகமுடையவன் வாகனு ரோணன் சுகங்களை அனுபவிக்கும் கிருஷிபண்ணவல்லவன்.

செவ். மேதகன் சுகமில்லாதான் சுகிதன் பரக்கிரகவாசி சுகங்களை யனுபவிப்பன்.

புதன். சவுபாக்கியன் பண்டிதன் சுபாவீகவான் இருஜசேவையுடை யவன், கிரகவர்த்தனை யுடையவன் புத்திமான்போகவான் வா கன யுத்தன் பந்துள்ளவன்.

குரு. குலநாயகன் சுசிதன் புத்திமான் போகவான் இருசசேவையு டையவன் கிரகவர்த்தனையுடையவன் தனஈனன்.

சுக்கி. சுகமுள்ள செல்வமுடையவன் புத்திரமித்திர களத்திர சுக முடையவன் வாகனயுத்தன் கிரகமுடையவன்.

சனி. அங்கரோகி அற்பசுகி சஞ்சலவிதயன் ஞாவியாதி கனதன யீனன்.

ருகு. ரோகி தரித்திரன் புத்தியீனன் பந்துசுகமில்லான் துக்கித வான் எல்லாரோடு மிதமிலான் விஷரோகி.

கேது. கலகப்பிரியன் விஷரோகி பலயீனன் மாத்திரரோகமுள்ளவன் யிவையெல்லாம் கிரகவலியறிந்து சொல்வதெனவறிக.

## ஐந்தாமிடப் பலாபலன்.

சூரிய. ரு-ஆ மிடத்தில் நிற்கில் பிதாயீனன் பந்துசுகமும் மனேசுக மில்லாதான் கிரகசுகம் அற்பம்.

ந்சதி. மாதாசுகமில்லான்.

செவ். நன்றியில்லாதான் புத்தியீனன் சுசீலன் மனதில் ஒருநாளுஞ் சுகமில்லான்யாவருடனும் பிரீதியில்லான் துவேஷமுடையன்.

புதன். சற்குணன் ஆத்மஞானி நிருபசேவிதன் வித்வான்சகலகலை வித்தையுங் காவியாதிகளுக்கும் வல்லவன்.

குரு. புத்திமான் ஆசாரகித்தியுடையவன்.

சுக்கிர. மனோபலமுடையவன் புத்திரமித்திர களத்திர சுகமுடையவன் அறிவுள்ளவன் மனதழகியன் கலகப்பிரியன்.

சனி. புத்தியீனன் புத்திரயீனன் சண்டாளசித்தன் சுன்சேயிலான்.

ராகு. கொடியவசனன் மகவிலான் மனதிலொருநாளுஞ் சுகமிலான் சுகர்மன் ஜனத்துவேஷமுடையவன் விஷசுபாவமுள்ளவன் ராகுகொடியன் மகவிலான்.

கேது. வுதாரன்ஞானி சபலன் சுவாமியைத்துதிக்க வல்லனெனவரிக.

## ஆறுமிடப் பலாபலன்.

சூரிய. சூ-ஆ மிடத்தில் நிற்கில்-பிரபலன் அதிக பெலவான் ஸ்ரீமான் குணவான் பிரபு சேவிதன் சொல்லுமாரிற்ற பனன்-பிரபலன்.

சந்தி. சஞ்சலரோகி அக்கினிபலங்குறைந்து சரீரம் அழகியதாய் ஆலசியமா யிருப்பான், சோமன் சஞ்சலரோகி.

செவ். நல்ல குணமுடையவன் சர்வகாரிய லாபமுஞ் சத்துருசங்காரன் புத்திராதீர்க்கமுடையவன், செவ்வாய்-நலன்.

புதன். விவாதசீலன் வியாதியஸ்தன் நிஜவாக்குச்சொல்லும் பரிபூதனவெல்லுமால் பிணி.

குரு. கொடியன் பரிபூதன் பலயீனன் சத்துருஜெயமும் லோசதீபமும் அற்பன் வியாழமது பொல்லான்.

சுக்கிர. பாரியர்சுகமும் பந்துசுகமும் அற்பன்வியந்த நீரசத்துவிகன்.

சனி. விஷசீலன் பலரைநிந்திப்பன் சிலகம் மண்ணுவன் புத்திரமித்திர களத்திரமசமும் பிரமாணமுடையவன் சுபதேகியின்பலன் இருஜாக்களாலும் பிராமணர்களாலுஞ் சன்மானிக்கவும் வல்லன் காரியவல்ல சம்பன்னன்.

ராகு. மாருப்பிணியுள்ள குஷ்டரோகி ராகு மாருப்பிணியன்.

கேது. அனுகூலசத்துரு, கிரகங்களின் வலி கண்டு சொல்வதெனவரிக.

## ஏழாமிடப் பலாபலன்.

சூரிய. எ-ஆமிடத்தில் நிற்கில் இருபாரியர் சிரியதாயாருடையவன் இசைந்தவேழிற் கதிர்சிறுமாதுளன் பரசுகதூஷி அகன்றவன் கவிபாட வல்லவன் வியாதியஸ்தன் மனோபலமில்லாதவன்.

சந்தி. புத்திரமித்திர களத்திரசுகமும் அர்த்தசித்தியுஞ் சுகப்பிரதாபமுஞ் சௌபாக்யமுமுள்ளவன் இந்துவுக்குச் சந்தானசமர்த்தன்.

செவ். கோபமுடையவன் கடினப்ரபலன் துரிதன் கவியாதியுடையவன் தீய்க் கசந்தகோபி கடினன் பிரபு.

புதன். மிர்துவசனன் புத்ரமித்ர களத்ரசுகமுள்ளவன் பிதாவினும் அதிகன் ஸ்திரீசொற்கேட்பவன் யிருபாரியர் சித்தியுடையவன் அறிவுள்ளவன் மால் கனிந்தசொல்லன் கவலைவல்லவன்.

குரு. குருவிசுவாசன் களத்திரசுகமுள்ளவன் பிதாவிலதிகன் கீர்த்திமான் பிரதானி பகையுள்ளவன் ஞானி மந்திரி யுகந்தமாதவன் செல்வர்புராதனன் வுத்தமன்.

சுக்கிர. புத்திரசுகமுள்ளவன் பாக்கியமுடையவன் பிரபலன் சினேகிதபுத்தி விஸ்தாரசீலன்.

சனி. கபடன் புத்தியீனன் ஸ்திரீசாவகாசமுள்ளவன் பாபகர்ம்மி விருதஸ்திரீயையுடையவன் சனி புத்திரவீனர்.

ருகு. விஷரோகி கண்ணில் ரோகமுடையவன் தந்தரோகமுள்ளவன் வுதாரன் புத்ரயீனன் பாம்பு தந்தரோகி கொடியன்.

கேது. பாதரோகி நீலதாரமுடையவன் தேகரோகி விஷகோசமுடையவன் கேது நோயையடைவர் இவையெல்லாங் கிரகபலன் அறிந்துசொல்வதெனவறிக.

## எட்டாமிடப் பலாபலன்.

சூரிய. அ-ஆமிடத்தில்நிற்கில் சுகமிலான் தனயீனன் விதவன் சரீரத்தில் வியாதியுடையவன் இருபாரிசித்தியுடையவன் மனோபலமில்லாதான்-ஆருமெட்டி வருணன் சுகமிலான்.

சந்தி. அழகுடையவன் பிரசித்தன் மாதுறுவேஷி அமுதவிந்தழகன் பலவீனன்.

செவ். பலயீனன் புத்திரயீனன் குணலட்சணமுடையவன் ரோகி கலகபாரியர் சித்தியுடையவன் சரீரமெல்லியன் தூஷகன் நீசகர்மி-சேய்லோக விண்கலன்.

புதன். நல்லமனதுடையவன் மனோபலமில்லாதான் தூதுவனலன்.

குரு. நீசமனமுள்ளவன் பரிபூதன் வசனத்வேஷி அற்பபுத்திரவான் ஸ்திரீசித்தியுடையவன் லோபியந்தணன் நீசமனதுளன்.

சுக்கிர. பிரபு சேவிதன் தனவான் புத்ர மித்ர களத்ர சுகமிலாதான் மனோபலமுடையவன் போகவான்-பிரபுசேவிதனுகும்

சனி. புத்திரயீனன் ரோகி போசனசவுக்கிய மில்லாதான்-சுன்புத்திரயீனன்.

ரூகு ஞானி விஷசீலன் பணி ஞானி.

கேது. அதிஷ்டமில்லாதவன் பாபகர்மம் அதிகமாயுள்ளவன் செபதபவர்ச்சிதன் புத்ரமித்ரருள்ளவன் சவுரியமுள்ளவன் தர்மவான் பிரீதிவலலவன் இப்படி நல்வினைக்கீடாய் நற்கருமங்களைச் செய்து திருவடிக்குரித்தாவரெனவரிக.

## ஒன்பதாமிடப் பலாபலன்.

சூரிய. கூ-ஆ மிடத்தில் நிற்கில் குரூரதமுடையவன் கெறுவி கண்டகன் கோபி பிரியன் புத்ரயீனன்-துதிக்குமொன்பதில் பானுகரோகியாம்.

சந்தி. புண்யவான் பாக்கியமுடையவன் புத்ருடையவன் லோகப்பிரியன் சோமர்-புண்ணியர்.

செவ். பிருணிகளைவதைக்கும் பாபகர்மி அதிஷ்டமில்லாதான் வெகுசனமுடையன் புத்திவான் அதிகமுந் தனவான் குருசிந்தையுடையவன் துவேஷமுடையவன் கலகப்பிரியன் செவ்வாய்-கொல்லும்பாவி.

புதன். தபசுடையவன் தர்மவான் வித்துவான் புத்ரமித்ரசுகமுடையன் தேவதாபத்தியுடையவன் அர்த்தலாபமுடையவன் ஆசாரமுடையவன் மால் மதிக்குதவாதவன்.

குரு. சகலகலாப்ரவீணன் நல்லஸ்திரீயையுடைவவன்பொன்-சகலாகலன்.

சுக்கிர. செல்வமுடையவன் ஞானி புத்ர களத்ர சுகமுள்ளவன் சற்சனசேவையுடையவன் தர்மத்தில் மனதுடையவன் தேவப்பிராமணபத்தியுடையவன் வஸ்திராபரண பூஷணமுங் கோவர்த்தனமுமுள்ளவன் மாரி செல்வன் றருவன்.

சனி. தர்மயீனன் சுகங்குறைந்தவன் குருவுபகாரசித்தியுடையவன் அரிமகனிதந்த முபகாரிசுகங்குறை.

ராகு. விஷரோகமுடையவன் விரதசீலன் வுடன்பிறந்தார் குறைந்தவன் இராகுவாகிற் கொடியனிருவினை விதிக்குரித்தாங் கருமங்கள்செய்யும்.

கேது. அறிவுள்ளவன் ரோகவியாதியுள்ளவன் சத்பாரியர் சித்தியுடையவனுகத் துதிக்கும் கேதுவே தோகைபாகருக்கன்பன் றயாளனுகும் இவையெல்லாங் கிரகபலனரிந்து சொல்வதெனவரிக.

## பத்தாமிடப் பலாபலன்.

சூரிய. ய-ஆ மிடத்தில் நிற்கில் வேந்தராய் தனவானுமாய் தேவதாபத்தி குருபத்தியுள்ளவனு மாயிருப்பன்-விளக்குக்குரியன் பத்தினில் வேந்தரும்.

சந்திர. புத்திமான் சூரன் தான்சுகித்துவாழும்-மிக்கவந்து விருசசம் பன்னர் சேய்.

செவ் பூமிஆளுவன் பிரதானி சூரன் சுகவான் களங்கில் பூமிசமைப்பன் பிரதானியாங் கருணன் வாகனவாத்திதனுங்.

புதன். சிற்பவித்தையும் வித்பாபரஞானமுமறிகுவன் அறிவுடையவன் சத்யவாசகன் காவியகணிதாதி வல்லவனுமாய் குசலவித்தையுடையவனுமாயிருப்பன்.

குரு. செல்வமுடையவன் அபிமானி குலவித்தை பரிகரிக்கும் புத்திவல்லவன் புத்ரருண்டாஞ் சுகவான் தனவான் வாகனமுள்ளவன் சுபத்திரவியமுடையவன் இராஜசேவையுடையவன் பிரதாபமுடையவன் குருத்துளங்குசெலவன் சுகஜீவி.

சுக்கிர. சூரண அபிமானி கீர்த்திமான் புத்திமான் விர்த்தியுடையவன் தனவான் பிரவிர்த்தியுமாய் அதிகசுகமும் அயிஸ்வரியமுடையவன் சுக்கிரன் சூரன்.

சனி. தனவான் சூரன் பிரபுசேவையுடையவன் பிற்புத்தி முடிக்க வல்லவன் தனந்தேடவல்லவன் மந்தன் தனவான்.

ராகு. நீசகர்மி குசலன் இரணமிதன் புத்திரசுகமில்லான் ராகுவேற் களங்குகன் மனீசன்.

கேது. வுச்சாகவல்லவன் ஞானப்பெருஞ்செல்வன் கேது ஞானவான் இவையெல்லாம் கிரகபலனரிந்து சொல்வதெனவறிக.

## பதினொன்றாமிடப் பலாபலன்.

சூரிய. கக-ஆ மிடத்தேநிற்கில சகலபாக்கியன் கீர்த்திமான் தனவான் புத்திரவர்த்தனையுந் தேவபிராமண பக்தியுடையவன் போகவான் ஆளடிமையுள்ளவன்-காட்டுமேபதினொன்றரிபாக்கியன்.

சந்தி. சகலகுணசம்பன்னன் தனவான் புத்திமான் புத்திருடைய வன் ஆளடிமையுண்டாயிருக்கும்-கருதுசோமன் கலகசம்பன் னர்.

செவ். தனவான் பரிபூதன் பிரபலன் தான்யம்வர்த்திக்குந் தான்சுகி த்துவாழுஞ்சூரன் புத்திரசுகமில்லான் மனதிலொருநாளுஞ் சுகமில்லான்-சேய்கூட்டுமே மிகுசெல்வன்.

புதன். தனவான் பிரதானி அறியும்யோகங்கள் ஆசாரங்கள் சொல் லும் பலஜாதி அர்த்தமுஞ் சித்திக்கும் புத்ரமித்ருதிகளுண் டாம் புத னலன்

குரு. ஆசாரியனும் பலஜாதி அர்த்தமும்வரும் புத்திரரும் ஆளடி மையும்வரும் வாகனமுடையவன் பிரபுசம்பந்தன்-குருவுசா னன் பெருஞ்செல்வன்.

சுக்கி. ஆளடிமையுடையவன் சுபத்திரவிபமுடையவன் வெள்ளிவெ ண்கலம் வர்த்திக்கும் மனோசுகமுந் தன்னுடையகாரியம் முடி க்கவல்லன் சுக்கிரன்னுட்டு மாண்டுமமைச்.

சனி. தனவான் ஆளடிமையுள்ளவன் சனி வாகனன்.

ருகு. மர்மி சபலன் தர்மமில்லாதான் புத்திரரில்லாதவன் தீரன் ருகு மர்மியாம்.

கேது. லோகப்பிரியன் அர்த்தவான் சக்திகுறைந்தவன் (கேதருட்சீ லனும் பூட்டுமே நவக்கோடேறி நின்றிடம் புனிதர்தாளைப்புக ழுமே.) கக-ஆ மிடத்தேறி நின்றகோளின் பெலனறிந்து சொ ல்லுவதெனவறிக.

## பனிரெண்டாமிடப் பலாபலன்.

சூரிய. கஉ-ஆ மிடத்தில் நிற்கில் நயனரோகமுடையவன் குணங்களு றைஞ்சிருக்கும் விகலன் சூத்திருதி வெறுக்கைபுகழுமார்த்தா ண்டர்க் கீருறுகண்கணை.

சந்திர. அங்கயீனன் என்னேரமும் பசித்திருக்குந் துவேஷமுடைய வன் பரிபூதன்-புரிமதிக்கங்க வீனரும்.

செவ். ரோகபாரியர் சித்தியுடையவன் துக்கிதன் நயனவிகாரி சுய ஜாதிகள் வெறுத்திருக்கும் அசனசயன சுகமில்லாதவனுமாம் அங்கியே நிசமூம்பாரிநோய்.

புதன். லோகம்வெறுக்கவுங் கிரகசுக மாலசியமுடையவன் பாரியர்சுகி தன் வித்யாப்பியாசமில்லாதவன் ஆசாரக்கிருதன் துவேஷமு டையவன் அங்கயீனன் புந்தி லோகப்பகை.

குரு. வழக்கோரஞ்சொல்லுவன் பாபகர்மி அழிவேறினவன்பிரணஸ்தான இராஜவயிரமுடையவன் போகம் வெறுக்கவுஞ் சுயஜாதி பட்சமில்லாதவன் நெடியபொன் வழக்கோரஞ்.

சுக்கிர. தான்சுகித்துவாழ்வன் தேகசுகமுடையவன் இஷ்டான்னமுடையவன் குலவித்தை படிக்கவல்லவன் சுங்கனலன் மகிழுநன்மை.

சனி. முகரோகி விவாதசீலன் பரிபூதன் சனி முகரோகியம்.

ராகு. வழக்கோரஞ்சொல்வன் அழிவேறியிருக்கும் அன்னிய கிரகபரிபாலன் மத்தர்பூரணமே வழக்கோரமாம்.

கேது. பலவான் தேகவாதி அழிவேறினவன் சயனசுகமில்லான் நிகழுங்கேது தேகவாதி இப்படி இந்த கஉ-இராசியிலும் நவக்கிரகங்கள் நட்பாட்சியுச்சத்திற் தேறிநின்றகோளின் மகாதிசைகாலச்சக்கரம் அஷடகவர்க்கு விந்துகளேறின இராசிகளில் பெலன்பெற்ற கிரகங்கள் வருகிறபோது நன்மைகள் தரும். பகை நீசமாய் அஸ்தமானால் அந்தத்திசை காலச்சக்கரங்கள் வருகிறபோது தீமையுண்டாக்குமெனவறிக.

கஉ-இராசிபலன் முற்றிற்று.

---

## உச்ச பலன்.

### விருத்தம்.

ஆரேனுமூவருச்ச மாகிலமைத்தோளீ
  ரணுகுமரசன்கூட மூவருச்சமாயின்
வாரேறுமுலைமடவாய் மந்திரியுமாவன்
  மற்றுமொருமூவர் நீசத்தானமருவில்
பாரேசர்தனிலொருவர்க் கேயடிமையாவன்
  பகர்மூவரத்தமனம் பாலனுயிர்க்கரிட்டம்
சீரானசசிக்கிருபால் பாவர்கடாம்வந்து
  சேரிற்கத்திரியோகம் சேயுடனேமரிக்கும்.

மரியாதியுடனிரண்டு கிரகமுச்சமாகில்
  மன்னியோசாங்கிசையில் வந்திருக்கின்மன்னும்
பிரியாதவிவரிருவர் மித்துருவேயானால்
  பெருமைசெறிமுழுராஜ யோகமெனப்பேசு
பரிவேயில்லாதபகை யானலற்பமதாம்
  பாக்கியமானுமுச்ச மேபடைத்தசுபக்கோன்

தரியாதநீசோங்கி சத்திலற்பயோகம்
தாழ்வானநீசருச்சந் தானேநிற்பலனே.

---

# இலக்கின பாவகம்.

## செல்வவான் அழகுடையவன் அறியும்படி.

சிறந்தசந்திர சூரியரெட்சியிற்
சேர்ந்திருக்கப் பகலுமிரவிலும்
பிறந்தசேய்மகா பாக்கியயோகமாம்
பிறக்கில்ரெட்டையி லின்னெறிமேகமே
நிறைந்தமேமபாதி முக்கோணகேந்திர
நேத்திரலாபஞ் சுபர்நோக்கத்தேறினுங்
குறைந்தமெய்யன்றி வீமேசர்க்கன்பராய்க்
குவலயத்தோர் புகழக்குலவுமே.

இலக்கினபாவத்தில் பூர்வபட்சத்து மதியும் இரவியுங்கூடி நிற்க ஜெனனகாலம் பகலிலானால் இதுமகா பாக்கியயோகம் இதில ஜாதக மானவன் மகாபாக்கியவானும்.

இப்படி இரவி மதி ஒரு ருசியிற்கூடி அந்தருசி இரட்டித்தருசி யுமாய் அதுவே இலக்கினமாக இருக்காலத்தில் ஜெனனமானால் அது வும் மகாபாக்கியயோகம்.

தேகாதிபதி நட்பாட்கி வுச்சத்திலாதல், சுபக்கிரகருசியிலாதல், தேகலக்கினத்திலாதல், தனலாபகேந்திர திரிகோணங்களிலாதல் இரு க்கினும் இப்படிக்கொத்த ருசியாதிபதியோடே இந்த தேகாதிபதி கூடியிருக்கினும் அவர்கள் நோக்குண்டாயினும் இவன்தேகம் அவய வங்களெல்லாம் நன்றாய் குவலயத்தோர் புகழக் குலாவுவர் சீமான் கு ணரூபர்.

தேகமாகிய மதியுடனே இவனுடைய தனலாபகேந்திர திரிகோ ணர்கள் கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் இவன் தேகசுகத்திலே சீமானுயிருப்பன்.

இலக்கினத்திலேதான்தேகாதிபதியோடேதான் எந்தக்கிரகங்கள் கூடியிருந்ததோ அந்தக்கிரகங்களினிடகுணமும் ரூபமும் வித்தையும் புத்தியும் அவராங்கிசத்துக்குச்சொன்ன வூர்செனங்களுடையனுமாய் அந்தந்தக்கிரகங்களினிடகுணமும் ரூபமும் அந்தந்தக்கிரகங்களின் அ வத்தைக்கேடானபலமும் அந்தந்தக்கிரகங்கள் நட்பானல் மித்துருத்த வமும்பகையானல் சத்துருத்தவமும் அவரவர்கள் சரகிரகமும் ஸ்திர

கிரகமும் அவர்களாயுசு லாபங்களெல்லாம் பிறந்தகாலத்தில் இப்படி காண்பதெனவறிக.

### பொதுலட்சண பாவகவிவரம்.

சீர்பெருஞ்சென்ம லக்கினத்ததிபர்
சேர்ந்தினி திருந்திடுமந்தப்
பேர்தருபலன்கண் மெய்நிறஞ்சொரூபம்
பெருநிதியுதாமத் தகமும்
ஏர்பெருமுபாங்கஞ் சிந்திதங்கிலேச
மிலக்கணங் கீர்த்திமூர்த்திகளும்
பார்தருஞ்சுபசந் தோஷமும்வயதும்
பகர்தனுத்தானமென் றுரைக்கும்.

வேறு.

பகருலக்கினதிபன் பத்திரெண்டினும்
வகையினிற்க வலதுலாபாதியும்
யிகலிற்பத்தி லிரண்டிலிருந்திடத்
துகளினலைந்திற் றோன்றுஞ்சுகமதே.

வேறு.

செப்பியதோர்லக்கினதி பலவானகில்
சேர்ந்துசுபருடன்கூடி ஆட்சிவுச்சம்
தப்பிலாபாக்கியாதி கர்மாதியிருவர்
தான்கூடியிருந்திடவுந் தாழ்விறுது
செப்பினேன்மூலமடவா ரங்கீர்த்தி
சிரப்பாகதன தான்ய முடையோனாகும்
அப்படியேவயதும் பூரணமேயாகும்
அறிந்தபடியினனங்கே ளறிவீர்மானே.

---

## இரண்டாம் பாவகம்.

### நல்லதிருஷ்டி தனவான் அறியும்படி.

இலக்கினத்துக்கு உ-ஆ மிராசி தனஸ்தானங் குடும்பஸ்தானம் வாக்குஸ்தானம் நேத்திரஸ்தானம் இவைகளாம்.

இந்த உ-ஆ மிருசியாதிபதியும் உ-ஆ மிருசியிலிருந்த கிரகமுந்த னலாபகேந்திர திரிகோணங்கள்... ...பாட்சி யுச்சத்திலிருந்தாலும்

இவர்கள் பார்வையுண்டானாலும் இவர்களாட்சியிருந்தாலும் இவருடன் கூடியிருந்தாலும் ஜாதகனுக்கு திருஷ்டி நன்றாயிருக்குந் தனவானுமாயிருப்பன்.

எந்தெந்தக்கிரகங் கூடியிருந்தாலும் இந்த ஸ்தானாதிபதியாருடைய ஆட்சியிலிருந்தாலும் யாருடைய திருஷ்டியுண்டானாலும் அவர்களும் நட்பாட்ச்சி யுச்சத்திலிருந்தால் வெகுதனப்பிருப்தியுண்டு தன் கண்ணினாலே சகல சந்தோஷமுங் காண்பர்.

## நிர்ப்பாக்கியன் நேத்திரரோக மரியும்படி.

இந்தஸ்தானாதிபதி சு-அ-கஉ-லேயிருக்க அவனிருந்த இராசியாதிபதியும் சு-அ-கஉ லேயிருக்க ஜெனித்தவன் நிற்பாக்கியனென்று சொல்லப்படும்.

தனஸ்தானாதிபதி நீசாஸ்த மனமாயிருந்தாலும் பகை நீசக்கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இராசியந்தத்திலே க்ஷீணனாயிருந்தாலும் இப்படி க்ஷீணக்கிரகங்களுடனேகூடி இப்படிக்கொத்தபார்வையுண்டானாலும் அவன் நேத்திரரோகியாம்.

தனக்கிரகமாகிய குரு தேறிநிற்கினும் நோக்கினும் இதர பந்துக்களாலே வெகுசனமுண்டாம்.

### விருத்தம்.

வுரைத்திடுஞ்சவுபாக்கியந் தனங்குடும்ப
மொளிசேறி நேத்ரம்வித்தை
தருப்பெருஞ்செல்வமுடன் புகல்வாக்கு
சாத்திரக்கேள்விகண் முற்றும்
விரைத்தெழுகமன முகமுமுத்தேக
மேம்படவிரும்புசெம் பொன்னும்
நிரைத்திடுநவரத் தினமிரண்டிடத்தி
நிலைமைகண்டுரைசெய்வர் நின்றே.

உ-ஆ மிராசிவுடையவன் சு-ஆ மிடத்திலிருக்கில் இவன் தனத்தை சத்துருக்கள் கொள்வர்.

### சுக்கிரன் உ-ல் இருப்பதற்கு பலன்.

பொங்கவெண் பூமிலாபம்
புகழ்ங் ... ம்.

# மூன்றும் பாவகம்.

—()—

நின்றிடுமூன்று மிடத்தினிற்கு
திருப்பாலுற்றிடும் பலன்கள்
வென்றிகொள்போக மடிமையாள்கரணம்
வீரியஞ்சத்துவந் துணைவர்
யொன்றிடாதணிய காதுநோய்கன்ன
பூஷணம்புசித்திடுங் கலன்கள்
துன்றுவிக்கிரமஞ் சேவகாவிருத்தி
சூழ்தயிரியங்களுஞ் சொல்வர்.

## சகோதரலாபஞ் சகோதர நட்டம்.

சகோதரஸ்தானமான ௩-ஆ மிடத்ததிபதிதான் சகோதரகாரகனாகிய குஜன் தான் தனலாபகேந்திர திரிகோணங்களிலே நட்பாட்சியுச்சம்பெற்று நிற்கினும் இப்படிக்கொத்தஸ்தானாதிபதியோடேகூடியிருந்தாலும் அவர்களாட்சியிலிருந்தாலும் அவர்கள் பார்வையுண்டானாலும் இச்சாதகனுக்குச் சகோதரலாபமுண்டு.

இந்த சகோதரஸ்தானாதிபதி ௬-அ-௧௨-லே அஸ்தமிச்சபகைநீசயிராசியிலேதான் க்ஷீணக்ஷேத்திரங்களிலேதானிருந்தாலும் இந்தஅதிபதிகளுடனே கூடிவிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் இச்சாதகனுக்குச் சகோதரநட்டமுண்டாம்.

## பெண் சகோதரம்.

சகோதரயிராசி அதிபதிக்கிரகமுமாய் அந்தயிராசி பெண்ராசியுமாய் அதிலே அந்த அதிபதியிருந்தாலும் அல்லது சுபக்கிரகத்தோடே கூடியிருந்தாலும் இவனிருந்த யிராசிக்கதிபதியும் ஸ்திரீகிரகராசியிலேயிருந்தாலும் ஸ்திரீகிரகம் நட்பாட்சியுச்சமாய் நோக்கினும் ஸ்திரீகிரகங்கள் இந்த அடைவே அதிபதிக்குண்டானால் இந்தப் பிள்ளைக்குப்பிறகு பிறக்கிறது பெண்ணென்றுகொள்க.

இப்படி ஸ்திரீகிரகம் ஆட்சியிராசியிலே அந்தயிராதாவுக்கு அதிபதியிருக்க அல்லது புருஷகிரகத்துடனே கூடியிருந்தாலும் அவனிருந்த இராசியாதிபதி பிரபலனாயிருந்தாலும் புருஷகிரக அம்கிசம் ஸ்திரீயாய்ப்பிறக்கும் இவைகளெல்லாம் கிரகவலியறிந்து சொல்லவேண்டியது.

## சகோதரமின்மை. சகோதரவடிவு.

இரவி பிருதுருஸ்தானுதிபதியுடனேகூடி அஸ்தமனமாகி அந்தப்பிருதுருஸ்தானத்திலே யிருந்தாலும் இவனிருந்த யிருசியாதிபதி ௬-௮-௧௨-ஆ மிடத்திலே அஸ்தமன பாபட்சீண ஙீசராங்கிசத்திலிருந்தாலும் இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இவர்கள் பார்வைவுண்டானாலும் இச்சாதகனுக்குப்பிறகு பிள்ளை யில்லையெனவறிக.

இப்படியிருந்த கிரகந் தனலாபகேந்திர திரிகோணஞ் சேர்ந்திருந்தால் இச்சாதகனுக்குப்பின் சிலநாளில் பிள்ளையுண்டாம் பால்லியத்திலே மரித்துப்போமெனவறிக.

## சகோதரலாபம் ஆண்சகோதரம் சகோதர சங்கை.

௩-ஆ மிடத்ததிபதி சுபக்கிரகமுமா எவ்வன்னருய் நட்பாட்சியுச்சத்திலிருந்தாலும் இப்படி சகோதர கிரகங்களுடனே கூடியிருந்தாலும் இவர்களிட ஆட்சியிருசியிலே இவர்கள் திருஷ்டியுண்டானாலும் இவர்கள் தனலாபகேந்திர திரிகோணத்திலிருந்தாலும் நட்பாக நயனத்தோடு பார்க்கினும் இச்சாதகனுக்கு சகோதரலாபமுண்டு தீர்க்காயுசுண்டாய் தனவானுமாயிருப்பன்.

இந்தப்படி பிருதுருபதி எத்தனை கிரகத்துடனே கூடியிருந்துதோ அத்தனைபேர் சகோதரமுண்டெனக.

அப்பொழுது கூடியிருந்த கிரகங்களில் ஆண்கிரகங்களெல்லாம் ஆணென்றும் பெண்கிரகங்களெல்லாம் பெண்ணென்றும் இவர்கள் தீர்க்காயுசண்டாயிருப்பரெனவறிக.

## ஆண்சகோதரந் தீர்க்கசகோதரம் வெகுசகோதரம்.

௩-ஆ மிருசியாதிபதியும் பிருதுருகாரகனுகிய குஜனும் பிருதுருஸ்தானமாகிய ௩-ஆ மிருசியில் கிரகங்களுண்டானாலும் இந்த மூன்றுபேருடைய ஆட்சியிருசிகள் புருஷருசியுமாக இந்த மூன்றுபேரும் புருஷக்கிரகமுமாய் இவர்கள் நட்பாட்சியுச்ச யெவ்வன்னருய் தனலாபகேந்திரத் திரிகோணங்களிலிருக்க இப்படிக்கொத்த கிரகத்துடனே கூடியிருந்தாலும் இவர்களுடைய ஆட்சியிருசியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் இச்சாதகனுக்குப்பின் பிறக்கும் பேரெல்லாம் புருஷரும் சகல பாக்கியங்களுள்ள பிருதாக்களுண்டு.

இம்மூவருமிருந்த இருசியாதிபதிக் கிரகங்களுடனே இந்தக்கிரமத்திலிருந்தால் இச்சாதகனுக்குத் தீர்க்கயுசுள்ள சகோதரருஞ்சகல பாக்கியமுஞ் சம்பூரணமாகவுண்டு.

இந்தக்கிரகத்திலே புருஷக்கிரகம் முற்பாதியும் ஸ்திரீகிரகம் பிற்பாதியுங் கூடியிருந்தால் இவன் சகோதரர்கள் அளவில்லையாக சகலரும் மதிக்கவாழ்ந் திருப்பார்களெனவறிக.

## பெண்சகோதரம் சகோதரமின்மை.

௩-ஆ மிருசி புருஷயிருசியாய் இந்தயிருசிக்கதிபதி கிரகம்ஸ்திரீ கிரகமுமாய் இந்த ஸ்திரீகிரகம் புருஷக்கிரகயிருசியிலிருக்க அந்த புருஷக்கிரகயிருசி அதிபதியும் ஸ்திரீகிரகயிருசியிலே இச்சாதகனுக்கு யிலாபமாகிய ௧௧-ஆ மிடத்தில் நிற்க யிவனுக்குப்பின் பிறக்கிரசகோதரம் பெண்ணும் அது சுகத்திலே தீர்க்காயுசுண்டாயிருக்கும்.

இவர்கள் மூன்றுபேரும் ௬-அ-௧௨-ஆ மிடத்திலே அஸ்தமனநீசக்கிரகங்களுடனே கூடியிருந்தாலும் அஸ்தமனமாயிருந்தாலும்சகோதரம் பால்லியத்திலே மரிக்கும்.

இந்தப்படி இலாபமாகிய ௧௧-ஆமிடத்திலிருந்தாலும் சிலநாள் அற்பசவுக்கியம்.

இவையெல்லாம் அந்தந்தக்கிரக மகாதிசை காலச்சக்கரங்களில் பலன சித்திக்குமெனவறிக.

## நான்காம் பாவகம்.

—(*)—

சொல்லியவித்தைவாகனஞ்சுபங்கள்
சூழும்வியாபாரமுமனையும்
வெல்லுமேம்பாடுஞ்சவுக்கியமன்னை
விரும்புநல்லுறவினருங்கும்
நல்லநிட்சேபம்பாவிஷயங்க
ணறைகமழ்பாற்பசுகலங்கள்
வல்லதோர்தேவதானமிப்பலனை
வழுத்துநான்காமிடங்கொண்டே.

### மாதுரு பலன்.

மாதுருகிரகமாகிய மதியும் மாதுருயிருசியிலே நின்ற கிரகமும் மாதுருயிருசியாதிபதியும் யிந்தமூன்றுகிரகம் சுபக்கிரகமுமாய் ட்ச

யாட்சி யுச்சருய்த்தேறிநிற்கினும் அல்லது யிப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடிநிற்கினும் அவர்களிட ஆட்சியிருசியிலே நிற்கினும் அவர்கள் பார்க்கினும் தனலாபகேந்திர திரிகோணத்திலே யிந்தமூன்றுகிரகமும் நிற்கினும் இச்சாதகனுடைய மாதாவுக்குப் பூரணயுசும் ஆயிஸ்வரியமும் அர்த்தலாபமு மூண்டாமெனவறிக.

## தனப்பிருப்தி வாகனம் சுகம் வித்தை.

மாதுருயிருசி கடகமாக அதிலே மதிநிற்க இச்சாதகனுடைய மாதாவுக்கு பூரணயுசுண்டு.

மாதுருயிருசியாகிய ச-ஆ மிருசியாதிபதி சுபக்கிரகமுமாய் மதிகூட நட்பாட்சி யுச்சம் தனஸ்தானமாகிய உ-ஆ மிருசியிலிருக்கில் தனப்ருப்தி யுண்டாயிருப்பன்.

ச-ஆ மிராசியாதிபதி நட்பாட்சி யுச்சமாய் தனலாபகோணத்திலிருந்தாலும் யிப்படி யிருக்கிற கிரகத்துடனே கூடியிருந்தாலும் இப்படிக்கொற்ற கிரகங்களிட ஆட்சியிருசியிலே கூடியிருந்தாலும் இவர்கள் பார்வையுண்டானாலும் வாசனமும் சுகமும் வித்தையும் பந்துசுகமும் பூரணமாக வுண்டாகி வாழ்ந்திருப்பரெனவறிக.

## மாதாபிதா அனுகூலமாயிருக்கை.

பிதாக்கிரகம் மாதா கிரகத்துடனேகூடி நட்பாட்சியிலிருந்தாலும் இவனிட பார்வையுண்டானாலும் இச்சாதகனிட மாதாபிதாக்கள் யேகயிருதயமாய் அனுகூலமாயிருப்பார்கள்.

சுபஸ்தான கிரகங்கள் மாதுரு க்ஷேத்திரமாகிய ச-ஆ மிருசியில் நிற்கினும் மாதுருகிரகங்களுடனே நட்பாகயிருக்கினும் தாயாரும்பிள்ளையும் மனது சந்தோஷமாய் அன்யோன்யருயிருப்பார்கள்.

இப்படி கஉ-யிருசிகளும் இந்த தேகாதிபதிக்கு அவரவர் நட்பாட்சி யுச்சருய் பிரபலராயிருந்தால் இச்சாதகனும் பிரபலமாயிருப்பன்.

யீனருயிருந்தால் கீழ்பட்டிருப்பன். இப்படி கஉ-யிருசிக்கும் பார்த்து பிரபலமான யிருசி சம்பந்தம் பெறும்பேரென்பனவறிக.

## மாதாமரணமும் காலமும்.

மாதுருயிருசி அன்னியருசியாய் அந்த அதிபதிக்கிரகமும் அதிலிருந்து அதிலே மதிகூடியிருந்தால் பால்லியத்திலே மாதாமரணம்.

மதியும் மாதுரு ருசியாதிபதியும் இருவரும் அஸ்தமானருய் பகைநீச க்ஷீணருய் சு-அ-கஉ-ஆ மிடத்தில்நிற்கினும் இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடிநிற்கினும் இப்படிக்கொத்த கிரகங்கள் பார்க்கி

னும் இப்படி மாதுருசியாகிய சு-ஆ மிராசியிலிருக்கினும் அந்தமாதாவுக்கு ஆயுசு தினபலத்தைக் கூட்டும்வகையாம்.

மதிக்கு-ய-சு-ஆ மிருசியில் நின்றகோளின் தினமுஞ் சனிக்கு தினம்-கசு.

{ மச்சினன் மாமன் மரணமும் அதற்குக்காலமும்.
பிதாவுக்குமுன் மாதாவும் மாதாவுக்குமுன் பிதாவும் மரணம். }

மாதுருக்ஷேத்திரந் தனுசாய் அதிலே மதிநிற்கில் அந்தப்பிள்ளைக்கும் பூராடம் இரண்டாங்காலுமாய்த் தனுசாதிபதிகுரு ௩-அ-கஉ-ஆமிடத்தில் நிற்க மச்சினன் மாமன் மரணம.

யெத்தனை நாளென்னில் மதிக்குநாள் ய-குருவுக்குநாள் ய-ஆயுர்காரனாகிய சனிக்குநாள் கசு.

அ-ஆ மிடத்தில் நின்றவனுடதினமும் அதிபதியினிடதினமும் இந்தநாளுக்குள்ளே மரணம்.

பிதுர்கிரகம் அப்போது வலிபெறில் பிதாவுக்குமுன் மாதாமரணம் சர்வ ஜீவனையும் திருஷ்டிக்கும் பிர்மாவின் எழுத்துமிதுவாம்.

மதியும் மாதுரு ருசியாதிபதியும் இந்தபிள்ளையினிட சனனலக்கினத்திற்கு சு-அ-கஉ-லே நின்றாலும் வித்வான்.

தனலாபகேந்திர திரிகோணத்திலே ஸ்திரீ இருசிலியிருந்தால் வுதவுமெனவறிக.

## மாதாபிதாக்களுக்கு அநுகூலமானதற்கு விபரம்.

மாதுரு பிதுரு ருசியிலே கூடியிருந்தாலும் பிதா கூ-ம் பந்தக்கிரகங்கள் மாதுருருசியிலிருந்தாலும் பிதா சம்பந்தகிரகமும் மாதா சம்பந்தக் கிரகமும் இரவியுடனேகூடி அஸ்தமனமாயிருந்தாலும் அவமரணமென்று சொல்லுவதெனவறிக.

## குருபுத்திரனும் குருபுத்திரனல்லாமையும்.

மதிநின்ற இருசியையாதல் ஜென்மயிருசியையாதல் குரு சுக்கிரன் புதன் இவர்களிலொருவர் நிற்கினும் நோக்கினும் குருபுத்திரனும் பாபக்கிரகம் நிற்கினும் நோக்கினும் பாபகர்மியென்றறிக.

மாதுரு இருசியாகிய சு-ஆ மிருசியாதிபதி பிள்ளையினுடைய சென்ம லக்கினத்திலிருக்க அந்த இலக்கினத்தில் இருகுவானாலும் கேதுவானாலு மிருக்க இவன் ஈனசாதிக்குப்பிறந்தவன்.

இவன் பிதாவின் சாதியறியவேண்டில் குஜன்நிற்கில் வைசியன் சனி நிற்கில் சூத்திரன் ருகுகேது நிற்கில புலையன் இவை தீரகிருஷ்

ணபகவானைப் பணிந்து தொழுதால் வினைகளெல்லாம் பறந்துபோமெ
ன மேலோர் கூறுகின்றனர்.

## ஐந்தாம்பாவகம்.

கொண்டதோர்மாமன் பிதாபெறும்புதல்வர்
குலவுபூருவஞ்செய் புண்ணியமும்
தண்டமிழ்வாணர் புதல்பிறபந்தந்
தரித்திடுங் கற்பமந்திரங்கள்
மிண்டியவித்தை விதரணம்புத்தி
விரும்புமிப் பலனெலாமறிந்தே
கண்டுரைத்திடுவாஞ் சாமிடங்கொண்டே
கற்றுணர்ந் தருளுமாதவரே.

### பிதாபலன் புத்திரபலன் விவேகபலன்.

குரு சுக்கிரன் புதன் யிந்தமூவரிலொருவர் நிற்கிலும்நோக்கிலும் சர்வதோஷமும் நீங்கும்.

| | |
|---|---|
| பிதுரு கிரகமான இரவியும்<br>மாதுரு கிரகமான மதியும்<br>புத்திர காரணன குருவும் | இம்மூவரும் நட்பாட்சியுச்சமாய்பலவானுமாய் சுபக்கிரகங்களி னிடப்பார்வை யுண்டாகினும் பிதாவுக்கு பூர்ணாயுசு. |

சுபக்கிரகங்களி னிடப்பார்வை யுண்டானாலும் அல்லது யிவர்கள் தனலாபகேந்திர திரிகோணங்களில் நிற்கினும்.

யிந்த பிதுரு ருசியிலே யிருந்த கிரகத்துக்கு யெத்தனைபலனோ அத்தனை பலன் வுண்டாம் பிதாவுக்குப் பூர்ணாயுசுமுண்டு.

யிச்சாதகனுக்குப் புத்தியும் புத்திரனும் புத்திரிகளும் வுண்டாய் பூர்ணாயசுடன் சுவாமி பாதாரவிந்தத்தை நாடுவர்.

சென்ம யிலக்கினத்தில் பிதுருக்கிரகம் நட்பாட்சி யுச்சமாய் பெலன் பெற்று இருசி முற்பாதியில் நிற்கினும் இப்படிக்கொத்த கிரகங்கள் பிதுரு கிரகமானால யிந்த ருசிக்குண்டான குணமும், யிவன் பிதாவுக்குப் பூர்ணாயுசுமுண்டு.

இவரிருந்த ருசியாதிபதி யெவ்வன்ன ருயிருந்தாலும், பிதாவுக்கு புத்தியும் பூர்ணாயசு சம்பூரணமாகவுண்டு.

பிதுர் ருசியாகிய கூ-ஆ மிரசியாதிபதி சுபக்கிரகங்களாய் சேரினிற்கில் பிதாவுக்கு யிந்தபிள்ளை யினியவனாயிருக்கும்.

ரு-ஆ மிராசியாதிபதியுடனே யிரவி கூடாமல் சுபக்கிரகங் கூடி யிருக்கில், பிதாயும் பிள்ளையு நட்பாருச் சுவாமி பாதாரவிந்தத்தை நாடி வாழ்வார்கள்.

பிதுரு ருசியாதிபதியும் புத்திரராசியாதிபதியும் இரவியும் ரு-ஆ மிராசி யிருந்த கிரகமும், பகை நீசமாய் அஸ்தமானமாய் சத்துருக்க ளாய் பாபக்ஷீணராய் இலக்கினத்துக்கு ௬-அ-௧௨-லே யிருந்தாலும் இப்படி கிரகாதிபதி ருசிகளிலே நிற்கினும், இவன் பிதாவுக்கு ஆயுசு மத்திபம்.

பிள்ளைக்கு பிதுருருசியாகிய ௯-ஆ மிருசியில் பிதுரு காரகனு கிய இரவியிருந்து அந்த ௯-ஆ மிராசியாதிபதியும் அங்கிருக்க இவர் களுக்கு பகைக்கிரகம் பெலவானுயிருந்தால், பிதாபால்லியததிலே மர ணம்.

பிதுரு கிரகமாகிய இரவி ௯-ஆ மிராசியில் நின்று, அந்த ௯-மிரு சியாதி பதிக்கிரகம் ௬-அ-௧௨-ஆ மிருசியிலே யிருந்தால், அவனிட மகாதிசையிலே யிதாமரணம்.

௯-ஆ மிருசியாதிபதி ௯-ஆ மிராசியிலிருந்தால், யிந்த தேகாதி பதி திசையில் மரணமாம்.

அல்லது ௯-ஆ மிருசியாதிபதி கிரகத்துடனே கூடியிருந்த கிரக த்தின், அந்த திசையிலே மரணம்.

பிதுரு கிரகமாகிய இரவியும், பிதுரு ருசியாதிபதியும் இந்த பிள்ளை ஜென்மலக்கினத்துக்கு ௬-அ-௧௨-ஆ மிராசியிலிருக்கினும் பிதுருருசியான ௯-ஆ மிராசியில் பகைக்கிரகமிருக்க மாதா சம்மந்த கிரகம் மதியும் ௪-ஆ மிருசியாதி தியும் தனலாபகேந்திர திரிகோணங் களிலே வலிபெற்று நிற்கில், மாதாவுக்கு முன்னே பிதாமரணம்.

இரவியுடன் பிதுருருசியாதிபதிகூடி அஸ்தமானமாய்௬-அ-௨-ஆ மிடத்திலிருந்தால், பிதுரு மரணகாலத்துக்கு பிள்ளைவுதவான்.

பிதுரு ருசியாதிபதி இரவியுடன் கூடாமல் தனலாப கேந்திர திரிகோணங்களிலே யெதிரி ருசியிலிருந்தால், பிதுரு மரணகாலத்து க்கு பிள்ளைவுதவும்.

பிதுரு ருசியாதிபதியும், மாதுரு ருசியாதிபதியும், ஒருத்தரே யானால் அது மரணம்.

## விருத்தம்.

யிருந்தபத்தா மிறைவனேந்தாதிபன்
பொருந்துமித்துரு வாய்ப்புண்ணியனுமாய்ப்

பரிந்தவுத்தமர் வீட்டுறப்பாலனும்
வருந்திடான்றனந் தேடிவழங்குவான்.

## நாகப்பிரதிட்டை பண்ணுமல் புத்திரருண்டு.

நல்லவர்பாராதிருக்க வைந்தாம்வீட்டில்
நாடுமைந்தாமதிபனுட னண்ணியேனும்
வல்லகரும்பாம்பிருக்க நாகசாப
வகையினுன்மைந்தரில்லே மறித்துநாகம்
ஒல்லேயுடன்பிரதிட்டை செய்யின்மைந்தர்
வுண்டாகுமுயருங்கேந் திரகோணத்துள்
மல்லல்சுபக்கிரகத்தின் பார்வையுற்றுல்
மைந்தரில்லேஜெபவோம வகையிலுண்டாம்.

புத்திரனேழாமாதி பொருந்துகேந்திரகோணத்தி
லுத்திடற்பலவானுகி யோங்குமாரதிபன்றுனும்
சித்தமாய்கூடினுலுந் தெரிசனேப்பார்வையாலுஞ்
சுத்தமாய்ப்புதல்வரில்லே யெனமறைசொல்லுந்தானே.

# ஆரும்பாவகம்.

மாதுகேள்வியாதி சத்துருபீடை
மற்றுமா யுதங்களாலிரணம்
ஓதியஞாதியால் வருதுன்பம்
யுத்தமெய்வாதைபொன் கண்டம்
பேதமாங்கள்வர் புனல்மடந்தையருல்
பெருகுபாம்பாலு நோயுளது
நீதிசேர்பிரதா னிக்கமுஞ்சிறையி
னிலேமையாறுமிடங் குறித்தே.

## சத்துருவின்மை பிணியின்மை.

௬-ஆ மிராசியாதிபதியும் சனியும் ௬-ஆ மிருசியிலிருந்தகிரகமும் நட்பாட்சியுச்சருய் தனலாபகேந்திர திரிகோணருசியிலே முற்பாதியிலே யெவ்வன்னருயிருக்கினும், இப்படிக்கொத்த கிரகங்களுடன் கூடியிருந்தாலும் இவர்கள் தனலாபகேந்திர திரிகோணங்களிலேயிருந்தாலும் இப்படி இந்தக்கிரகங்களும் இந்தருசியாதி பதிக்கிரகமும்இப்படி நட்பாட்சியுச்சமாய் திரிகோணத்திலிருந்தால் இந்தபிள்ளேக்கு சத்துருக்களால் வியாதியால் ஸ்திரியால் வுபத்திரவமில்லேயாம்.

## சத்துருயின்மை ஜேஷ்டனுக்கும் பிதுருக்கும் சத்துருத்துவம்.

இருகு கேது இரவிகுஜன் இவர்களாதல், இலக்கினதிபனாதல் ௬-ஆ மிருசியாதிபதி இவர்கள் ௬-ஆ மிருசியிலிருந்தால், இச்சாதகனுக்கு சத்துருவாதையில்லை.

௬-ஆ மிருசியாதிபதி இலக்கினத்திலிருக்கினும், சத்துருவாதையில்லை.

பாபக்கிரகங்கள் ௩-௬-௧௧-ல் நிற்கவெகு நன்மையுண்டாம் சத்துருவாதையில்லை.

இலக்கினதிபன் இரவி-௩-ஆ மிருசியில்நிற்கினும், வெகுநன்மையுண்டாம் சத்துருவாதையில்லை.

இலக்கினமிதுனமாக துலாத்தில் இரவிநிற்க, விருச்சிகத்தில் குஜன்நிற்க, இவனுக்கும் முன்பிறந்த பிள்ளைக்கும் பிதாவுக்கும்பகை.

சத்துரு ஸ்தானமான ௬-ஆ மிருசிக்கிரகங்கள் மூன்றுபேரும் மூடராய் பாவராய் பகைநீசகூஷீணராய் ௬-௮-௧௨-ஆ மிருசியிலிருந்தாலும், இவர்களுக்குப் பகைக்கிரகங்கள் கூடியிருந்தாலும், இவர்களுக்குப்பகை ராசியில்நிற்கினும், இவர்களிட பார்வையுண்டானாலும், இவர்களுடன் கூடியிருந்த கிரகத்தின்ராசியும், அதனுடன் பார்வையுண்டானராசியும் உதையமுதல் வியல்தானமளவும், தான தன்குடியுள்ளார் தன்னுடன்பிறந்தாரென்ற அடைவே அவரவர்க் கடுத்தபேர்க்குத் தீங்குசெய்யும்.

இந்ததோஷந்தீர ஸ்ரீகண்ணபிரானுக்கு திருமஞ்சனஞ் செய்தால் தீங்குகள்போய்விடும்.

௬-ஆ மிராசியையுடையவன் ௨-ஆ மிடத்திலிருக்கில், சத்துருக்கள் தனத்தை இவன் கொள்ளுவனெனவரிக.

விருத்தம்.

சொல்லியவாறுமிடத்திற் சுபக்கிரகமேவத்
துலங்கியவாறுதிபனுங் கேந்திரத்திலிருக்க
நல்லவர்கண்டிடின்ஞாதிக் குபகாரஞ்செய்வன்
நாடுங்காலவனுக்கோர் நலிவுகளுமில்லை

அல்லலறுந்தீக்கோளே யாயினன்மையதாம்
அடைந்திடுவனெதிரிகளுக் கேவலியனவன்
வல்லமுறுமேலோர்க ளோதிய நூற்கொண்டே
வையமிசைஜாதகற்கு வரைந்தபலனிதுவே.

ஆறுபன்னொன்பான்மூன்றில் அந்தகனிருக்கில்பாக்கியம்
கூறுபேர்வூருமுண்டாம் குறைவிலாச்செல்வமுண்டாம்
ஏறுபல்லக்குமுண்டா மிடம்பொருளேவலுண்டாம்
காறுபாரஷ்டலட்சுமி கடாக்ஷமென்மேலுமுண்டாம்.

காதலாறுமிடத்திற் கடினரூந்தீக்கோள்நிற்கில்
ஒதுபொல்லார்க்குபொல்லாங் குறைத்துவேலவனைப்போல
பேதிலார்தங்கட்கெல்லா மிடியெனவலியணுகிப்
பூதலத்தெவரும்வந்து புகழ்ந்திடப்பொருந்திவாழ்வன்.

பொருந்துசிங்கத்தைக்கண்டு புடைபடும்ரிஷபமேபோல்
இருந்தசத்துருக்களெல்லா மிரந்துகைகூப்பிநிற்பர்
திருந்திபகுபேரன்போல செல்வமுண்டாகிபாரில்
வருந்திடாதிருப்பனறின் மருவுதீக்கோளினாலே.

## ஏழாம் பாவகம்.

---

குறித்திடுங்கமன மணமடந்தையர்க்கும்
குமரர்கடமக்குநல் லின்பம்
நிறுத்திடுவிபகா ரந்தமர்க்கூட
நேமியோருதவுசன் மானம்
பிறித்தறிவியாபா ரம்மணம்புரிநாள்
பின்மனையாள்வியம் பெறுதல்
மறிக்கயல்விழியா யேழிடங்கொண்டு
வழுத்துவர் மறைமொழிப்புலவர்.

### ரூபகளத்திரம்.

எ-ஆ மிருசியாதிபதியும் களத்திர காரகனாகிய சுக்கிரனும், எ-ஆ மிருசியிலிருந்த கிரகமும், யிவர்கள் மூவரும், நட்பாட்சி யுச்சமாய்தே றிநிற்க, யிவர்களிருந்த ருசியாதிபதிக்கிரகமும் நட்பாட்சி யுச்சமாய் தேறிநிற்க, தனலாபகேந்திர திரிகோணங்களிமேல யெவ்வன்னமாயிருக் கினும், யிப்படிக்கொத்த கிரகங்கள் பார்க்கினும், யிவனுக்கு சர்வ லட் சண சம்பன்னமுள்ள களத்திரமுண்டாய் வாழ்வர்.

### தீர்க்ககளத்திரம் களத்திரத்தினால் நிதி நிட்சேபலாபம்.

வேதவல்லித்தாயார் அருளைப்பெறுகிறபேர்க்குகோமாளங்கமான ஸ்திரியுண்டாய், யிந்த புருஷனுக்கும் ஸ்திரீக்கும் பூர்ணாயுசுமுண் டாம்.

## யிவர்களுக்கு பூர்வதனமு·முண்டென்கிறதற்கு விபரம்.

ஸ்திரீகளுக்கு யிலாபஸ்தானம் ௰-ஆ மிடம் இந்த ௰-ஆ மிருசி யாதிபதிபாக்கிய தனலாபகேந்திர திரிகோணங்களிலே யிருந்தால் பூ ணுயுசும் பூர்வதனமுமுண்டு.

யிவர்களிட யிலாபாதிபதி தனஸ்தானமேறியிருந்தாலும் அந்த தனஸ்தானுதிபதியோடேகூடி நட்பாட்சியிருந்தாலும் இலாபதனகே ந்திர திரிகோணங்களிருந்தால், யிவர்களே அந்ததனத்தை அனுபவிப் பார்கள்.

இவர்களிட லாபாதிபதியும் தனுதிபதியும், யிவர்களிருந்த ருசி யாதிபதியும் யிப்படியிருந்தால் யிவர்களுக்கு மேன்மேலும் தனம்வர்த் திக்கும்.

## நரவாகனப்ராப்த பத்தாவுடையவள்.

ஸ்திரீ ஜென்மங்களுக்கு யிலாபஸ்தானம் ௰-ஆ மிடம் யிந்த ௰-ஆமிராசியாதிபதி அவளிட தனஸ்தானமேறினுல் அவள்புருஷனுக்கு நரவாகன ப்ராப்தியுண்டு.

அந்த தனஸ்தானுதிபதி லாபகேந்திரத்திலிருந்தால் அவள் புரு ஷனுக்குப் பூரணமாக நரவாகனம் பிருப்தியுண்டு.

அவளிட லாபாதிபதி குருவாய் நட்பாட்சி யுச்சம்பெற்று பெல முடைத்தாய் யெவ்வன்னருய் அவளிட தனஸ்தானத்திலிருந்தால் அவளிட பத்தாவுக்குச்சொன்ன நரவாகனப்ராப்தியுண்டு.

இந்தப்படி சுக்கிரன் நிற்கில், வெள்ளிசொரூபம் சனியானுல் கு திரை குடை.

சுபக்கிரகங்கள் நட்பாட்சி யுச்சம்பெற்று யெவ்வன்னருய் அவ ளிடதனஸ்தானத்திலே நிற்கிலும், அவர்களிருந்த ருசியாதிபதியும் த னலாபகேந்திர திரிகோணங்களிலே நின்ருல், அவள் பத்தாவுக்கு வாக னப்ருப்தியுண்டு.

## புத்திராட்டி களத்திரத்தின் சாதி.

ஸ்திரீகளிட தனுதிபதி அவளிட ௫-ஆ மிராசி ௯-ஆமிராசி ௧௧-ஆ மிராசியில் நிற்கில், அவள் வுள்ளளவும் வெகு தனமும் வாகனப்ருப்தி யுமுண்டு.

ஸ்திரீகளுக்கு புத்திரஸ்தானம் ௭-ஆ மிடம் இந்த ௭-ஆ மிருசி யாதிபதி சுபக்கிரகமுமாய் நட்பாட்சி யுச்சம்பெற்று யெவ்வன்னருயி ருக்கினும் பிப்படிக்கொத்த கிரகங்களிட ருசிகளில்நிற்கினும், யிப்படி

க்கொத்தவாள் பார்வையுண்டானாலும் யிவளுக்கு லாபஸ்தானமாகிய ௫-ஆ மிருசியில் நிற்கினும், யிவளுக்கு புத்திரலாபமுண்டு.

ஸ்திரீகளுக்கு பத்தாஸ்தானம் ௯-ஆ மிடம், இந்த ௯-ஆ மிடத்தில் குருசுக்கிருளாயில், புருஷன் தன்ஜாதிக்கொத்த ஜாதி.

மதி புருஷனாகில் மத்திபம் புதன் மற்றக்கிரகங்களானால் யீனஜாதியென்னவும்.

## கிரகபலன்.

யிவள் பத்தாஸ்தானமாகிய ௯-ஆ மிருசியாதிபதி நட்பாட்சி வுச்சம்பெற்று சுபராய் யெவ்வன்னருமாய் யிவளிட லாபஸ்தானமாகிய ௫-ஆ மிடத்திலாதல், அ-ஆ மிடத்திலாதல், ௧௪-ஆமிடத்திலாதல், நிற்கில் யிவளுக்குஐஸ்வரியம் சம்பூர்ணமாகவுண்டு.

வியஸ்தானமாகிய ௧௨-ஆ மிருசியாதிபதி, லாபமாகிய ௧௧-ஆ மிராசியில் நிற்கினும், கேந்திர திரிகோணத்தில் நின்றும், அவனுடன்யெத்தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனையிடத்தில் வீடுகட்டும்.

அந்தருசி சீவருசியானால், வுபயதேசத்திலும் அன்னியதேசத்திலும், மூலருசியானல சுயதேசத்திலும் வீடுகட்டும்.

## கிரகபலன் சவுபாக்கிய பலன்.

வியஸ்தானதிபதி குருவாய் நட்பாட்சியுச்சமாய் தனகேந்திரதிரிகோணங்களில் வுத்தமஸ்தானங்களில்நிற்க, யிவனிருந்தருசியாதிபதியும் யிப்படி வுத்தமஸ்தானத்தி லிருந்தால், அவனிடகிரகம்யிருஜகிரகத்துக்குச் சமானமாயிருக்கும்.

யிவன் ௨-ஆ மிருசியில்நிற்கில், வெகுதனுட்டியுமாயிருப்பன்.

## புத்திராட்டி.

பிராதுருஸ்தானமாகிய ௩-ஆ மிருசியாதிபதி புருஷக்கிரகக்ஷேத்திரத்திலும் புருஷருசியிலும் புருஷக்கிரகங்களுடன் கூடிநிற்கினும் நோக்கினும், யிப்படி அவனுக்கு லாபஸ்தானமான ௧௧-ஆ மிராசியில் நிற்கில், இவன் பிதாவானவன் நற்குணமுடையவனுமாய்த் தனவானுமாய் சுகித்திருக்கும்.

யிவனிருந்த ௧௧-ஆ மிருசியாதிபதி யிவளிட லாபஸ்தானமாகிய ௫-ஆ மிருசியிலிருந்தாலும், யிவளுக்கு பூர்ணயுசுவுண்டு புத்திரர்களுண்டு.

## யெத்தனை யென்பதற்கு விபரம்.

உபயராசியாகில் ௩
சரருசியாகில் ௪
திரருசியாகில் ௨

புத்திரஸ்தானமாகிய ஏ-ஆ மிருசியாதிபதி யெந்த ருசியில்யிருந்தான், அவனுடனே யெத்தனை கிரகங்கூடியிருந்தது, அத்தனையும் புத்திரர்கள்.

அந்த ஏ-ஆ மிருசிமுதல் கூ-ஆ மிருசியாதிபதியோடே யெத்தனைகிரகங் கூடியிருந்ததோ அத்தனையும் புத்திரர்கள்.

கூ-ஆ மிருசிமுதல் கக-ஆ மிருசியாதிபதியோடே யெத்தனைகிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனையும் புத்திரர்கள்.

## ஸ்திருசிக்கு உ-ம் ஸ்தானத்துக்கும் விபரம்.

ஏ-ஆ மிருசியாதிபதி கிரகங்களுடன் யெத்தனைகிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனைபேரும் புத்திரர்கள் இனி வுபயமூன்றுக்கு தனஸ்தானமென்றவனுல்.

புத்திரஸ்தானமான ஏ-ஆ மிருசியாதிபதியுடனே யெத்தனைகிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனையும் புத்திரர்கள்.

அந்த ஏ-ஆ மிருசிக்கு கூ-ஆ மிருசியாதிபதியுடனே யெத்தனைகிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனைபேரும் புத்திரர்கள்.

அந்த கூ-ஆ மிருசிக்கு கக-ஆ மிருசியாதிபதியுடனே யெத்தனை கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனைபேரும் புத்திரர்கள்.

இந்த வகை அதிபதியுடனே சனி கூடியிருந்தால் நசிக்கப் பண்ணும்.

இரவி கூடித்தேறியிருந்தால் வர்த்திக்கும்.

இப்படி புருஷர் ஜாதகத்துக்கும் டு-ஆ மிருசி புத்திரஸ்தானம்.

யிதுமுதலாக மதி வுபயம், யிதற்கு முன்போலப்பார்த்துப் பிள்ளைகளித்தனையென்று யூகிப்பது.

அந்தந்த அதிபதிகளுடன் சனி கூடி யிருந்தால் நசிக்கப் பண்ணும்.

இரவிகூடித் தேறிநிற்கில் வர்த்திக்கும்.

களத்திர ஸ்தானமாகிப ஏ-ஆ மிருசியாதிபதியுடன் சனி கூடியிருந்தால் அந்த அதிபதிமகாதிசை வருஷமெத்தனையுண்டு அத்தனைஸ்திரீகள் வுண்டு.

இரவி கூடிநிற்கில் அந்த அதிபதி மகாதிசைவருஷம் யெத்தனையுண்டு அத்தனை ஸ்திரீகள்வுண்டு.

## மற்றக் கிரகங்களும் யிப்படி கண்டுகொள்க.

சனி யுச்சனுய் பலம்பெற்று, களத்திருதிபதி குருவாய் யிவர்களிருவரும் நட்பாக தனலாப கேந்திரங்களிலே கூடிநிற்கில் யிவர்களிருவ

ருக்கும் மகாதிசை வருஷம் ௩௦ யிதனைமுற்றித்தால் யெத்தனையோ அத்தனை ஸ்திரீகளென்றறிக.

சுக்கிரனிப்படி கூடியிருந்தால் சுக்கிரன் மகாதிசைவருஷம் யெத்தனையோ அத்தனை ஸ்திரீகள் வுடையவனுமாய் மும்மூர்த்திகட்கும்யினியவனாயிருப்பன்.

## விவாகமின்மை களத்திரசங்கை.

இலக்கினாதிபதியுங் களத்திராதிபதியும் யிவர்களிருவரும் ௬-௮-௧௨-ஆ மிடத்தில்நிற்கினும் அஸ்தமனமானாலும் யிவனுக்கு விவாகமில்லை.

களத்திராதிபதியுடனே யெத்தனைகிரகங்கள் கூடியிருந்தாலும் குடும்பஸ்தானத்தில் யெத்தனைகிரகங்கள் கூடியிருந்தாலும் களத்திரஸ்தானத்தில் ஒருகிரகமிருக்க களத்திராதிபதியுடனே யெத்தனைபேர் கூடியிருந்தார்களோ அத்தனைபேரும் களத்திரமாம்.

புத்திருட்டி தத்தபுத்திருடையவள் மிருகரூபமான புத்திரரைப் பெறுவள்.

இரவியுடன் புத்திரஸ்தானாதிபதி (அஸ்தமானமன்றியிலே) கூடியிருந்தால் வெகுபுத்திர பிறுப்தியுண்டாம்.

சனி புத்திரஸ்தானாதிபதியுடன் கூடியிருந்தால் தத்தபுத்திருடையவள்.

புத்திரஸ்தானாதிபதியுடனே இரவியும்கேதுவுங்கூடிஅஸ்தமனமாயிருந்தால்யிவளுக்குபிள்ளைகள் மிருகரூபமாய் பிறக்குமெனவறிக.

## நல்லபுத்திரி புத்திரர்களைப்பெறுவள் பதிவிரதை.

இரவிபிள்ளையாகிய சனியுடன் புத்திரஸ்தானாதிபதிகூடி அஸ்தமனமாயிருந்தால் நட்பும் சுகமுமுள்ள பிள்ளைபிறக்கும்.

புத்திராதிபனுடனே புதன்கூடி அஸ்தமானமாயிருந்தால் நட்பும் சுகமுமுள்ள பெண்பிறக்கும்.

புத்திரஸ்தானாதிபதி வுச்சமாய் மித்துரு சகிதனுமாய் கேந்திரலாப திரிகோணங்களிலிருந்தால் வருஷந்தோறும் பிள்ளைகள்பெறுவரென்றறிக.

புத்திர ராசியாதிபதியுடனே இரவி கூடியிருந்தால், தாமிசங்களிலேபெறுவள்.

௬-ஆ மிராசியாதிபதி சுபக்கிரகமுமாய் யிவள் கர்மஸ்தானமாகிய ௰-ஆ மிராசியில்நிற்கில், யிவள் பதிவிரதையாம், இவள் செல்வத்தினாலே புருஷன்ஜீவிப்பன்.

தனப்பிருப்தியின்மை பாரிக்கு ஆயுசு யீனம் யிரந்து திரியும்.

யிலாபாதிபன் நீச சத்துரு பாவட்சீணமூடரும் ௬-அ-௧௨-ஆ மி ருசியிலிருந்தால் யிவனுக்கு பூர்வதனப்பிருப்தி யில்லை.

இந்த லாபாதிபன் யிருந்த யிருசியாதிபதியும்யிப்படியிருந்தால் வேணதனமும் அஷ்டபோகபாக்கியமுமில்லாதவனுமாய் யிரந்துதி ரிவன்.

பாரிசம்பந்தக்கிரகங்கள் மூவரும்யிருந்த யிருசியாதிபதியும் நீச சத்துரு க்ஷீணமூடராய் பாவக்கிரக க்ஷேத்திருமாய், அல்லது யிப்ப டிக்கொத்தகிரகங்களுடனேகூடியிருந்தாலும், அவர்களிடக்ஷேத்திர ருனாலும், பார்வையுண்டானாலும், இரவிகூடி அஸ்தமானரும் ௬-அ-௧௨-ஆ மிடத்தில்யிருந்தாலும், இந்தக் கிரகாதிபதியுடன்கூடியிருந்து ௬-அ-௧௨-ஆ மிடத்துக்கு அதிபதிகளிடபார்வையுண்டானாலும், யிந் தப்பாரிக்கு ஆயுசுயீனம், போகபாக்கியமும் யீனம் யிவனுக்கு சவுபா க்கியஹானி யுண்டாவெனவரிக.

## புத்திரஹானி பத்தாமரணம்.

களத்திரசம்பந்தக் கிரகங்கள் நீச சத்துரு க்ஷீணமூடரும் கேந் திரலாப திரிகோணங்களி லிருந்தார்களாகில் களத்திரத்திற்கு ஆயுசு கால்வாசி பவுஷ்யபாக்கியமும் கால்வாசி.

பத்தா சம்பந்தக்கிரகங்களும் சத்துருக்களானால் யென்னேரமு ம் யிந்த பத்தாவும் ஸ்திரீயும் சத்துருக்களாயிருப்பர்.

ஸ்திரீகளுக்கு லாபஸ்தானாதிபதி (௵-ஆ மிருசி) இரவியுடன்கூ டி அஸ்தமானமாய் பொல்லாத ஸ்தானத்திலிருந்தால் யிவளுக்குபுத் திரஹானி.

ஸ்திரீகளுக்கு பத்தாஸ்தானமாகிய ௯-ஆ மிருசியாதிபதி பகைநீ ச க்ஷீணமுமாய் யிவள் லாபஸ்தானமாகிய ௫-ஆ மிருசியில் நிற்கினும் அல்லது ௯-ஆ மிருசியாதிபதி பகை நீச ருசிகளில் நிற்கினும், அவனி ருந்த ருசியாதிபதியும் அப்படியிருந்தால், யிருந்த கிரகங்களுடன் கூ டியிருந்தாலும் அந்தயிருசி அ-ஆ மிருசியானாலும் பால்லியத்திலே ப த்தாமரணம்.

## களத்திரம் யிளைத்திருக்கும் சோரஸ்திரீ நாயகர்.

மதியிலக்கினமாகிய யிவளுடம்பினாதிபதி பிருதுருஸ்தானமாகிய ௩-ஆ மிருசியில் பகை யிருசியில் பகைக்கிரகங்களுடன் கூடியிருந்தா ல் இவள்தேகம் இளைத்திருக்கும்.

## இவள் சோரஸ்திரீ யென்பிரதின் விபரம்.

இவள் பத்தாஸ்தானமாகிய கூ-ஆ மிருசியாதிபதி சு-அ-கஉ-ஆமிடத்திலிருந்தால் சூத்திரனுடனே சம்பந்தம்.

இராகுவுடன கூடியிருந்தால் யீனஜாதி.

அ-ஆ மிடத்திலிருந்தாலும் சூத்திரன்.

கஉ-ஆ மிடத்திலிருந்தாலும் பிராமணஜாதி யென்க.

அந்த கூ-ஆ மிருசியாதிபதி யிவள் கர்மஸ்தானமாகிய ய-ஆ மிடத்தில் சனி ருகு கேதுவுங் கூடியிருந்தால்யிவள்விபசாரத்தில் தேடினவுடைமையால் யிவள்புருஷன் ஜீவனம் பண்ணுவான். பிர்மாயெழுத்திதுவே.

(வெள்ளிசே யேழினிற்கில் விதவை மாதரைமணப்பன்.)

## சோரஸ்தானம்.

கூ-ஆ மிருசியாதிபதி பாபக்கிரகமுமாய் அவனுடன் யிருகு கேது கூடியிருந்தால் அவள் விபசாரத்தினாலே தேடினவுடமை யிந்த புருஷனுக்குசேரும்.

கூ-ஆ மிராசியாதிபதியுடனே சனிகூடியிருந்தால் யிவள்சோரத்துக்கு கூடுமிடமேதெனில், சூத்திரனுடன் விருட்சத்தடியிலென்க, ருகுவானல் கிணத்தங்கரையெனக.

புத்திரஸ்தானதிபதி பாபனுமாய் அவருடன்ருகு கேதுகூடி சு-ஆ மிடத்திலிருந்தால் புத்திரவிபசாரத்தில் வுழைத்துத்தேடினவுடமை யிந்ததகப்பனுக்கு சித்திக்குமென்றறிக.

## வைதவ்வியன் பதிவிரதை.

ஸ்திரீகள்வைத்த வைதவ்வியத்துக்கு விபரம்.

கூ-ஆ மிடத்ததிபதி சு-அ-கஉ-ஆ மிடத்தில் அஸ்தமானமாயிருந்தால் பால்லியத்திலே வைதவ்வியம்.

கூ-ஆ மிருசியாதிபதி அஸ்தமானமாய் ஆயுருஸ்தானங்களிலிருந்தால் நடுவயதிலே வைதவ்வியம்.

புருஷனுக்கு களத்திரஸ்தானதிபதி சு-அ-கஉ-லே அஸ்தமானமாயிருந்தால், புருஷன் பால்லியத்தில் மரணம்.

சனி அஸ்தமானத்திலே யாகுதல் இலக்கினகேந்திர திரிகோணஸ்தானத்திலே யாகுதலிருந்தால் தன்னிடபத்தாவுடனே சங்கமம்.

## பரசாதகம்.

மாதுருஸ்தானமாகிய ச-ஆ மிருசியாதிபதியுடன் ருகு கேதுகூடி ஜென்மலக்கினத்திலிருந்தால யிவன் பரஜாதகமென்றறிக.

புருஷனுக்கு களத்திருதிபனுடன் சுபரிருந்தால் சுபஸ்திரீ,பாபகரிருந்தால் பாபஸ்திரீயெனவரிக.

## விதவைசேர்த்தி.

களத்திருதிபதி சனியுமாய் அவன் ௬-அ-௧௨-ஆ மிடத்திலிருந்தால் விதவைசேர்த்தி.

## ஈனஸ்திரீ சங்கம்.

பாரியாதிபதியுடன் ரூகு கேதுகூடி ௬-அ-௧௨-ஆ மிருசியிலிருந்தால் யீனஸ்திரீ சங்கமம்.

களத்திருதிபதி சனிஸ்தானத்தில் பார்வையுண்டானல் யீனஸ்திரிசங்கமம் அந்தப்படியென்று பிர்மாவிதித்ததெனவறிக.

## விப்சாரத்தால் ஜீவனம்.

பிருதுருஸ்தானமாகிய ௩-ஆ மிடத்ததிபதி பாபக்கிரகமாய் இவனிடகர்மஸ்தானத்திலிருக்க யிவனுடன் ரூகு கேதுகூடியிருந்தால் இவள் விபசாரத்தால் தேடியிட்டுப் பொசிப்பரெனவரிக.

## அநுமரணம்.

பத்தாம்ஸ்தானமான ௧-ஆ மிடத்ததிபதி இவள்யிலக்கினத்திலேயிருந்தாலும் யிலக்கினதிபதி காரியஸ்தானத்தி லிருந்தாலும் அநுமரணமெனவறிக.

## வுருத்திரகன்னிகை.

ஸ்திரிகளுக்கு ௬-ஆ மிருசியாதிபதியோடே ரூகுகேது கூடியிருந்தால் யிவள் ருத்திரகன்னிகையா மெனவறிக.

## யிருமனைவி.

### விருத்தம்.

யேழ்வீட்டினிற்கதிபன் கரத்தினிற்கில்
யிருமனைவிதிரமதனி லிருக்கிலொன்றே
தாழ்விலாவுபயத்தி லிருக்கின்மாதர்
சாலன்றிபலருளராந் தானத்தாதி
வாழிடநோக்கியகோளாற் பலன்கள்கூடும்
மற்றுமிலக்கினத்தாதி சுங்கன்வீட்டில்
சூழ்கினுஞ்சுங்கனைக்கூடச் சுங்கன்பார்க்கத்
தூயஸ்திரீலோலனெனச் சொல்லலாமே.

## பாவியாயிருப்பள்.

### கவி.

பண்ணிசைந்தருளு மனைவிதீக்கோளைப்
பார்த்திடில் பாவியாயிருப்பள்.

### சுகஜீவி.

கவி.

திகழுடனுளதே யந்தலாபந்தான் திரமுபயங்களே யாயின் [ம்.
சுகமுடனிருப்பள் சரமெனிற்சிறிது தோகையர்க்கிரிட்டமேசொல்லு
விளம்புமேழாமிடத்தோன் மேவுச்சநீசமின்றிக்
களங்கமில்லாதிருக்கிற் கருதுமுத்தாளுக்கில்லை
யிளங்கொடியாளுக்குண்டா மேழுளோனுச்சநீசம்
வளம்பெருமங்கிசத்தின் மருவிடின் மகவுண்டாமே.

## எட்டாம் பாவகம்.

---

புலிவுறும்படையால் வாதைசேர்யுத்தம்
பொருப்பின்மேலேறிவீழ்ந்திடுதல்
நிலைபெரும் வியாதி விக்கினங்கிலேச
நீள்பலதுன்பமோ டரணம்
சிலவினைனட்ட மாம்விழுக்காடு
செறிபகை மரணமித்தனையும்
வுலகினிலுபார்ந்தோ ரட்டமபலன்கண்
டுரைசெய்வா ருண்மைபெற்றிடவே.

### தீர்க்காயுசு.

அஷ்டமஸ்தானதிபதி சுபக்கிரகமாய் அஷ்டமத்தில் நின்றகிரகமும் ஆயுநகாரனுகிய சனியும் அஷ்டமருசிக்கதிபதியும் இம் மூன்று கிரகங்களும் தனலாபகேந்திர திரிகோணங்களில் நட்பாட்சிவுச்சம் பெற்றுநிற்கினும் இந்தகிரகங்களுடன் கூடிநிற்கினும் இவர்கள் பார்க்கினும் யிவர்களிருந்த ருசியாதிபதியும் யிப்படிக்கொத்த ருசிகளிலிருந்தால் தீர்க்காயுசு.

### நன்மையுண்டாய் வாழும்.

பாபக்கிரகங்கள் ௩-௬-௧௧-ல் யிருந்தால் நன்மையுண்டாய் வாழ்வன்.

### பர்வதாரோகணம் சிரோவியாதி.

தேகாதிபதி இரவியுமாய் தேகலக்கினத்திலிருக்கினும் நோக்கினும் கிரித்தலத்திலேதிரிவன் சிரோவியாதியுடையவன்.

### பரிமளாதி வஸ்திர கிரயவிக்கிரியங்களாற்ஜீவனம்.

மதி யிந்தப்படியாகில ஸ்திரீசங்கமும் வெகுசங்க முண்டானவனுமாய் பரிமளவஸ்திருதிபதி கிரயவிக்கிரயங்களினுலே ஜீவி[illegible]ன்.

குஜனனல் அக்கினிபாற் பாத்தியமுடையவனுமாய் சூரனுமாய் விரண வியாதிகளுமுண்டாய் ஆயுத அப்பியாசமுடையவனுமாய் குரூரனுமாய் பாவியுமாய்த்திரிவன்.

புதனனல் கெணிதசாஸ்திரமறிந்தவனுமாய் பிரமவீணனுமாய் அன்பும் அடக்கமுமுண்டாய் வியாபாரத்தினலே வயிறுவளர்ப்பன்.

குருவானல் சுயதேசத்திலே பிருமண வித்திபாப்பியாசனுமாய் சரீரம் அழகுண்டாய் வாழ்ந்திருப்பன்.

சுக்கிரனனல் பிரமகற்பமுண்டாய் ஆயுசுகற்பமுண்டாய் அருள் பெற்று வாழ்வன்.

## வனசஞ்சாரி.

இரவிக்கு புத்திரனகிய சனி தேகாதிபதியாய் தேகத்தில் நிற்கினும் தேகருசியை நோக்கினும் யிந்ததேகி வனத்திலேதிரிவன்.

## பரதேசத்தில் மரணம்.

அஷ்டமாதிபதிபோடே ஒருவரில்லாமல் தாங்களேயிருந்து அந்தயிலக்கினமும் மகரமாய் கிரகங்களுஞ் சரக்கிரகமானல்பரதேசத்தில் மரணம்.

## நிவாகத்தலம்.

சென்மயிலக்கினம் ஸ்திரயிலக்கினமுமாம் அந்ததேகாதிபதியும் அங்கேயிருந்தால் சுயதேசத்திலிருக்க யிவனுக்குபிருப்தி.

அஷ்டமருசி வுபயராசியானல் சமீபகிருமத்தில் மரணம்.

அஷ்டமருசி சராராசியானல் அன்னியகிராமத்தில் மரணம்.

தேகாதிபதி சாருசியிலிருந்தால்யிவன்தேசாந்திரத்திலேதிரிவன்.

ஸ்திருசியானல் சுயதேசத்திலும் வுபயருசியானல் வுபயதேசத்தில் திரிவனெனவறிக.

## ஆயுசு.

அஷ்டமசம்பந்தகிரகங்கள் மூவரும் நீசசத்துருக்களாய் பாபராய்க்ஷீணருமயிருக்க யிப்படியிருந்த கிரகங்களிட மிருசியிலிருக்கினும் இவர்களுடன் கூடினும் நோக்கினும் யிவர்களிருந்தபடி கூ-அ-கஉ-ஆமிடத்திலிருக்கினும் யிவனுக்கு ஆயுசுக்ஷீணம்.

அந்த அதிபதி யிப்படியிருக்கினும் ஆயுசுக்ஷீணமெனவறிக.

## மரணகாலம்.

அவர்களெந்தெந்த யிருசியிலிருந்தார்கள் அந்தந்த யிருசிக்காரருக்குநாசம்.

இவர்கள்பார்வையுண்டான யிருசிகளில் நசிக்கும்.

ஜெனனகாலத்தில் ௰-ஆ மிருசியாதிபதி ௬-௮-௧௨-ஆ மிடத்திலிருந்தால் ௨-ஆ மிருசியாதிபதி மகாதிசை ஜெனனகாலத்திலே வந்தால் அந்தமகாதிசையிலே மரணம மென்று வேதவாக்கியம் பிரமாவிதித்ததெனவறிக.

## மரணதிக்கு

அஷ்டமாதிபதி ஜென்மலக்கினத்தில் நட்பாட்சியுச்சம் பெற்றிருந்தால் ஆயுசுமுக்கால்வரிசை.

பகைநீசமாகில் அற்பம் நிட்பலம்.

தேகாதிபதியும் அட்டமாதிபதியும் கூடியிருந்தபோது அவருடன்யெத்தனை கிரகங்கள் கூடியிருந்தார்கள் அந்தகூடியிருந்தயிருசியாதிபதியும் அங்கிருக்க அந்தஸ்தானமும் லாபஸ்தானமாக அந்ததேகாதிபதியுடன் யெந்த யிருசியாதிபன் கூடியிருந்தார்கள் அத்தனைபேரும்மரணகாலத்தில் அண்டையிலே கூடியிருப்பார்கள்.

யிந்த அதிபதிகள் கூடியிருந்தயிருசி பெந்ததிக்கு அந்ததிக்குமரணம், யிதுகளெல்லா கிரகவலியறிந்து கண்டுசொல்வது.

## பூர்ணாயுசு.

### கவிகள்.

அட்டமத்ததிப னுச்சமாகினு மானநற்கோள்
அட்டமத்ததிபன் றன்னைப்பார்க்கி நூறுண்டிருப்பன்.

கூறிட்டஜென்மாதி பலவானயிற்
குலவும்மெருவயதென்றே கூறலாகும்.

கேந்திரத்தில்வாழு மரசனுறிற் றீர்க்கவயதாம்
யேழுங்கதிரோனை யரசனேழிற் கேந்திர நூறுண்டே.

வயது ௯௯-ம்.

நடிக்குஞ்சன்மமுதன்கா மிடத்து நடுவேகாற்கலையும்
படிக்கும்புதன்சுக்கிரன் அரசன் பரிந்தேயிருக்கிற்சதவருஷம்
துடிக்கும்புதனென்றேநின்றால் தொடர்முப்பத்துமூன்றுதும்
அடுக்கும்வெள்ளிக்கறுபத்தாறு அரசனிருந்தா நூறுமே

அஷ்டமியேழுயிருரொன்பான் அனுதினியேகம் நூறு
எட்டெனப்பதினென்றஞ்சில் யிருந்திடாதெழுபத்தைந்து
விட்ட ஆறுமிடம் மேவிடில்தாறில்பாதி
மட்டிலாநாலும்பத்தும் வயதுமே அர்ப்பந்தாமே.

அஷ்டமத்தான்லக்கினத்தான் ருகிலும்வியாழம்வெள்ளி
யிட்டமாய்கேந்திரகோணம் யிருந்திடில்வயது நூரு
சட்டனவயதுண்டாகுந் தனம்வித்தைமிகுதியுண்டாம்
பொட்டெனி அரசர்போல பூமியில்வாழ்வர்தானே.

கேந்திரம்சுபருக்கு ஒன் னுமேழு பாபிக்கு நாலுபத்து கோண
ம்அஞ்சு வொன்பீது.

## ஒன்பதாம் பாவகம்.

---

### விருத்தம்.

பெற்றிடுந்தந்தை மகப்பயிர்தன்மம்
பெருமைசோபாக்கியமடங்கள்
வுற்றதோர்பரம புண்ணியங்குலமு
முயர்திருப் பணியுபதேசம்
வெற்றிசேர்நீர்க்கா வனம்புகழ்கூபம்
விரும்பியசெல்வமீ தெல்லாம்
கற்றறிந்தோர்க ளொன்பதாமிடத்தாற்
கருணையும் பெறமொழிந்திடுவார்.

### பாக்கியபலன்.

கூ-ஆ மிருசியாதிபதியும் பாக்கியகாரகனுகிய குருவும் பாக்கிய ஸ்தானத்திலிருந்தபேரும் ஆகிய மூன்றுபேரும் சுபக்கிரகமுமாய் நட் பாட்சியுச்சம்பெற்று யெவ்வன்னருயிருக்க, யிந்தகிரகங்களுடன் கூ டியிருக்கினும் யிப்படிக்கொத்தவர்கள் பார்க்கினும் யிவர்கள் தனலா பகேந்திர திரிகோணங்களில்சேரினும் யிவரிருந்த யிருசியாதிபதிக்கிர கங்களும் யிவர்களைப்போலிருந்தால் யிவன் பட்டவர்த்தனனுவன் அ ல்லது அவனுக்குச்சமானமான ஐயிஸ்வரியவானுயிருப்பன்.

யிந்தக்கிரகங்கள் மூன்றுபேரிட மகாதிசைக்குள்ளே யிலாபாதி பதி பொசிக்கிறபோது மகாபாக்கியஞ் சித்திக்கும்.

இலக்கினத்துக்கு பாக்கிய யிருசியாகிய கூ-ம் யிருசியாதிபதியு டனுகிலும், பாக்கியகாரகனுகிய குருவுடனுகிலும் பாக்கிமஸ்தானத்தி லிருந்து, மித்துருக்கிரகத்துடனுகிலும் யிவனிட லாபஸ்தானமாகிய மக-ஆ மிடத்ததிபதிநட்பாட்சியுச்சம்பெற்று பாக்கிய தனலாபகேந் திர திரிகோணங்களிலிருந்தால் லாபாதிபன் பாக்கியாதிபன் யிவர்களி ருவர் மகாதிசையிலும் கீர்த்தியும் ஐயிஸ்வரியமும் அர்த்தலாபமும் வாகனமுதலானவையு முண்டாம்.

பாக்கியாதிபதியும் லாபாதிபதியும் நட்பராயுத்தமஸ்தானத்திலே கூடியிருந்தால், பாக்கியாதிபதி மகாதிசை லாபாதிபதி மகாதிசை யிந்த உ-லும் பிரியாத ஐஸ்வரியமும் அர்த்தலாபமுமுண்டாம்.

இவர்களிருந்த யிருசி பாரியஸ்தானமானால் பாரியலாபமும் வாஹனாதிகளுமுண்டாய் பூஸ்திதிகளுமுண்டாய் வாழ்குவன்.

பாக்கியாதிபதியும், லாபாதிபதியும்நட்பராய் தனஸ்தானத்திலிருந்தால் வெகுதனலாபமுண்டு.

தேகருசியில்தான், தேகாதிபதியுடன் தான்கூடிநட்பாகநின்றால் தேகமிருக்குமட்டும் அர்த்தலாபமும்பவுஷ்யபாக்கியமுண்டாம் அர்த்தலாபமும் பவுஷ்யபாக்கியமுமுண்டாம்

தேகாதிபதிபாக்கியாதிபதிலாபாதிபதியிந்தமூவரும் மூன்றுபேரும்வாகனஸ்தானமான சு-ஆ மிராசியில்கூடியிருந்தாலும் கூ-ஆமிராசியில் கூடியிருந்தாலும், இந்த அதிபதிகளுடன்கூடியிருந்தாலும்பார்வையுண்டானாலும் யிவன் தேகம்வுள்ளமட்டும் நரவாகனம்பிறுப்தியுண்டு.

தேகாதிபதிக்கு, குரு நட்பாக வாகனஸ்தானத்தில்தான் அல்லது வாகனாதிபதி குருவுமாய் தேகாதிபதியுங்கூடி நட்பாய் வாகனஸ்தானமான சு-ம். ருசியிலிருந்தால் பூரணநரவாகனம் பிறுப்தியுண்டு.

இலக்கினாதிபதியும் புத்திரஸ்தானாதிபதியும் சு-ம் யிருசியாதிபதியும், நட்பாய் சு-ம் யிருசியிலிருந்தால் பிதுராச்சியம் அத்தனையும் யிந்தபிள்ளை யுள்ளமட்டும் அனுபவிக்கும்.

புத்திரஸ்தானாதிபதி, பிதுருஸ்தானமாகிய கூ ம் யிடம்பாக்கியஸ்தானத்திலிருந்தால் யிந்தபுத்திரனும் பிதாவும் அன்யோன்யமாகயிருப்பார்கள்.

லாபஸ்தானத்துக்கு கர்த்தனும் பாக்கியதாஸ்தானத்துக்குகர்த்தனும்யிந்தயிருவரும்வுத்தமஸ்தானத்திலிருந்தால் பூர்வபாக்கியம்ஐயிஸ்வரியமுள்ளதெல்லாம். யிந்தபிள்ளை அனுபவித்துக்கொண்டுவரும்.

பாக்கியஸ்தானத்துக்கும் லாபஸ்தானத்துக்கும் கர்த்தருமயிருவரும் லாபபாக்கிய கேந்திரதிரிகோணங்களிலிருக்க அந்த யிருசியாதிபதியும் வுத்தமஸ் தானங்களிலிருக்க யிப்படியிருந்தால் பூர்வபாக்கியத்தைப்பார்க்கிலும் ஐயிஸ்வரியம் (காண்பன்) கொடுக்கும்.

பாக்கியஸ்தானத்துக்கு, கர்த்தன், குரு சுக்கிரன் புதன் மதி யிவர்கள்வலிபெற்று அந்தருசிகளிலே ஆட்சியாயிருந்தால், சற்குரு சேர்வையும் தனபாக்கியமும்சகலபாக்கியமுண்டாம், பிதுருபாக்கியமும், குரு, மாதுலம், யித்தனையும் (சம்பூரணம்)

பிதுருபாக்கியந் தனக்கு சித்திக்குமென்கிறதற்கு விபரம்.

பிதுருருசியான கூ-ம் ருசியாதிபதி வுத்தமனுக லாபபாக்கியஸ் தானங்களில் நட்பாட்சி யுச்சம்பெற்றிருக்க அந்த அதிபதிருசிகளில் கூடியிருந்தாலும் பிதுருபாக்கியமுண்டு.

நடுக்குமைந் தாதி லாபபாக்கியத்தி நட்பாட்சி யுச்சமாகிற் பிதா (நண்பனெடுக்கும்.)

பாக்கியாதிபதியும், பாக்கியருசியும் யெந்தஜாதி அந்தஜாதியை யொத்த அவர்களால் பாக்கியம்வரும்.

பாக்கியாதிபதியுடன் கூடியிருக்கிற கிரகம்லாபாதிபதியுமாய், லாபாதிபதிக்குத் திரக்கிரகமாக.

இவர்களிருந்தருசி, வுத்தமஸ்தானமாக யிந்த ருசியாதிபதியும் யிந்தப்படியிருந்தால் சூத்திரக்கிரக முச்சமானுல் சூத்திரருமேல யிவ னுக்கு பாக்கிய நல்கும்.

விருத்தம்.

கொடுக்கும்பொன்புகர்மாவதிதேறிய குலவுவான்குருசம்பனனரு
அடுக்குமேபுகழானனற்கீர்த்தியு மன்புரும்நவக்கோள்களின்பமுற
எடுக்தும்லாபாதிபாக்கிய திருசியு மெக்குலமக்குலத்தாருதவுமே
தொடுக்கும்பாக்யாதி லாபாதிசூ கதிரர்தொடந்துநல்கத்தரும்.

தொடர்ந்தபாக்கியலாபாதியினேடுபொன்
றய்யவுத்தமத்திலுறமன்னராற்
படர்ந்தபாக்கியபாக்கியத்தன்லாபர்
பாரியாதிநற்பாக்கியலாபத்துறத்
தொடர்ந்தவப்போதிடத்தோகைக்காகுமத்
தோகையாதிசுபன்கணவன்கூடி
யடர்ந்தவுச்சமேசம்பத்தவனதே
யன்பர்தேனுவீமேசராளித்ததே.

கூ-ஆ மிருசியாதிபதியுடன்கூடியிருந்தகிரகம் குருவாய்குருலா பாதிபதியுமாய் பிரபலலாபாதிபதிகள் பாரியஸ்தானத்திலிருக்கப் பா ரியஸ்தானுதிபதி லாபபாக்கியத்திலிருந்தால் யிவனிடபாக்கியம்யிவனு யுசுமுள்ளளவுஞ் சித்திக்கும்.

லாபஸ் தானுதிபதிசுபனுமாய்யிந்த பாரியஸ்தானுதிபதிக்குயிவ ன்வனஸ்தானம் வுச்சருசியாய் அங்கேயிந்த அதிபதியிருந்தால் யிவ னிடபாக்கியம் ஐஸ்வரியம் அர்த்தலாபமும் யிந்த பாரிக்குவிருத்தி.

யிந்தப்படியிருசி கஉ-க்கும். அதிபதிகளுந்தேறியிருந்தால் தன லாப பூமிவாகனம் யிப்படிக்கொத்தயிடங்களில் சேர்ந்திருந்தாலும்யி ந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் அவரவர் யிருசியிலேஆட்சி யாயிருந்தாலும், அவர்களுக்கு தனப்பிருப்தியுண்டு.

பாக்கியஸ்தானுதிபதி, லாபஸ்தானுதிபதி தேகாதிபதிகள் தன லாபகேந்திர திரிகோணங்களில் நிற்கில் போகசம்பன்னருயிருக்கும்.

கூ-ஆமிடத்தில், இரவிமதிநிற்கில் ஐஸ்வரியலாபமுண்டு.

சேயாகில் சேவகவிர்த்தி பூமிலாபமுண்டு.

புதனுகில் வித்தை தனம் சுகம் பந்து பாக்கியமு முண்டாய் யி ட்டுண்ணும்.

குருவாகில், ஐஸ்வரியம் புத்திரசுகமும்பாக்கியசம்பத்துமுண்டு.

சுக்கிரனுகில் பூமிலாபம் வஸ்திர அலங்காரமுண்டு கோவர்த்தன சமஸ்தபாக்கியமுமுண்டு.

சனியாகில், கலகம் சோரதாசிகள் விர்த்தியுமாமெனவறிக.

## குருபலன்.

சுபக்கிரகம், சுபக்கிரகருசியிலிருந்தாலும் உத்தமாதிபதியுடன் கூடியிருந்தாலும் அவரிடபார்வையுண்டானுலும்-சுபபலன் ஆதியிலே யீனம், அந்தியத்திலே பிரபலமாம்.

இந்த தர்மஸ்தானகிரகம் யெந்தசாதி அந்தச்சாதியே குருஸ்தா னம் கூ-அமிடத்ததிபதியும் அதிலிருந்தகிரகமும் குருவானுல் யிந்த தேகி பிராமணங்கையி லுபதேசமும் வித்தையும் பிருமணமுகாந்திர த்தில்வரும் சமஸ்தபாக்கியமுமுண்டு.

சுக்கிரனுனுல் பிருமணகுரு யிவன்கையில் வுபதேசமாகும் யிப்ப டியெந்தக்கிரகமானுலும் அந்தந்தகிரகத்தை அடுத்தசாதியே குருவுப தேசமும் அந்தச்சாதி மந்திரங்கள் யிந்தக்கிரகம் தனலாபகேந்திர தி ரிகோணங்களிலிருந்தால் அந்தவுபதேசவித்தை பலிக்கும்.

கூ-அ-மிஉ-ஆ மிருசியிலே அஸ்தமானமாயிருந்தால் பலியாது.

## தர்மம்.

தர்மஸ்தானக்கிரகம் குருவானுல் பிராமணர்க்கே தானதர்மம் பண்ணிக்கொண்டிருப்பர், சுக்கிரனுகில் பிராமணர்க்குத் தர்ப்பணமும் ஆயுத அப்பியாச முடையவனுமாயிருப்பன்.

இப்படி அந்த தர்மஸ்தானக்கிரகம் யெந்தக்கிரகம் யிருசியாச் சுது அந்தக்கிரகசாதி தர்மத்தில் நடக்கும், அந்தச்சாதிபார்க்கே தா னதர்மம் பண்ணுவன்.

இந்தக்கிரகங்களாலே தர்மியென்கிறதுகண்டு நகற்கோள்கள்மேவ உத்தமர்நோக்க அவரூடுறவாயிருக்கசு சொல்வதேயாம்.

ஆமெனக்கோள்பல வறிந்துளாசெய்திட
அரையுமுர்ம மதைச்செவிக்கொண்மே
தாமனுமொன்ப தாமோரையாதியெச்
சாதியச்சாதி யேகுருவாய்வரு
மேமாதன மாச்சாதிக்கேயிடு
மிலங்குதாமாதி நட்புற்றுநோக்கினும்
நேமநால்வகைச் சாதிக்கோள்ருசியி
னிட்டையேசித்தி யாமெனநிச்சியே.

## • அரங்கெடும் நஷ்டம்.

கூ-ஆ மிருசியாதிபதியும் பாக்கியகாரகனாகிய குருவும் பாக்கியஸ்தானத்திலிருந்து கிரகமும் இந்த-ரு-பேரும் நீசசத்துருக்களாய் பாபக்கிரகங்களாய் நீசசத்துரு ருசிகளிலிருக்கினும் இப்படிக்கொத்த கிரகங்களுடனே கூடியிருக்கினும் யிவர்கள்பார்க்கினும் யிவர்கள் ருசியில்நிற்கினும் க-அ-யஉ-ஆ மிருசியிலிருந்தாலும் இந்த அதிபதிகளுடன் கூடியிருந்தாலும் யிவர்கள் பார்வையுண்டானாலும் பாக்கியநஷ்டம் தனநஷ்டம் குருநஷ்டம்.

### நிர்ப்பாக்கியன் யிரந்துண்ணும்.

இவர்களிருந்த தனாதிபதியும் இப்படியிருந்தால் அந்ததேகி நீர்ப்பாக்கியனு யிரந்துண்ணுவன்.

### ஆச்சம் நோய் சோரதாரன் கோட்சொல்லும்.

கூ-ஆ மிருசிக்கு கூ-ஆ மிருசியிடத்ததிபதிக்கிரகமும் யிரவியுடன் கூடியிருந்தாலும், சனி ருகு கேது குஜன் கூடியிருந்தாலும் இந்ததேகி அச்சமும் நோயும் சோரதாரனுமாய் கோட்சொல்லுமென்றும் யிருவினைக்கீடாகக் கட்டளையிடப் பிரமன்விதித்ததெனவறிக.

### க வி.

நிச்சயமொன்ப தானியோனின்றகோ
ணீச்சத்துரு ருசியிற்பாவருய்
மச்சர்பாபக் கிரகங்கள்கூடினு
மயக்குமாறெட்டீ ருறிலறங்கெடும்
பிச்சைபூண்டினும் பாக்கியாதியுடன்
பெரியருகு சனிகேதுசேயுறி
லச்சநோய்தரச் சோரரின்கோட்சொலு
மையர்சொல்ல வயனூர்விதித்ததே.

நேயமுடனென்பதா மிடத்ததிபன்சாதி
 நிசமறிந்தேயவர்மரபின் னிருபர்களினலே
தூயசவுபாக்கியங்கள் சேருமென்றேநல்ல
 சோதிடநூலுரையுணர்ந்தோர் சொல்வர்கண்டீரே.
பிறக்கைந்தாம்வீடு லக்கினத்துக்கைந்தாம்வீடு
 நீள்சரமுந்திரமாகில் நிகழ்த்துபலன்பாதி
அருமைபெறுஞ்சரத்துபய மாகிற்கால்பங்
 காகும்அயிஸ்வரிய மெனப்பகர்வராமே.
அம்புலிக்கஞ்சானக் குருமனைகண்முதற்கொண்டு
 லக்கினத்துக்கைந்தை குணமுடனேகண்டு
பலன் கூறிட வேண்டும்.

பாக்கியவான்.

வேண்டியதோரொன்பதா மதிபதியுங்குருவும்
 விரும்பியகேந்திரதிரிகோ ணங்களிலேமேவில்
ஆண்டகையபாக்கியமா னிருவரிடவருடனும்
 அன்புடனென்பானிடத்தி லணுகினுமிம்மூவர்
பூண்டுவருமகாதிசையி லவர்புசிப்பிலேதான்
 பூரணபாக்கியஞ்சேரும் யேழாமாதிபனைத்
தீண்டிறலாபாதியுற வாய்க்கூடினல்லோர்
 செறியுமனையுறிலவர்க டிசையிற்பாக்கியமே.

## பத்தாம் பாவகம்.

கவி.

மொழிந்திடும்பரம புண்ணியம்புவியாண்
 முயன்றுபட்டணங்க டாபித்தல்
பொழிந்திடுமிரக்க ஞானபூசனைகள்
 புகுமனைபிதாவுடன் பவங்கள்
ஒழிந்திடுமினிய தேவதாபத்தி
 யுயர்சவுரியம் பிரதாபம்
இழிந்திடுமிரவு கருப்பமூண் புடவை
 யிவைபத்தாமிடப்பெய ரென்னே.

சத்கருமம்.

சத்கர்மாதிகுரு துர்க்கர்மாதி சனியென்றறி

கர்மஸ்தானத்திலிருந்தகிரகம் நட்பாட்சி யுச்சம்பெற்று யெவ்வ ன்னருய் சுபக்கிரகங்களாயிருக்கினும் அல்லது இப்படிக்கொத்த கிர

கங்களுடன் நற்கிர கந் ாலும் பார்வையுண்டானாலும் தனலாபகேந்தி ரதிரிகோண தந்தைபுத் ந்தாலும் இந்ததேகி சத்கர்மமும் பிரதாபமும் பவுஷயமும் சுகர்மேசு முள்ளவனு யிருப்பன்.

மேவநீ கர்மஸ் சம்பந்தக்கிரகங்கள் சனி குரு கர்மஸ்தானாதி இந் தமூவரும் யி துநற் ருசியாதிபதிக்கிரகங்கள் நட்பராய்வலிபெற்றிருந்தா ல் சத்கருமங்களும் யெக்யாதிகளும்பண்ணும்வெகுபிரதாபம்சித்திக் கும.

குரு சுக்கிருள் இப்படி பார்வையுண்டானாலும் யெக்யாதிகரும ங்கள் சித்திக்கும்.

குரு சுக்கிருள் பலவான்களா யுத்தமஸ்தானத்திலிருந்தால் இவ ர்களிருந்த யிருசியாதிபதியும் அப்படியேபெலாஷ்டனாகயிருந்தரல் அ வர்களுடனெத்தனைசுபக்கிரகங்கள் கூடியிருந்ததோ அத்தனையெக் கியாதிகளும் இந்தபிள்ளைக்கு சித்திக்குமெனவறிக.

## தனப்பிருப்தி ஜீவன்பலன்.

கர்மஸ்தானாதிபதியும் கர்மஸ்தானக்கிரகங்களும்சுபராய்தேகிக்கு நட்பனாகிய இரவியாகில் பிதுர்பிருப்தி.

இரவியீனனாய் பிதுர்ஸ்தானத்திலிருந்தாலும் கர்மாதிபதிமாது ருபிதுருஸ்தானத்திலிருந்தாலும் மாருதனப்பிருப்தி.

கர்மஸ்தானத்திலே குஜனிருந்தாலும் குஜன்கர்மஸ்தானாதிபதி யாயினும் கர்மேசனுடன் கூடியிருக்கினும் அவன்பார்க்கினும்கர்மாதி பதி குஜனுடைய ஆட்சியிருசிலிருக்கினும் இவனுக்கு சத்துருதனப் பிருப்தியுண்டு.

புதனாகில் மித்துரு தனப்பிருப்தி

குருவாகில் இருஜாக்கள்தனமுஞ் சகோதரர் தனப்பிருப்தி.

சுக்கிரனாகில் ஸ்திரீ தனப்பிருப்தி.

சனியாகில் அன்னியதனப்பிருப்தி.

ருகு கேதுக்களாகில் யீனசாதி தனப்பிருப்தியெனவறிக.

## அர்ச்சுனம்.

கர்மாதிபதி கர்மஸ்தானத்திலிருக்க அவனுடன் சுபக்கிரகங்கூ டிபெலஷ்டராயிருந்தால் அந்தகர்மாதிபனுக்குள்ள அர்ச்சுனம் இவ னுக்கு வெகுவிதமாய்வந்து சித்திக்கும்.

அந்தந்த கர்மஸ்தானக்கிரகங் கர்மேசனுடன்கூடி ஜென்மலக்கி னத்திலிருந்தாலும் இலக்கினாதிபனுடனே கூடினும் இந்த கர்மாதிபன்

இலக்கினாதிகளைப்பார்க்கினும் அந்த கிரகத்துக்குச்சொன்ன அர்ச்சுனங்களெல்லாம் வந்து சித்திக்கும்.

உத்தமஸ்தானத்திருக்கில் பிரயாசமில்லாமல் வெகு தனம்வந்து சித்திக்கும்.

கர்மாதி தனாதிபனுடனேகூடினும் இந்த கர்மாதிபன் யெந்தக்கிரகம் அவன் பிரபலனானல் அந்தக்கிரகத்துடனே அர்ச்சுனத்தில் வெகு தனங்கூடும் அவனுத்தமஸ்தானத்திலிருந்தால் பிரயாசமின்றி வெகு தனங்கூடும்.

இந்தக்கர்மாதிபன் இந்தப் பிருதுருஷேத்திருதிகளுஞ்சேர்ந்தால் கர்மாதிபனுக்கு யேது அர்ச்சுனம் அந்த அர்ச்சுனத்தை பிராதுரு இவனுக்கு தேடிக்கொடுக்கும்.

கர்மாதிபன்-ச-ஆ மிருசியிலே தேறிநிற்கில் வாகனமும் கல்வியும் ஞானமும் போசனசவுபாக்கியமு முண்டாம், அந்ததேகி மித்துருவுஞ் சுபனுமானால் மாதசம்பந்த வகையிலே சுயார்ச்சிதஞ்சித்திக்கும் நிக்ஷேபமுஞ் சித்திக்கும் பந்துக்களாலே தனமும்வந்து சித்திக்கும் வித்தையினால் வெகு தனங்கூடி சீவிக்கும்.

கர்மாதிபதியும் மாதுருருசியாதிபதியுங் கூடி வுத்தமஸ்தானத்தில் வுச்சமாய் தேறிநிற்கில் நிதிநிட்சேபம் பாவிக்கவல்லவரும்.

சர்வவிக்கனமுந் தீர்த்தருளும் சிவன்விரும்பநூல்கள் பண்ணப்பட்ட கர்மாதிபன் பிதுர்புத்திரஸ்தானமாகிய ரு-ஆ மிருசியில் சுபனாய் நட்பாட்சியுச்சம்பெற்று பிரபலனாயிருந்தால் பிதுர்சுயார்ச்சிதம் புத்திரன் சுயார்ச்சிதம் தன் புத்தியினால் சுயார்ச்சனம் இவைகள் வந்துசேரும்.

கர்மாதிபதியும் புத்திருதிபதியும் நட்பாய் வுத்தமஸ்தானத்திலிருந்தால் பிரயாசையின்றித் தேடிக்கொடுக்கும்.

கர்மாதிபன் சு-ஆ மிடத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று பிரபலனாய்க்கூடினும் சு-ஆ மிருசியாதிபதியுடன் இப்படி கூடியிருக்கினும் ஞாதிசத்துருக்களால் தனம்வந்துசேரும்.

கர்மாதிபன் எ-ஆ மிடத்தில்சேர அந்த பாரியாதிபதியும் யிவனும் நட்பாருய் சுபரூபமாய் பிரபலருய் நட்பாட்சி யுச்சம்பெற்று வுத்தமஸ்தானத்தில் சேர்ந்திருந்தால் பாரியின் சம்பந்தத்தில் தனம்வந்து சிற்திக்கும்.

க வி.

விக்கினந்தீர்த்தருள்வார் விளப்புநூல்
விளங்குகர்மாதி பிதுர்புத்திரரோறையிற்

றக்கநற்கிர கந்தேறியுருக்கினுந்
தந்தைபுத்திரர் சுபாவிகமூந்தரு
மிக்ககர்மேச னுறிலாரூதிபன்
மேவநீக்கோ டனம்வருஞாதியாற்
புக்குநற்கோள் கர்மாதியேழாதிபாற்
பொருந்துநட்புச்சம் பொன்வரும்போதவே.

கர்மாதிபன் கூ-ஆ மிருசியிலே நட்பாட்சி யுச்சம்பெற்று தேறி நிற்கினும் யிந்த கூ-ஆ மிருசியாதிபனுடன் இப்படிகூடி வுத்தமஸ்தானத்திலிருந்தால் பிரயாசையில்லாமல் தர்மத்தினுலும் குருதலத்தினுலும் இந்த அதிபதிக்குச்சொன்ன அர்ச்சுனங்கள் பிரயாசையினறி சித்திக்கும்.

கர்மாதிபதி கர்மஸ்தானத்தில் சுபனுமாப்பிரபலனுமாயிருந்தால் எக்கியாதி கர்மங்கள் பண்ணிவைத்துத் தனந்தேடும் யிவன் தனலாப கேந்திரத்தில் வுத்தமனுகப் பலம்பெற்றிருந்தால பிரயாசமிலலாத அர்த்தலாபமும் ஐயிஸ்வரியமும் பிரதாபமும்கீர்த்தியினுலும் தனம்வந்து சித்திக்கும்.

கர்மாதிபன் வியஸ்தானத்தில் சேர்ந்திருந்தால் வியயாதிபதியும் கர்மாதிபதியும் பிரபலருமாய் சுபமாயிருந்தால் பிரயாசமில்லாமல் தேடி சத்கருமங்களிலே செலவழிப்பன்.

கர்மேசன் இரவி மதியடன்கூடி அவர்கள் ஆட்சியிருசிகளி லிருந்தாலும் அவர்கள் பார்வையுண்டானுலும் இவன் பட்டாபிஷேகமான வனைச்சேர்ந்து அவர்களாற் சீவித்துக்கொண்டிருப்பன்.

கர்மாதிபன் குஜன் சம்பந்தத்துடன் கூடியிருந்தால் சேனுதிபதியினுற் சீவிப்பன்.

புதன் சம்பந்தஞ்சேர்ந்தால் குமாரத்திகளாலும் ஸ்திரீ ஜெனங்களாலும் கெணிதவித்தை லிபிகளாலே சீவிப்பன்.

குரு சம்பந்தமானுல் தெயவங்களாலும் பிருமணுருலும் பிர்மவித்தையினுலும் பிரதானியாலும் கோவிலினுலும் புத்திரர்களாலும்வெகு தான்னியம் சித்திக்கும்.

சுக்கிரன் சம்பந்தமானுல் பாக்கியஸ்திரீகளாலும் கோவிலினுலும் அஸ்வகெஜ கனகரத்ன மாணிக்கங் கிரயவிக்கிரயங்களினுலும் பிரதானிகளாலுஞ் சீவிப்பன்.

கர்மஸ்தானுதிபதி சனி சம்பந்தமாகில் சூத்திரரண்டையில் சேதித்து வன விருட்சங்களுக்குள்ளே இமிசைபண்ணி சிலம்பம்பழக்கிவித்து பாபகர்மங்களை போதித்துச் சோரவிர்த்தியினுலெ சீவிப்பன்.

குஜன் ராகு கேது கர்மாதிபனோடு கூடியிருந்தாலும் கர்மஸ்தானத்திலிருந்தாலும் கொடும்பாடுள்ளவனுமாய் கொடுங்கிருஷிசெய்து அக்கினி வித்தையினாலும் விஷப்பிரயோகங்களினாலும் சர்வாங்கவித்தையினாலும் மாயயோகத்தினாலும் சீவிப்பன்.

யிதுவெல்லாம் பாக்கியாதிபன் லாபாதிபன் கர்மாதிபன் இவர்கள் மகாதிசையிலிருந்த கர்மாதிபன் அந்தத்திசையிற் கூடிநின்றவர்கள் திசையிலாகிலுஞ் சித்திக்கும், கர்மபாக்கியர்பரவு மந்தத்திசையிலாகிலும் பலிக்குமெனவறிக.

க வி.

பலிக்குமீசர்தா ளன்பருக்கேயினி
பாக்கியனத்திசை பத்திலிருந்தகோ
லெக்குஞ்சேத்திர நாலாறு நாலாதிபன்
றுய்யபத்துறப் பத்தினனுறு
விலக்குஞ்சேய் கேந்திர திரிகோணமே
யிலங்கு பூமியி லேயது நிட்சேப
நிலைக்கொள்கர்மாதி லாபத்திலாபமே
னீடிநிற்கவு மார்ச்சிதநேறுமே.

பாக்கியாதியினிட மகாதிசையில் கர்மஸ்தானத்திலிருந்த கிரகத்தினிட க்ஷேத்திரசம்பந்தமுமாகியது ௪-ஆ மிடமானால் அந்த ௪-ஆமிருசியாதிபதி கர்மஸ்தானத்தி லிருக்க கர்மஸ்தானாதிபதி ௪-ஆமிடத்தில் குஜனிட ஆட்சியிருசிகளிருந்தால் அந்தந்த ஸ்தானத்துக்கு திரிகோணயிருசி நிட்சேபஞ் சித்திக்குமென்று பிரபலத்துக் கீடாய்ச்சொல்ல கர்மாதி பிரபலனாய் லாபஸ்தானத்திலிருக்க அந்த லாபாதி லாபஸ்தானத்தில் நட்பாயிருந்தால் இவனுக் கிரண்டுஸ்தானக்கிரகங்கள் அர்ச்சுனங்களுஞ் சித்திக்கும்.

கர்மஸ்தானத்தில் கர்மாதிபனும் லாபாதிபனும் தேகாதிபனும் நிற்கவும் கர்மலாபங்களில் குரு கூடிநிற்கில் யிவனுடன் யெத்தனைக்கிரகங் கூடியிருந்ததோ அந்தக் கிரகத்துக்கு அர்ச்சுனங்கள் ஒன்றுகோடியாய் சித்திக்கும்.

அந்த கர்மஸ்தானத்தில் சூத்திரக்கிரகங்களும் ருகு கேதுவும் தேகாதிபதியுங் கூடியிருந்தால் அந்த அர்ச்சுனங்களும் அந்தந்த பாபங்களும் சித்திக்கும் இந்த கிரகங்கள் க்ஷீண அஸ்தமான நீசருமிருந்தால் பாவத்தை வர்த்திப்பார்கள்.

௩-௬-௧௧-௧௨-ஆ மிடம் பாபக்கிரகமிருந்தால் துர்க்கருமங்களைச் செய்து நரகத்திற் கேதுவானவரெனவறிக.

கவி.

பதினொன்றுமூன்ருறு மீருறிற்
பாவர்துரக்கர்மமே யணுகும்.

கர்மஸ்தான சம்பந்தக் கிரகங்களும் கர்மஸ்தானத்திலிருந்த கிரகங்களும் அஸ்தமான நீசக்ஷீணராப் சத்துருபாபருசியிருக்கினும் இப்படிப்பட்ட கிரகங்களுடன் கூடிநிற்கினும் யிவர்கள் பார்க்கினும் யிவர்கள்சு-கூ-கஉ-ஆ மிடத்தில் மூட நீசசத்துரு க்ஷீணருயிருந்தால் இந்த தேகிக்கு துர்க்கருமங்கள் சித்திக்கும் யிவன் சத்கருமங்களைவுதாசினம்பண்ணுவன் இடும்பனுயிருப்பன் க்ஷீணபலமுடையவன் சத்துருக்களுக்கு ஏவல் செய்துண்ணும் துக்கஞ்சித்திக்கும் கருமாஸ்தாறுதிபதி சு-அ-கஉ-ஆ மிடத்தில் தேறிநிற்கில் அவர்களுக்குச்சொன்ன அர்ச்சுனங்கள் சிறிது தேறுமெனவறிக.

கவி.

சேர்க்கர்மாதிபன் மூடநீசத்துறத்
தரிததிரந்தாய் பிதாவாதிபாவருய்
மூர்க்கருயங் குறவிபாசாரியார்
முயன்றிடும்பிதாப் பாரிகர்மாதியும்
பாக்கவாரெட்டி ருறு நிர்ப்பாக்கியர்
பாவகர்மியா றெட்டுப்பன்ரெண்டுற
வேர்க்கவீன்றவர்களாய்ப் பொன்றடியே
யெந்தையன்பர்க்கி டாவார்விதியிதே.

கர்மஸ்தாறுதிபதி க்ஷீணமூட நீசமாயிருந்தால் யிந்ததேகி தரித்திரவானு யிரந்துண்ணுவன்.

மாதுருபிதுருகிரகங்கள் பாபிகளாய் ருகு கேதுவுமாய் அந்தஸ்தானத்தில் நிற்கில் விபசாரத்தில் தேடிக்கொடுக்கும்.

பத்தாவது ஸ்தானமாகிய கூ-ஆமிராசியாதிபதியும் பாரியாதிபதியும் காமாதிபதியும் இந்த மூவரும் சு-அ-கஉ-ஆ மிடத்தில் சேர்ந்திருந்தால் இவன் நியாயத்தில் வுடமை தேடுவன் யிவர்களிலிருந்த யிருசியாதிபதிக் கிரகங்களும் இப்படியிருந்தால் இவன் நிர்ப்பாக்கியனென்று சொல்லப்படும்.

கர்மாதிபன் க்ஷீணமூடநீசமாய் சு-அ-கஉ-ஆ மிடத்திலிருந்தால் க்ஷீணருகயிருந்து ஈனத்தொழிலினல் சிலதனந்தேடி ஜீவித்து அன்பருக் கிடர்செய்து நரகத்திற் கேதுவாய்ப் போவாரெனவறிக.

விருத்தம்.

விதித்தபொன்புகர் கர்மலாபாதிகள்
வெய்யநீசம் பகைமூடத்திலுறப்

பதித்தயாகம்பண் ணுர்கள்கர்மாதிபர்
பாவருய்பகை நீசருய்ப்பார்க்கினும்
கொதித்தவீனத் தொழிலாற்ஜீவித்திடுங்
கொடியர்பன்னென்று மூன்றுறத்தீயர்வாழ்
கதித்தமகாதிசை யிற்சுபர்தீயருங்
காட்டுநன்மை யோடுறுந்தீமையே.

## சீவனகாலம்.

குரு சுக்கிரன் கர்மஸ்த ஞதிபதி லாபஸ்தாஞதிபதி பாவருய்ப் பொல்லாத ஸ்தானங்களிலிருந்தாலும் இந்த கர்மஸ்தானத்தைப் பார்க்கினும் துர்க்கருமங்களுமுண்டாய் சூத்திரசம்பந்தத்து லிங்கிசை பண்ணி யீனவிர்த்தியினுல சீவிப்பன்.

சுபக்கிரகங்கள் வுத்தமஸ்தானத்தி லிருந்தாலும் பாபக்கிரகங்கள் ௬-௯-௧௧-ஆ மிடத்திலிருக்க இந்த பாபக்கிரகங்களுக்குப் பாபச் சுபனங்கள் என்னவுண்டோ அவைகளெல்லாம் பிரபலனிட மகாதிசையில காட்டும்.

பொல்லாத க்ஷேத்திரங்களில் யிருந்தவன்திசையில் பொசிக்கிற போது பலன்களை மத்திபமாகக்காட்டும்.

மித்துரு திசைக்குள்ளே அவனிட அந்தரத்தில் ஒன்றுமுக்காலாக பலன்காட்டும்.

சத்துருக்கிரக க்ஷேத்திரத்தில் அஸ்தமான க்ஷீணமாயிருந்த கிரகததின் அந்தத்திசையில் அற்பபலனைக்காட்டும்.

மகாதிசைக்கிரகமும் அந்தரத்திசைக்கிரகமும் இரண்டுபேரும் பாபக்கிரகமுமாய் சத்துருக்களாய்ப் பொல்லாதஸ்தானத்தில் கூடியிருந்தால் தன்னிடதிசையில் நிட்பலன்காட்டும்.

தானிருந்தஸ்தானத்துக்கு வுத்தமஸ்தானத்திலிருந்தால் மத்திய பலன்காட்டும்.

௯-அ-௧௨-ல் யிருந்தால் வியாதியால் பீடிக்கும் சத்துருக்களாலே யாகிலும் பீடிக்குமெனவறிக.

விருத்தம்.

குறைவிலொன்பதாமிடத்திற் கோவும்பலமாய்ச்சுபர்வீட்டில்
வுறையச்சுபக்கோள்பார்க்க மதியுகந்துசலருசியிலிருக்க
பின்னுநிலவுச்சம்பெறவே நிறைந்தகங்கானதிதோய்வன்
அறையுமிவ்வார்வலிகண்டு அன்பாய்புவிமீதிதுறையே.

கலி.

சூழ்ந்தகன் மாதியைத்தானும்
பப்பவேருரு சுக்கிரனுமேபார்க்கில்
பண்ணுவன் பாகமேபலவும்.

விருத்தம்.

நீடுபத்திற்சேயிருக்கிற் சூரன்டாட்டீகன்
நிலமையுளன் ஆசாரன் வெகுசனபூஜிதனும்
றேடுகின்றபிரதாபி நினைத்தபடிமுடிப்பன்
ஜெகராஜர்சேர்வைதனம் புத்திரபாக்கியவான்
நீடில்கொடுவருஞ்சோர ராக்கினிகருவிபயமா
மெக்கியாதிகன்மமெனு மியலுடையனுகும்
கூடுபுறவச்சிலை அம்புயமலர்க்கண்மயிலே
குறிப்புடையர்கணிதத்தோர் கூறினதிவ்வகையே.

இதுவுமது.

உள்ளபத்தாமாதிபதி ஒன்பானங்கிஸத்தானேறி
மெள்ளரெண்டாமிடத்திலுற விரும்பியொன்பான்தனஞ்சேர்
கள்ளமிருக்கில்யோகபலன் கதித்தவரசரடிதொழவே
கொள்ளுலட்சம்பொன்றேடி குலாவியிருப்பன்யீரேழுமேல்.

# பதினோரும் பாவகம்.

---

விருத்தம்.

வென்றுமூத்தவர் சேவித்திடும்பேர்க
ளிளங்கொடிமனைவி பொன்வித்தை
மின்னியலாபம் பயிர்பரிவேழம்
விளங்குநல்லறிவுதண்டிகையும்
முன்னியமனத்திற் றுக்கமுந்தீரு
முத்தரீயஞ்செறி வகையும்
பன்னியபதினேருமிடங்கொண்டு
பதிந்தருள்புரிவர் பாவலரே.

## இலாபபலன்.

இரவிமதிகள் யிலாபாதிக் கிரகங்களென்று பெயர் இவர்களும் இந்த லாபஸ்தானத்திலிருந்த கிரகமும் யிலாபஸ்தானுதிபதியும் நட்பாட்சி யுச்சம்பெற்றும் பெலஷ்டருய் வுத்தம ஸ்தானங்களிலிருக்க

அல்லது இந்தஸ்தானக்கிரகங்களுடன் கூடியிருக்கினும் இவர்கள் பார்க்கினும் இவர்களிருந்த ராசியாதிபதிக் கிரகங்களும் தனலாபகேந்திர திரிகோணங்களிலிருந்தால் இந்த தேகிக்கு ஆயுசும் ஐஸ்வரியமும் வெகு விருத்தியமும் வுண்டாகும்.

கிருஷிஸ்தானாதிபதி ௯-ஆ மிராசியில் நிற்கினும் ௯-ஆமிராசியாதிபதியுடன்கூடி நட்பனுயிருந்தால் யிந்ததேகிக்குப்பிதுருலாபமுண்டு ஐஸ்வரியமுண்டாய் மோட்சத்துக் கினியவராவா ரெனவறிக.

விருத்தம்.

கங்கைசூடியர் கண்லாபகர்த்தருங்
 கனத்தலாபாதி நட்பாட்சியுச்சருய்த்
தங்கள்கோடன கேந்திரபாக்கியங்
 தரணியாள்விக்கு மேயென்றகோடியா
யிங்கிரக்கோ ளிருக்கினுங்காரக
 மிலக்கினங்கோ டிசையிலெல்லாந்தருஞ்
செங்கதிர்லாப ருகவளர்பிறைத்
 தேறிநோக்கத் தேசாதிபருகுமே.

மதியுடன் குரு சுக்கிரன் லாபாதியாய்க்கூடியிருக்கினும் இவர்கள் பார்க்கினும் வெகு அயிஸ்வரியமும் தனதானியமும் வஸ்திரலாபமும் வாகனமுதலாகிய வஸ்துலாபமுஞ் சம்பூர்ணமாகவுண்டு.

லாபாதிய னெந்தக்கிரகமோ அந்தக்கிரகத்தையாதல் தனலாபஸ்தானத்தையாதல் சுபக்கிரகம் பார்க்கினும் நிற்கினும் வுத்தமபலன்.

லாபஸ்தானக்கிரகம் வுச்சமஸ்தானமானல் முக்கால்வரிசைபலன் கொடுக்கும்.

இலாபாதிபதி நட்பனுகி தேக யிலக்கினத்திலாதல் தேகாதிபதியுடனாதல் கூடி நட்பனுயிருந்தால் யிந்ததேகி ஐஸ்வரியமும் அர்த்தலாபமுந் தேகபுஷ்டியுங் காந்தியுஞ்சந்தோஷமும் பூர்ணயுசுடையவனுயிருப்பான்.

இந்த லாபாதிபதி மித்துருவாய் தனஸ்தானத்தில் தான் தனஸ்தானதிபதியுடன் தான்கூடி நட்பனுயிருந்தால் தனலாபமுஞ் சௌபாக்கியமும் வெகு சம்பத்து முண்டு.

லாபாதிபதி நட்பாட்சியுச்சமாய் பிதுருஸ்தானமாகிய ௯-ஆ மிராசியில் நிற்கினும் ௯-ஆ மிராசியாதிபதியுடன்கூடி நட்பனுயிருந்தால் இந்ததேகிகட்கு பிதுருலாபமும் ஐஸ்வரியமுமுண்டாய் மோட்சத்துக்கினியவரும்.

பிருதுரு ஸ்தானாதிபதியும் லாபாதிபதியுந்தேறி நட்பாய்ப்பிரு துருஸ்தானத்தி லிருக்கில் பிருதுருலாபமுண்டு.

தேகாதிபதி பிரபலனாயிருக்க தேகியிட லாபாதிபதி பிருதுருஸ் தானத்திலிருக்க பிருதுருதிபதி க்ஷீணனாயிருக்க யிந்தத்தேகியிட தன த்தை யிந்த பிருதுருபொசிக்கும்.

பிருதுருதிபதி பிரபலனாயிருக்க தேகாதிபதி க்ஷீணனாயிருக்க தேகியிடலாபாதி பிருதுருஸ்தானத்திலிருந்தால் யிந்தபிருதுரு தனத் தை யிந்ததேகி பொசிக்குமென்று அவரவர்க்கமைத்தது

லாபாதிபன் பிருதுருஸ்தானம் பூமிஸ்தானங்களில் மித்திரனாயி ருக்கினும் அல்லது ௪-ஆ மிராசியில் இந்தப்படி இவனுக்கு நட்பனாயி ருந்தால் ௪-ஆ மிடத்ததிபதியுடன் கூடியிருக்கினும் அல்லது வுத்தம ஸ்தானங்களி லிருக்கினும் வுத்தமஸ்தானாதிபதிக் கிரகங்களுடன்கூடி பிரபலனாயிருக்கினும் இவனிட சகோதரர்க்கு வாகனசவுக்கியமும் வித்தையும் புத்தியும் சம்பூர்ணமாகவுண்டு, யிந்த லாபாதிபன் பிரபல னாயிருக்கவேணும்.

லாபாதிபன் யெந்தெந்த ஸ்தானங்களிலிருந்தான் அந்தந்தஸ்தா னத்திற் கடுத்தபேர் அயிஸ்வரியமும் அர்த்தலாபமும் யிந்தஸ்தானாதி பதிக்குக்கொடுக்கும்.

லாபாதிபன் சத்துருஸ்தானத்தில் பிரபலனாயிருக்க சத்துருஸ் தானாதிபன் பலக்ஷீணனுமாயிருந்தால் அந்த சத்துருதனம் யிந்ததே காதிபதிக்குச்சேரும்.

லாபாதிபன் பகைநீசக்ஷீணனாய் சத்துருஸ்தானத்திலிருக்க இந்த தேகியின் அயிஸ்வரியமும் அர்த்தலாபமுஞ் சத்துருவுக்கே சேரும் லாபாதிபன் தனஸ்தானஞ் சேர்ந்தால் இந்த தேகிக்குத் தீரக்காயுசு உண்டாமெனவறிக.

விருத்தம்.

குறித்தலாபாதி மூன்றினாலேந்துறக்
குணசகோதரர் வாகனவித்தைநீ
டெறித்திலாபாதி யெங்கணிக்கினுந்
தேறிநின்றோரை யாதியும்பொன்றரும்
பறிக்கும்பாலர் பகையினிற்றேறிடப்
பகைமன்சீணரு கிற்பலனிட்பலன்
சிறக்கவீயு மிலாபிதனமுறத்
தேகிக்காயுரு தேவன்செலுத்துமே.

இதுவுமது.

செலுத்துந்தேகாதி பன்பதினொன் றுறத்
தேறுநட்புறிற் றேகசவுக்கியம்
பலிக்குமுன்னுள்ள வந்தத்தானதிபன்
பரிந்திலாபத் துறத்தனவான்பிதா
நிலத்தன்லாபந் துறலாபிபொன்பதி
நிற்கத்தந்தையைப் பார்க்கத்தனதிட
நிலைக்கொள்புத்திருதி லாபத்திற்றேறினு
நீடுமைந்தர் வீமேசருரைக்குமே.

தேகாதிபன் லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கில் தேக சவுக்கியம் தேககாந்தியும் ஐஸ்வரியமும் யிவனுள்ளமட்டு மூண்டாய் வாழுவன்.

தனஸ்தானதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்று நிற்கில் வெகுதனந் தேடுவன்.

லாபாதிபதி பிதுருஸ்தானமாகிய கூ-ஆ மிடஞ்சேர்ந்தால் இவன் பிதாதேடின தனத்தைப்பார்க்கினும் அதிகமாகத்தேடுவன்.

இவன் பத்திருதிகளுக்கும் இவன் அயிஸ்வரியமும் அர்த்தலாபமுமுண்டு.

புத்திரஸ்தானதிபதி லாபஸ்தானத்தில் நட்பாட்சி யுச்சம்பெற்றுச்சேரில் வெகு புத்திர புத்திரிலாபமுண்டாம்.

பிருதுருஸ்தானமாகிய கூ-ஆ மிருசியாதிபன் லாபஸ்தானத்தில் பிரபலனாயிருந்தால் அந்த பிருதுருஸ்தான பலமுண்டானது யெல்லாமிவனனுபவிப்பன் இப்படி யெந்தஸ்தானதிபதி சேர்ந்தாலும்வெகு லாபமுண்டு.

சஷ்டாஷ்டம் வியாதிபதிக்கிரகங்கள் இப்படி லாபஸ்தானத்திலிருந்தால் தங்கள் திசையில் தங்கள் சம்பந்தமான பலன்களை நன்மையே பண்ணுவார்கள்.

காரியஸ்தானதிபதி பிரபலனாய் லாபஸ்தானஞ்சேர்ந்தால் அந்த லாபஸ்தானத்தில் யெத்தனைகிரகம் நட்பாய்க் கூடியிருந்தார்கள் அத்தனை பாரியர்களுண்டாம்.

இப்படி அவரவர்க்கு ௰உ-பாவத்துக்கும் லாபாதிபதிகளிருக்கும் வகை நன்மை தீமை பார்த்துகாண்பது.

இரவி மதிகள் லாபாதிகளானால் சிங்காசனன் ஆனவனண்டையிலே சீவிப்பன்.

குஜன் வலுவினால் தனம்வரும் பூமியினாலுண்டாம்.

புதனானல் வித்தையினாலுங் குமாரர்களாலும் பந்துக்களாலும் கெணித சாஸ்திர லிபிகளாலும் சாதி தனம்வந்துசேரும்.

குருவானால் தன் புத்தியினாலும் மக்களாலும் பிரதானிகளாலும் வேதாப்பியாசங்களாலும் அர்த்தலாபமுண்டாய் ஜீவிப்பன்.

சுக்கிரனானல் பிரதானியாலும் ஸ்திரீ செனங்களாலும் மிருகாதிகளாலும வஸ்திரங்களாலும் நவரத்நங்களினாலும் கோ அசுவ செகசாதி கிரய விக்கிரயங்களினால் ஐஸ்வரியமும் அர்த்தலாபமு முண்டாம்

சனியானல் சூத்திரர்களாலும் ஈனவிர்த்தியினாலும் ஸ்தானபேதத்தினாலும் வனவிருட்சத்தில் காஷ்டகிரய விக்கிரயங்களினாலும் சோரபுத்தியாலும் இங்கிசைகளிலும் ஈனரிடத்துச் சேவகத்தினாலும் ஐஸ்வரயமுமுண்டு.

தேகாதிபதியும் இலாபாதிபதியும் நட்பாய்க்கூடி லாபஸ்தானத்திலேதான் வுத்தமஸ்தானத்திலே தானிருந்து இவர்களிருந்த ராசியாதிபதியும் பாலம்பெறு யிருந்தால் இவன் தேகயிருக்குமளவும் ஐஸ்வரியமும் அர்த்தலாபமு முண்டாய் சுகியாயிருப்பன்.

உச்சனாயிருந்தால் மஹா ஐஸ்வரியமும் அர்த்தலாபமுமுண்டு.

இருவரும் நட்பாயிருந்தவனிட லாபஸ்தானத்தி லிருந்தாலும் வுத்தமபலன்.

உச்சத்துடன் கூடியிருக்கினும் பார்வையுண்டானாலும் பூரணபலன்.

இந்த தேகாதிபதியும் லாபாதிபதியும் இவர்களிருவருடனேயும் எந்தெந்த அதிபதி நட்பாட்சி யுச்சமாகக்கூடியிருந்தார்களோ அவர்கள் லாபத்திலிருந்தால் எல்லாரும் அவர்களிட மகாதிசையில் பலன் தருகுவர்.

அந்தரதிசையிலும் பிரபலனாகில் பாக்கியதேகாதிபதியா யிருப்பனெனவறிக.

விருத்தம்.

இலங்குதேகாதி லாபாதிநட்பா
  யிசைந்துலாபதே கம்முத்தமம்பதி
துலங்கிநிற்கவவ் வோரையதிபனுக்
  துய்யமேதறிற்சுகதேகிசெல்வரா
மலங்கதேகாதி லாபத்தினாதியு
  மதினின்றோர்பகை நோக்கவைத்துச்சருப்ப்
பலன்கொளுஞ்சிவ யோகியுகந்தருள்
  பாக்கியதேகி யென நூற்பகருமே.

இதுவுமது.

பகரும்லாபாதி மூடநீசசத்துருய்ப்
பரிந்துநற்கோ ளகத்தநமத்திப
நிகரும்லாபியா றெட்டுப்பன்ரெண்டிலு
நீசமூடப் பகைசேரிற்பாவியே
சகலலாபாதி சத்துருமூடத்திற்
சாரச்சத்துரு வுக்கேயிவன்றன
மிகலும்லாபி வியமுறவொன்னலர்க்
கீயுமெங்கோனுக் காளாவதில்லையே.

லாபஸ்தானக்கிரகங்கள் மூடநீசருய் சனருய் வுத்தமஸ்தானத்தி லிருந்தால் மத்திபபலன்.

லாபஸ்தானக்கிரகங்கள் பலயீனருய் கூ-அ-யிஉ-ஆ மிடத்திலிருந் தாய் நிஷ்பலன்.

லாபாதிபதி பகைநீசட்சிணமூடமாய் சத்துருஸ்தானத்தில் நிற்க இவன்தேடின தனமெல்லாம் சத்துருவுக்கே தருகுவன்.

லாபாதிபன் வியஸ்தானத்திற்சேரில் சத்துருக்களுக்கேதனமெல் லாங்கொடுப்பன்.

உள்ளமே பெருங்கோயிலாயிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் பக்தனைய் அன்பரு யிரங்குவோர்க்கு லாபஸ்தானத்தில் கிரகங்கள் இரவி மதி நட்பருய் தனலாபகேந்திர திரிகோணங்களில் தேறிநிற்கில் வெகு நன்மையா மென்றறிக.

---

# பனிரண்டாம் பாவகம்.

---

விருத்தம்.

பாவமன்னிய தேசத்திலுக்யோகம்
பணிச்சிலவுட னுறம்போகம்
மேவியசன சவுக்கியம்விகாதம்
விளைந்திடுந் தொழில்புரிகன்மம்
ஆவதோர் தானம் புண்ணியபந்தபாக
மருண்மகனுஞ் சர்வதோவிருத்தி
சேவலங்கொடியோ னருளினைப்பெரியோர்
செப்புவர் துவாதச பலனே.

கவி.

வியாதிபன்வல்லநற்கோ நட்பாட்சியுச்சமாகில்
மனனர்தர்மமுந் தானம்வழங்குமே.

## தியாகி.

வியஸ்தானுதிபதியும் வியஸ்தானத்திலிருந்த கிரகமும் சுபக்கிரகமாய் வியயாதிக்கிரகங்களாகிய சுபக்கிரகங்கள் நட்பாட்சியுச்சம்பெற்று வியஸ்தானத்தில் நிற்கில் தர்மதானம் வழங்கித் தியாகியாயிருப்பரெனவறிக.

## கிரகபலன்.

சுக்கிரன் குரு புதன் இவர்கள் கஉ-ஆ மிருசிக்கிரகங்களாய் தனலாபமேகேந்திர திரிகோணத்தில் பாக்கியசம்பன்னரு யிட்டுண்டு வாழ்வன்.

மற்றபாபக்கிரங்கள் இன்னெறிசேரில் வெகு அர்த்தந்தேடி ஒருவருக்குந் தானதர்மஞ்செய்யாதவரும் மூர்க்கரும் தன்சுற்றமுந் தானும் வாழ்வன்.

வியயாதிப னெத்தனை கிரகங்களுடன் கூடியிருந்தான் அத்தனையிடத்தில் மாளிகைகட்டி வாழ்வன்.

வியஸ்தானமாகிய கஉ-ஆ பிராசி திரருசியானல் தன்னூரில் வீடுகட்டுவன்.

சாருசியானல் பரதேசத்தில் வீடுகட்டுவன்.

வுபயருசியானல் தன்னூரிலும் பரதேசத்திலும் வீடுகட்டுவன்.

குரு சுக்கிரன் வியஸ்தாதிபதியாய் வுத்தமஸ்தானத்தில் லிருந்தால் பிராமணரண்டையில் வீடுகட்டி பட்டவேந்தனுகிய சிங்காசனமுடையவனும் தனபாக்கியவானு யிருப்பன்.

வியயாதிபதி பிதுர்க்கிரகமாய் லாபஸ்தானத்தில் மித்துருவுமாயிருந்தால் பிராமணரண்டையில் வீடுகட்டி பட்டவேந்தனுகிய சிங்காசனமுடையவனும் தனபாக்கியவானு யிருப்மன்.

வியயாதிபதி பிதுர்க்கிரகமாய் லாபஸ்தானத்தில் மித்துருவுமாயிருந்தால் சூத்திரக்கிரமத்தில் தான் சூத்திரசம்பந்தங்களில் தான் வீடுகட்டுவன்.

வியஸ்தானுதிபதி மாதுருக்ஷேத்திரத்திலே தான் பிதுருக்ஷேத்திரத்திலேதான் நட்பாயிருந்தாலும் அந்த அதிபதியோடு கூடியிருந்தாலும் அந்தந்தக் கிரகங்களை அடுத்தபேர்க்கு பிருப்தியுண்டென்று சொல்வமெனவறிக.

## விரய பலன்.

விருத்தம்.

வீமநாதரைப் போற்றார்வியாதிபர்
வெய்யபாவப் பகைநீசமூடராய்த்
தாமிருக்கநற் கோட்டானபாக்கியஞ்
சாவீறாறிற் சத்வநீசத்தராய்த்
தீமைகோளுறச் செல்வம்பொருளெலாஞ்
சினத்தசோணேக்கச் சோராற்கேதமா
நேமநல்லார் பொல்லார்சர்வநாசமே
னீசவுச்சஞ் சரிகொடுதீங்கதே.

## சுவாமியைப்போற்றாமற் றூஷித்தோர்கள்.

ஜெனிக்கும்போது வியஸ்தானமாகிய கஉ-ஆ மிராசி சம்பந்தக் கிரகங்கள் பாபராய்ப் பகைநீச்சங்களாய்ப் நீசட்சீணமூடராயிருக்க நற் கோள் தனபாக்கியங்களிலிருக்க வியத்தானத்தில் பகைநீசராய்ப்பாபக் கோட்கள்நிற்க அவன் செல்வமும் பொருளுமெல்லாம் சத்துருக்கள் கொண்டுபோம் இவன் திரவியமெல்லாஞ் சோரரால் சேதமாம்.

சுபக்கிரகம் நீசவுச்சராய்நிற்கில்நன்மையுந்தீமையுஞ் சரியாய்வாழு மென்று அவரவர் திசைவருங்கால் கிரகவலியறிந்து நிச்சயமாக கஉ-மிராசிக்கும் பலன் சொல்வதெனவறிக.

## பாவகபலன் முற்றிற்று.

---

## சாதாரணமாய் யாவத்சுபங்களுக்கும்

### நிஷித்த நக்ஷத்திரங்கள்.

பரணி, கிருத்திகை, திருவாதிரை, பூரம், சித்திரை, விசாகம்' கேட்டை, பூராடம், பூரட்டாதி, இவைகளாவனவறிக.

### நிஷித்ததிதிகள்.

பிரதமை, சதுர்த்தி, சஷடி, அஷ்டமி, நவமி, ஏகாதசி, துவாதசி, விருத்தினம், சதுர்த்தசி, பூர்ணிமா, அமாவாசி இவைகளாவனவறிக.

### நிஷித்தவாரங்கள்.

செவ்வாய், சனி, இவ்விரண்டுமாவெனவறிக.

வருஷக்கடைசியில் கரு-நாளும். மாதக்கடையில் ரு-நாளும், நட்சத்திர முடிவில் உ-நாழிகையும் சுபகாரியங்களுக்காக வரவரமென வறிக.

யாவத் சுபங்களுக்கும் சுபநாள், தாராபலம் சந்திரபலம் பார்க்க வேண்டும.

மேல்விரித்த யாவத்விஷயங்களேயும் சரியாய்ப்பார்க்கும் பட்சத்தில், முகூர்த்தங்களின் பலாபலன்களேயும் அனுசரிக்கவேண்டும்.

## கோசாரபல முதலியவை

### கோசாரபலம்.

ஜன்மராசிமுதல் கஉ-ராசிகளிலும் (சூரியனிருக்குங்காலத்தில்) முறையே ஸ்தானம்மாறுதல் தனம் ஸம்பத்து மானஹானி விசாரம் சத்ருநாசம் பிரயாணம் தேகஜாட்யம் துவேஷம் தர்மானுஷ்டானம் தனலாபம் தனஹானி விசாரம் சத்ருநாசம் பிரயாணம் தேகஜாட்யம் துவேஷம் தர்மானுஷ்டானம் தனலாபம் தனஹானி இவைகளும்.

(சந்திரனிற்கில்) நல்லபோஜனம் திரிவியநாசம் தனலாபம் வயிற்றுநோவு காரியக்கேடு தனலாபம் ஸ்திரீலாபம் மரணம் பயம் சவுக்கியம் தனம் விரயமும் முறையே இவைகளும்.

(குஜன்நிற்கில்) சத்துருபயம் தனநாசம் லாபம்சத்துருபயம் விரயம் லாபம் துக்கம் மரணம் தேகாபிமானம் தேகசுத்தி பூலாபம் வியாதியால் நஷ்டம் இவைகளும்.

(புதனிற்கில்) பந்தனம் லாபம் ஸம்பத்து புத்தி விருத்தி சவுக்கியம் தைரியம் அபிமானம் தனம் ரோகம் புத்திரலாபம் லாபம் விரயம் இவைகளும்.

(குருநிற்கில்) பயம் மேன்மை ரோகம் விரயம் சுகம் சுத்தி சம்பத்துஹானி தனம் இடமாருதல் ஸ்தானப்பிராப்தி பீடைஇவைகளும்.

(சுக்கிரனிற்கில்) சந்தோஷம் தனம் சுகம் தனம் சந்தோஷம் சத்துருபயம் சுத்தி திரவ்பலாபம் வஸ்திரலாபம் ரோகம் லாபம் தனம் இவைகளும்.

(சனிநிற்கில்) பயம் தனஹானி மனதிற்பீடை லாபம் விரயம்துக்கம் லாபம் தேகபீடை விரயம்மனோவ்யாதி திரவ்பலாபம் திரவ்யநாசம் இவைகளும்.

(ராகுகேதுநிற்கில்) மேற் குஜனுக்கு கூறிய பலன்களாகுமென வறிக.

### சந்திரபலம்.

ஜெனனராசிமுதல் சந்திரனிருக்கிற ராசிவரையில் எண்ணிக்கண்டதொகை.

க—ஆனால் தேகசவுக்கியம்.
உ—ஆனால் தனஹானி.
௩—ஆனால் திரவியலாபம்
ச—ஆனால் ரோகபயம்.
ரு—ஆனால் கரரியவிகல்பம்.
சு—ஆனால் சத்துநாசம்,
எ—ஆனால் சவுக்கியவிருத்தி.
அ—ஆனால் ரோகவிருத்தி.
கூ—ஆனால் காரியதாமதம்
ய—ஆனால் உத்தியோகவிருத்தி.
கக—ஆனால் இஷ்டார்த்தசித்தி.
கஉ.—ஆனால் தனவிரயம்.

இதில் சுக்லபட்சத்தில் உ, ரு, கூ, உத்தமம் கிருஷ்ணபக்ஷத்தில் ச, அ, கஉ, உத்தமமாமெனவறிக.

## தினபலம்.

ஜன்மநக்ஷத்திரமுதல் அன்றையநட்சத்திரம்வரையில் எண்ணிக் கண்ட தொகையுடன் ஞாயிறுமுதல் அன்றையவாரம்வரையிலும் பிரதமைமுதல் அன்றைபதிதிவரையிலும் எண்ணிக்கண்ட தொகைகளை சேர்த்து ஒன்பதிற்கழித்த மிச்சம்

க—க்கு வியாகூலம்.
உ—க்கு சுபம்.
௩—க்கு துர்வார்த்தை.
ச—க்கு பந்துதரிசனம்.
ரு—க்கு ஸ்திரீபோகம்.
சு—க்கு சுபம்.
எ—க்கு கலகம்.
அ—க்கு ரோகம்.
கூ—க்கு ஞானவாக்கியங்கேள்வியெனவறிக.

## மாஸபலம்.

ஜன்மநட்சத்திரமுதல் மாசப்பிரவேச நட்சத்திரம்வரையிலஎண்ணில் ஏழில் பெருக்கி யெட்டில்கழித்த மிச்சம்.

க—ஆனால் ரோகம்.
உ—ஆனால் லாபம்
௩—ஆனால் அலைச்சல்,
ச—ஆனால் பந்தனம்.
ரு—ஆனால் தனம்.
சு—ஆனால் ஐசுவரியம்.
எ—ஆனால் பொருள்செலவு.
அ—ஆனால் அவகேடு.

## மாஸதசாபலம்.

(மாசதசைபென்னுங் கோசாரபலன்) ஜன்மநட்சத்திரமாது நாம நட்சத்திரமாவது அந்தந்த நட்சத்திரமுதற்கொண்டு மாசப்பிரவேச நட்சத்திரம்வரைக்கும் எண்ணிய கணக்கை ஏழில்பெருக்கி ஒன்பதில் கழித்து மிகுந்த கணக்கு.

க—ஆனால் சூரியதிசையெவைறிக.
உ—ஆனால் புதன்திசையெனவறிக.
௩—ஆனால் ராகுதிசையெனவறிக.
ச—ஆனால் குருதிசையெனவறிக.

௫—ஆனல் கேதுதிசையெனவறிக.
௬—ஆனல் சந்திரதிசையெனவறிக.
எ—ஆனல் சனிதிசையெனவறிக.
அ—ஆனல் சுக்கிரதிசையெனவறிக.
௯—ஆனல் குசன்திசையெனவறிக.

இவ்விதமாகத் தெரிந்துக்கொள்ளவேண்டியது.

## கிரகங்களின் திசைக்குரியநாட்களும் பலன்களும் கூறுகின்றன.

சூரியன் திசை நாள் ஒண்ணரைக்கு அலைச்சல் சிரரோகம் விரோதம் புதன்திசை நாள் நாலேகாலுக்கு பந்துலாபம் சவுக்கியம். உத்ஸவதரிசனம்.

ராகுதிசை நாள் ௪-க்கு நீசஸ்நேகம், அமங்கல விரோதம்.

குருதிசை நாள் ௪-க்கு போஜனச்சவுக்கியம் தானியலாபம் வாகனலாபம்.

கேதுதிசை நாள் ஒண்ணேமுக்காலுக்கு சரீரசாட்டியம் அல்பஸ்திரீசங்கமம் சந்திரதிசை நாள் இரண்டரைக்கு பூரணச்சந்திரனுல் திரவியலாபம் க்ஷிணசந்திரனுல திரவியநஷ்டம்.

சனிதிசை நாள் நாலேகாலுக்கு ஸ்திரீவிரோதம் காயம் சண்டை.

சுக்கிரன்திசை நாள் ௫-க்கு இரத்னலாபம்.

குஜன்திசை நாள் ஒண்ணேமுக்காலுக்கு அல்ப்பபோஜனம், கலகம் இந்த திசைகள் கோசாரத்தை யனுசரித்துப்பார்த்துக் கொள்வதெனவறிக.

### வருஷதசாபலம்.

ஜனனநட்சத்திரமுதல் வருஷப்பிரவேச நட்சத்திரம் வரைக்கும் எண்ணிய கணக்கை ஒன்பதில்கழித்து மிகுந்த கணக்கு.

க—ஆகின் சூரியன்.
உ—ஆகின் குஜன்.
௩—ஆகின் குரு.
௪—ஆகின் கேது.
௫—ஆகின் புதன்.
௬—ஆகின் சுக்கிரன்..
எ—ஆகின் சனி.
அ—ஆகின் சந்திரன்.
௯—ஆகின் ராகு.

இப்படிக்கு வருடம் ௩௬0-நாளுக்கும், திசைகளறியவும்.

சூரியனுக்கு கஅ-நாள்
குஜனுக்கு உக-நாள்
குருவுக்கு ௪அ-நாள்.
சுக்கிரனுக்கு ௪0-நாள்.
சனிக்கு ௫௬-நாள்.
சந்திரனுக்கு ௩0-நாள்.

கேதுவுக்கு ௨க-நாள். ராகுவுக்கு ௫௪-நாள்.
புதனுக்கு ௫க-நாள்.

## இவற்றின்பலன்.

(சூரியதிசைப்பலன்) சஞ்சாரம் சலதோஷம் முகரோகம் விரோதம் அவஸ்தை சொல்பலாபம் கலகம் பித்தரோகம் இவைகள் உண்டாகும்.

(குஜதிசைபலன்) விக்கினம் துக்கம் கஷ்டம் பந்து கலகம் அப்வாதம் உண்டாகும்.

(குருதிசைபலன்) ஆரோக்கியம், போஜனசௌக்கியம், திரவியலாபம், வாஹனலாபம் பூமிலாபம் உண்டாகும்.

(மேதுதிசைபலன்) சத்துருவிரோதம் ராஜாக்கினிபயம் சோரருபத்திரவம் சோரபயம் ஜந்துபயம் சுரம் துக்கம் உண்டாகும்.

(புததிசைபலன்) பந்துதரிசனம் வித்யாபிரசங்கம் நூதனவஸ்திரலாபம் யாத்திரை உண்டாகும்.

(சுக்கிரன் திசைபலன) ஸ்ரீசங்கமம் தனலாபம் தேசாந்திரம் தனலாபம் உண்டாகும்.

(சனிதிசைபலன்) ஆலஸ்யம் மனோதுக்கம் அபவாதம் பர்வதாரோகணம் உண்டாகும்.

(சந்திரன் திசைபலன்) வஸ்திரம் பால் தயிர் தனம் உண்டாகும் (ராகுதிசைப்பலன்) விரோதம், பீடை ஸ்திரீகலகம் சுரம் ராஜாக்கினை கெற்பஸ்திரீ சங்கமம் உண்டாகும்.

## தாராபலம்.

ஜன்மநட்சத்திரம் முதல் சந்திரனிருக்கிற நட்சத்திரம் வரையில் எண்ணி ஒன்பதில் கழித்ததொகை.

க—ஆனல் ஜன்மம் கிலேசமுண்டாம்.

௨—ஆனல் சம்பத் சம்பத்துண்டாகும்.

௩—ஆனல் விபத்து ஆபத்துண்டாகும்.

௪—ஆனல் க்ஷேமம் க்ஷேமமுண்டாகும்.

௫—ஆனல் பிரத்தியாருக்கு காரியநாசமுண்டாகும்.

௬—ஆனல் சாதனம் தெய்வானுகூலமுண்டாகும்.

௭—ஆனல் நைதனம் மரணமுண்டாகும்.

அ—ஆனல் மைத்திரம் சுபங்களுண்டாகும்,

௯—ஆனல் பரமைமத்திரம் அதிகசுபமுண்டாகும், ௩-ம் பரியாயத்தில் அசுபம்.

## விவாகத்திற்குத் தசவிதப் பொருத்தம்.

### தினப் பொருத்தம்.

வதூநட்சத்திரமுதல் வரனுடைய நட்சத்திரம் வரைக்கும் எண்ணி ௬-தால்பாகித்து மிகுந்தசங்கியை சமமானல் விவாகஞ்செய்யலாம்.

### கணப் பொருத்தம்.

அசுவனி பூசம் மிருகசீரிடம் அஸ்தம் சுவாதி அனுஷம்திருவோணம் ரேவதி இந்த ௯-ம் தேவகணமென்றும் பரணி ரோகணி திருவாதிரை பூராடம் பூரட்டாதி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இந்த ௯-ம் மனுஷ்ய கணமென்றும் கார்த்திகை மகம் விசாகம் ஆயிலியம் சதயம் அவிட்டம் சித்திரை கோட்டை மூலம் இந்த ௯-ம் ராட்சகணமென்றும் சொல்லப்படும். வதூநட்சத்திரமும் வரனுடைய நட்சத்திரமும் ஒரேகணமாயிருந்தால் விவாகஞ்செய்யலாம் மனுஷ்ய ராட்சச கணமானல் விவாகம் செய்யக்கூடாது.

### மகேந்திரப்பொருத்தம்.

வதூநட்சத்திரமுதல் வரனுடைய நட்சத்திரம் ௪-எ-ய-௧௩-௧௬ ௧௯-௨௨-௨௫ வது ஆனல் விவாகஞ்செய்யலாம்.

### ஸ்திரீதீர்க்கப்பொருத்தம்.

ஸ்திரீநட்சத்திரத்திற்கு ௧௩-வது நட்சத்திரத்திற்குமேல் வரனுடைய நட்சத்திரமிருந்தால் விவாகஞ்செய்யலாம்.

### பிராணிப்பொருத்தம்.

அசுவினி சதயம் குதிரை, பரணி ரேவதி யானை, பூசம் கார் ஆடு, ரோகணி மிருகசீரிடம் பாம்பு, ஆயிலியம் புனர்பூசம் பூனை, சுவாதி அஸ்தம் எருமை, விசாகம் சித்திரை புலி, கேட் அனுஷம் மான், திருவாதிரை மூலம் சுவானம், மகம் பூரம் எலி, பூரட்டாதி அவிட்டம் சிங்கம், பூராடம் திருவோணம் குரங்கு, உத்தரம் உத்திரட்டாதி பசு, உத்ராடம் கீரி, வதூவரர்களுக்கு ஒருபிராணி நட்சத்திரமானல் உத்தமம், இதரபிராணி நட்சத்திரமாகிலும் வைரஜாதி ஆகாமற்போனல் விவாகம் பண்ணிக்கொள்ளலாம்.

### ராசி அதிபதிப்பொருத்தம்.

ஸ்திரீராசி அதிபதிக்கும், புருஷராசி அதிபதிக்கும் சத்துருத்துவமில்லாமலிருந்தால் விவாகம்செய்யலாம்.

### வசியப்பொருத்தம்.

வதூவரர்களுடைய ஜன்மராசிகள் மீனதுலாமாகிலும், மிதுனவிருச்சிகமாகிலும், கும்பகடகமாகிலும், மேஷம் கன்னியாகிலும், ரிஷப தனுசாகிலும் மகரசிங்கமாகிலும் விவாகம் செய்யக்கூடாது.

### வேதைப்பொருத்தம்.

அசுவனி கேட்டை பரணி அனுஷம் கார்த்திகை விசாகம் ரோகணி சுவாதி திருவாதிரை திருவோணம் புனர்பூசம் உத்திராடம் பூசம் பூராடம் ஆயிலியம் மூலம் மகம் ரேவதி பூரம் உத்திரட்டாதி உத்திரம் பூரட்டாதி சதயம் இந்த நட்சத்திரங்களுக்கு பரஸ்பரவைரம், சதயம் மிருகசீரிடம் அவிட்டம் இந்த ௩-நட்சத்திரங்களுக்கும் பரஸ்பரவேதை, வதூவரர்களுடையநட்சத்திரங்களுக்கு வேதையுண்டானால் விவாகம்செய்யக்கூடாது.

### நாடிப் பொருத்தம்.

அசுவனி திருவாதிரை புனர்பூசம் உத்திரம் அஸ்தம் கேட்டை மூலம் சதயம் பூரட்டாதி இந்த ௯-நட்சத்திரங்கள் ஒருநாடி பரணி மிருகசீரிடம் பூசம் பூரம் சித்திரை அனுஷம் பூராடம் அவிட்டம் உத்திரட்டாதி இந்த ௯-நட்சத்திரங்களும் மத்தியநாடி கார்த்திகை ரோகணி ஆயிலியம் மகம் சுவாதி விசாகம் உத்ராடம் திருவோணம் ரேவதி இந்த ௯-ம் பார்சுவநாடி ஸ்திரீநட்சத்திரமும் புருஷநட்சத்திரமும் ஒருநாடியி லிருந்தால் விவாகஞ்செய்யக்கூடாது.

### ரஜ்ஜுப்பொருத்தம்.

மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் இந்த ௩-ம் சிரோஜ்ஜு ரோகணி திருவாதிரை அஸ்தம் சுவாதி திருவோணம் சதயம் இந்த ௬-ம் கண்டரஜ்ஜு கார்த்திகை புனர்பூசம் உத்திரம் விசாகம் உத்ராடம் பூரட்டாதி இந்த ௬-ம் நாபிரஜ்ஜு. பரணி பூரம் அனுஷம் பூராடம் உத்திரட்டாதி இந்த ௫-ம் ஜங்காரஜ்ஜு. அசுவனி ஆயிலியம் மகம் கேட்டை மூலம் ரேவதி இந்த ௬-ம் பாதரஜ்ஜு. வதூவரர்களுடைய நட்சத்திரங்கள் ஒரு ரஜ்ஜுவா யிருந்தால் விவாகம் செய்யக்கூடாது.

## ஜாதகாலங்காரம்.

---

### ஜீ வ ன ம்.

### விருத்தம்.

அம்புவியார்செய்தொழிலாற் சீவனமுண்டாம்
அவையறிலக்கினஞ்சோப னுதவன்மும்மனைக்கும்
தம்பமொடுபத்தாம்வீட் டாங்கிசையிலிருந்தோர்
தம்மிலதிகப்பலமாய்த் தரித்தவராங்கிசைதான்
வெம்பிரவித்தேரோனங் கிசத்தனையன்பலமே
மேவியபுல்வைக்கோலும் விற்றுணவேகொள்வன்

செம்பொன்விற்பதுருசிப் பலநூலுக்கோரை
திக்குபலமுண்டாயிற் செய்வன்வயித்தியங்கள்.

சந்திரன்.

களங்கமில்லாவெண்திங்க ளங்கிசமேயாகிக்
கமழுமிலக்கினத்திரையக் காணமுதலாகில்
விளங்கியநற்பயிர்தொழிலே புரிந்துணவுகொள்வன்
மேவியரெண்டாந்திரையைக் காணமேயாயின்
வளங்கெழுசிந்துவிற்சம்பான் கப்பல்சோங்கோடி
வாழ்வனமூன்றாந்திரையைக் காணமுமேயாயின்
இளம்பிடியோதிமந்தனையும் பழித்தநடைமடவார்
இணக்கத்தாற்சீவனமுண் டென்பரினியோரே

குஜன்.

இனியசெவ்வாயங்கிசத்தி லக்கினமேபலமா
யிரும்புவெள்ளிசெம்பொன்னும்விற்றிருப்பனவாங்கிசைதான்
நனியபலமாயிடிலக் கினியிலுறுதொழிலே
நடத்திடுவன்திரிங்கிசாங் கிசம்பலமேயாயின்
தனியுறுமாயுதம்பிடித்துச் சேவிப்பனேழாந்
தானமதுபலனாயிற் றக்கதொழில்செய்வன்
கனிமொழியாயிரவிமுதல் சனிமட்டுமெண்ணிக்
கண்டதுசத்தாங்கிச மேழாம்பலன்கண்டீரே.

புதன்.

கண்டபுதனங்கிசத்தின் பலனவாங்கிசையே
காவியங்கற்பன்றுவரத சாங்கிசமேயாயின்
மிண்டுசிற்பசாஸ்திரமே யறிந்துணவுகொள்வன்
மேவுந்திரிங்கிசமோங்கிசமே யெழுதுந்தொழிலான
கொண்டவறுபதிலோரை யங்கிசமேற்கணிதம்
குறித்திடுவன்பதனிருந்த றுசிதனைப்பிரித்து
மண்டியறுபதுங்கு செயயிலொற்றைப்பங்கில்
வந்துபுதனிருக்கிலென வேவழுத்தல்வேண்டும்.

குரு-சுக்கிரன்.

வேண்டுகுருவங்கிசத்தின் முதற்றிரையக்காணம்
விப்பிரராற்பலனிரண்டாந் திரைரக்காணந்தான்
பூண்டதேவதைகளினாற் பலன்மூன்றாங்காணம்
புண்ணியத்தாற்பயனாகுஞ் சுக்கிரனங்கிசைக்குத்

தாண்டுசுரபிகளெருமை பெறுமூன்ருங்காணம்
தக்கவெள்ளிவிற்பன்நடுத் திரையக்காணந்தான்
மீண்டுமுதற்றிரையக்கா ணம்மதுவேயாயின்
விரவுநவரத்தினமே வியாபாரஞ்செய்வன்.

சனி.

செய்யசனியங்கிசத்திற் பலன்சிறுவன்ருனுஞ்
செப்பிமித்திருங்கிசமேற் பிரயாசத்தொழிலாம்
வெய்யபாவக்கிரகம லக்கினத்தைப்பார்க்கில்
மெத்தவேசுமைசுமந்து மெய்க்குணவுகொள்வன்
ஐயிவிலக்கினந்தன்னை நீசருங்கண்டக்கால்
ஆகாதகாரியங்க ளவத்தொழிலேசெய்வன்
துய்யசனியங்கிசத்திற் சுபக்கிரகங்கூடில்
துலங்கிடவேதான்சிற்பத் தொழில்செய்துவாழ்வன்.

வேறு ஜீவனபலன்.

ஆதவன்சசி லக்கினமிவைமூன்றுக்
கதிபரிலதிகமாம் பலத்தோன்
அடைந்தவங்கிசைதான் பரிதியங்கிசமா
யம்பொன்னும் வைக்கோலும்விற்று
நீதியாய்வைத் தியங்களுஞ்செய்வன்
நீள்பிறை யங்கிசமாயின்
நீரினிற்சோங்கு நடத்தியேயவ்வன
நிலமக வங்கிசமாயின்.

ஓதுமக்கினியா விரும்புபொன்வெள்ளி
யுருக்கலா யுதங்களினலும்
உணவுகொண்டிடுவன் புந்திவங்கிசவே
லுரைத்திடுங் கணிதமுங்கணக்கும்
தீதுருசிற்பத் தொழில்கற்கவிப்கத்தாற்
சீவனம்வேந்தநங் கிசைக்குத்
தெய்வமாமறையோர் பெரியவருளுஞ்
சீவனமிரிதினி திருப்பன்.

கேந்திரபலன் வேறு.

திக்குப்பலமாவதுசேய்கதிர் பத்தில்பத்தாமிடம்
தொக்கக்குருபுதன் யிலக்கினத்துற்றல்
துக்கச்சனியேழினிற் சூழ்ந்திடின்வல்லன்
சுக்கிரன்சசிநான்கினில் வலியெனங்சொல்லே.

இதுவுமது-வெண்பா.

பத்துதையநான்கேழில் பற்றியரசிருக்க
எத்திசையிலெக்கோள்க ளிருந்தாலும்-நித்தநித்தம்
ஆருயிரந்தே ரணியணியாய்வந்தாலும்
நீருகிப்போமென்று நேர்.

சாதகாலங்காரம்-பொதுலட்சணம்.

கலிவிருத்தம்.

உச்சமொன்றுடன் காலெர்ன் துகேந்திரம்.
அச்சமுக்கா லதிபதியோர்பலம்
மெச்சுநட்புக் கரைப்பலமிக்ககால்
துச்சநீசர் பலனெனச்சொல்லுமே.

சாதகசிந்தாமணி காரகநிகண்டு.

கேந்திராதிய பெயர்கள்.

உரைக்குமென்று நான்கேழு பத்துகேந்திரமா
மொன்றைந்தோ டொன்பதுவுந் திரிகோணமாகும்
நிரைக்குமா றெட்டுபனி ரண்டுந்துார்த்தானம்
நீடிரண்டு பதினொன்று தனலாபம் யோக்கியம்
வரைக்குமொரு மூன்றுறு பத்துபதினொன்றை
மன்னுமப செயத்தான் மாமெனவேபுகல்வார்
தரைக்குமொன்ருே டிரண்டுநான் கைந்தெழெட்டொன்பான்
சாற்றியதோர்பனிரண்டும் பீடையதுவாமே.

இலக்கினதிபதி கேந்திரதிரிகோணமிருக்கலாம் அல்லாதது தீதென்பதாம்.

தற்காலமித்திரம் அறியும்படி.

அவரவர்க்கு மூலத்திரி கோணமுசிக்கே
யாகுமீரு திரண்டுநான் கைந்தோடெட்டும்
நவிலொன்பா னுச்சமனை யதிகவுறவென்பர்
நயந்திடுமீ ருறிரண்டு மொருபத்துநான்குந்
தவமான பன்னொன்றின் மூன்றினின்றகோட்க
டற்கால மித்திரமாம் பகல்வருஞ்சாதகர்க்கே
யுவமானக் கதிர்வெள்ளி பிதுர்மாதுர்சனிய
னென்பிதுர் சோதரமாதுர் சோதரிக்கும்பலமே.

### தோஷந்தீர்தல்.

பொறியரவின் றோடமதைப் புதன்றீர்ப்பன்பாம்பு
புதன்றோடந் தனைச்சனியன் றீர்ப்பனிவர்மூவர்
பறிபடுதோ டந்தனையங் காரகனேதீர்ப்பன்
பாரிலிவர் நால்வர்களின் றோடம்வெள்ளிதீர்ப்பன்
செறியுமிவ ரைவர்களி றோடமதைப்பொன்னோன்
தீர்ப்பனிவரறுவர்களின் றோடமதைமதிதா
ளறிவினொடு தீர்ப்பரிவ ரெழுவர்களின்றோட
மருக்கனே தீர்ப்பனென வருளினர் விண்ணவரே.

கேந்திரங்களில் சுபக்கிரகம்நிற்கில் கமலயோகம்.

### இதற்குபலன் கவி.

தனமுளன் கீர்த்திமானுகும் வெற்றியுபாயன்
பிறந்தசே யண்ணல்.

### வேறு ஜீவனபலன்.

### விருத்தம்.

பத்தாகுமதிபதியை யிரவிசசிபார்க்கப்
பரிந்திவர்மூவருங்கூடப் பத்தாம்வீட்டதிபன்
மெத்திரவிசசிவீட்டி னுலுமிருக்கவுமே
வெற்றிமுடியுரசர்பக்கறு மேவியவர்தம்மைப்
பத்தியுடனேசேர்ந்து சீவனமேசெய்வன்
புகழ்பத்தாமதிபன்பூ புத்திரனைக்கூடில்
சித்தமாய்ச்சேனுதி பதிகடமைச்சேர்ந்தே
சீவனப்பண் ணுவனென்றே தெரிந்துரைசெய்வாரே.

செய்யபத்தாதிபன்புதனைச் சேர்ந்துமேநிற்கில்
ஸ்திரீகளினுற்புத்திரியாற் றெடுகணிதத்தாலும்
துய்யகுருவுடன்கூடிற் புராணசாத்திரத்தால்
சுருதியாலமைச்சரா ரியர்துரைகனம்மால்
வையமெலாம்புகழ்பாக்கியத் தோடுசீவிப்பன்
மகிருஞ்சுக்கிரனுடனே வந்துமிகக்கூடில்
பையமறையோரமைச்சர் பரிகரியாவெருமை
படைத்தும்ரத்தினக்கிரயம் பண்ணியுஞ்சீவிக்கும்.

சீவிதமார்சனியும்பத் தாதிபனுங்கூடில்
சிலம்பங்கள்படிப்பித்துந் திருடியுமேதிரிந்து
பாவங்கடமையொருவர் தமக்குப்போதித்தும்
படர்வனத்திலிங்கிசைகள் பண்ணிமரம்வெட்டிப்

பூவுலகிற்சீவிப்பன் பத்தாதிசெவ்வாய்
பொருபாம்புமூவர்களுமே பொருந்திநிற்கில்
தாவுகளில்விஷப்பிரயோ கங்களையேசெய்துந்
தாணியிலேயிருடியுமே சீவிப்பன்ருனே.

தானமாமைந்தாகு மதிபதிபாவியுமாய்த்
தக்கவாளெயிற்றர்வந் தன்னையுமேகூடி
ஈனமிலா திருமூன்றி லேயிருந்தக்காலு
மண்ணிடமூன்ருமதிபன் பாவியுமேயாகில்
ஊனமுறும்பாம்புடனே கூடியெங்கேயேனும்
வுற்ருலுமவன்மனையா ளுடனேமற்ருேரை
மானமறக்கூட்டியவன் கைப்பொருளைவாங்கி
வயிறுவளர்ப்பானெனவே வழுத்துவர்மாதவரே.

வழுத்தியசுக்கிரன்செவ்வாய் சனிபுந்தியரசன்
மருவவீனத்தொழிலால் வயிறுவளர்த்திடுவன்
செழித்தபிறைசனிவெள்ளி செவ்வாய்புந்தியுமே
செறியுமரம்வெட்டிவிற்றே சீவனேமேசெய்வன்
இழுத்தமுடன்வெள்ளி குருசெவ்வாய்க்கூடில்
யேழைதுக்கமுளன் கணக்கெழுதியுஞ்சீவிப்பன்
பழித்தசனிகுருவெள்ளி பதங்கள்செவ்வாயும்
பரிந்துநின்மந்திரவித்தை பண்ணியினிருப்பன்.

இருந்ததனலாபபாக் கியாதிகுஜனுறை
லியல்சேவகாவிருத்தி யினியவர்க்குச்செய்வான்
சொரிந்தபுதனுயின்வித்தை வாகனங்களுண்டு
சொல்லரியகுருவாயின் சகலபாக்கியவான்
அருந்தவஞ்சேர்பிருகாயின் புவிலாபமேவும்
அரவுசனியாயிற்சோ ரங்களினேதியினல்
வருந்துமீனத்தொழிலே புரிந்துசீவிப்பன்
மதிவதனத்திலகநுதல் வளர்வஞ்சிவாரே.

கலிவிருத்தம்.

வஞ்சியேசனி செவ்வாய்மதிமகன்
செஞ்சொல்சுக்கிரன் றேவர்கடன்குரு
அஞ்சுபேருமொன் ருகவமர்ந்திடின்
துஞ்சுமீனத் தொழில்செய்துவாழ்வனே.

விருத்தம்.

கண்டசன்மங்கேந்திரத்திற் காணுமைந்தெட்டொன்பதனில்
பண்டேசோமன்புகரிருக்கம் பாரிதனக்குமறுபுருடன்

கொண்டேவிருந்துச்சீவனமாய்க் கொள்வன் கூறும்புவியோர்க்குக்
கெண்டைவிழியின்பார்வையினுற் கிட்டியணையுந்தனத்தானே.

துர்ப்பிக்ஷ காலமறிய.

மந்தனுமிருபாம் பரசனின்னல்வர்
மாறியேகூடில்விளைவு
மழைபயிரற்பம் யிவரிருவற்கு
மற்றொருபத்தினி லொருவர்
இந்தவாறிருக்கின் வேட்டைகாலமதாம்
மிடபந்தேள்கோல்சிங்கம் மீனம்
இனியகும்பத்தி லிருக்கிலிப்புவியி
லிறைமுதன் மனுஷருமடிவர்
அந்தவீடாறின் முன்சொன்னநால்வ
ராதித்தன் குசனொடுங்கூடி
அமரவேகுடி களிருந்தவூரெங்கு
மலகைநாய் நரிகுடிகொள்ளும்
தந்திரஞ்சுருதி மொழிப்பட்டிபுரியுந்
தக்கதோர்வேள்விக ளெல்லாம்
தான்மறுத்திடுமம், புவிகள்காடாகுந்
தானெனச்சாற்றுவர் பெரியோர்.

சாற்றியவரச னொடுசனியாதல்
தரைசுதனுதல் பாம்பாதல்
தானுறக்குருவுக் கேழினின்றாலுந்
தகர்க்கிறை யோடுபாம்புறினும்
போற்றியகுஜனைக் காரிகூடிடினும்
புலவுமீன் தேள்கடையினிலும்
புணரிஷபத்தின் மத்தியிலேனும்
பொருசிங்கத் தாதியிலேனும்
கூற்றமாஞ்சனியின் றால்மழையின்றிக்
குவலயத்துள் பலவுயிறும்
கொடும்பசியாலுஞ் சமர்க்களத்தாலுங்
குறுகிமாண் டிடுமெனக்கூறே
ஏற்றமினிடபந் தேள்தனுசிங்க
மிவையினிற் காரிசேயாதல்
இருந்துவக்கிரந்தா னுகிமன்னர்க்கே
யிடுக்கமுண்டெனவுரைத் திடுவர்.

இடும்பைசேர்வெள்ளிச் சேழினிற்குருவு
மிருந்திடின் மாரிபெய்யாதாம்
இரும்புதன்வெள்ளி நாப்பணினிரவி
யிருக்கவெய்யோற்குமுன் சனிசேய்
உடன்கலந்திருக்க மாரியுமறுத்தே
யுலகினிற்பஞ்சமென் றுரைக்கும்
உயர்சனிதனக்கு மூன்றுபன்னொன்றி
லும்பர்கோன் குருவும்வந்துரையி
நெடும்புவிதன்னி னரர்பசுமுதலாய்
நின்றநாற்காலுயிர் தனக்கும்
நேமியாள்பவர்க்குந் துன்பமேயாகு
நின்றிடுபங்கு பாதகற்கே
திடம்பெறவைந்தாம் வீட்டினிலரசன்
சேர்ந்துற விருந்தகாலையினில்
ஜெகமொருமூன்றி னுள்பலவுயிர்க்குந்
தீம்புருமென்றுரை செய்வர்.

மறுமையி லடையுமிடம்.

பன்னிரண்டாமதிபனைச் சேர்ந்தவராற்சொல்லும்
பலன்குருசுக்கிரனுயிற் றெய்வலோகம்
மின்னுகதிருடன்கூடி விராஜயோகம்
வெண்மதியமுடன்கூடி பிதிர்லோகந்தான்
மன்னுகுஜனைக்கூடில் வீரசொர்க்கம்
மந்தன்பாம்புடன்கூடின் மறலிபதியாகும்
வுன்னுபுதனுடன்கூடி லெங்கெங்கேதாம்போய்
வுற்றிருக்கம்வேண்டுமெனி லங்குறையலாமே.

மாரதிசையறிய.

மாரகத்தின்றிசையறியவருநான்காந்திசைசனியேவந்துற்றாலும்
பார்தனக்குச்சுதன்செவ்வாயைந்தாகுந் திசைதானேபரிந்துற்றாலும்
பேருதித்தவாறுகுந்திசையரசனுனுலும்பின்புருகு
சீருதித்தவேழாகுந்திசையானுலும்மரணந்திண்ணந்தானே.

கார்த்திகைமுதல் வொன்பானாள்களும் பகல்திங்கள்செவ்வாய்
கார்த்தவிருகுபொன்கள் கவின்புந்திகேதுவெள்ளி
சீர்த்தவர்க்குமுறையாகச் செப்பியதிசைகளாகும்
ஏர்த்தமற்றறைநாண்மீது மிவ்வாறேகொள்ளற்பாலாய்.

கிரகங்களுக்கு திசைகாலமறிய.

சூரியன் றிசைக்காண்டாறு திங்கட்குப்பத்துச்செவ்வாய்
காருமோரேழ்ராகுக் கறைபதினெட்டுப்பொன்னுக்
கேருறீரெட்டுமந்தற் கியம்புபத்தொன்பதாகும்
சீரியல்புந்திக்கோர்பானேழ் சிகிக்கேழ்வெள்ளிக்கைன்ஞன்கே.

புத்தி பிரிக்கவகை.

கோள்களின் றிசையிற்புத்தி குறித்திடிற்றிசையோனுண்டை
நீள்புத்திநாதனுண்டா னேர்படம்பெருகிக்கண்ட
வாளமர்தொகையொன்றிற்கு மருவுநான்மூன்றதாகும்
வாள்கடல்கொண்டைவண்டு வனசமாம்விழியினாளே.

சித்திரம் பிரிக்கவகை.

அவரவரபகாரத்தி னுண்டொன்றின்மூன்றுநாளும்
நவிலுமாதங்கால்நாலு நாளொன்றிற்பாதிக்கன்னல்
இவைமூன்றுதொகையுங்கோட்க டிசையாண்டிற்பெருக்கிவந்த
தவலறுதொகையைச்சேர்க்கத் தான்வருஞ்சித்திரந்தான்.

உள்சித்திரம் பிரிக்கவகை.

வெண்பா.

ஒருநாளைக்கோரரை நாழிகையாகத்தோற்றும்
ஒருநாழிகைக்கரை வினாழி-துருவமாம்
எந்தத்திசைக்கு மிவர்வருடங்கொண்டெண்ணச்
சிந்தனைக்குட்சித்திரமாச் செப்பு.

போதகன்-வேதகன்-பாசகன்-காரகன்.

வெண்பா.

கூறுபலனைக் கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணித்தட்டுவிட்பான் வேதகனும்-தேறுபலன்
கூட்டுவிப்பான்பாசகனுங் கோலமகா திசைக்கே
யீட்டுபொருள்காரக னீவான்.

பானுதிசைக்குமந்தன் பாசகனுஞ்சுக்கிரனே
மானேகேள்வேதகனு மன்னவனும்-தேனனைய
காரகனுஞ்செவ்வாயுங் காசினியோர்தாமறிய
யோரணியும்போதகனு மே.

இந்துதிசைக்குவெள்ளி யேற்றமேதார்பாசகனும்
விந்தைமலர்நண்பனே வேதகனும்-மந்தனே
கங்காநதிபுடைசூழ் காசினியிற்காரகனும்
அங்காரகன்போ தகன்.

மங்களனுர்தன்திசைக்கு மார்தாண்டன்பாசகனும்
திங்களிரும்போதகனுஞ் சேயிழையீர்-பொங்குபுகழ்
மேயபுதன்வேதகனு மித்தரணியோரறிய
ஆபசனி கார்கனுகும்.

புந்திதிசைக்கு புரவலனேபோதகனும்
சந்திரனேபர்சகனுந் தானுவன்-யிந்துநுதல்
மின்னனையீர்செவ்வாயும் வேதகனும்வெள்ளியோ
மன்னுபுகழ் காரகனுமாம்.

வேந்தன்மகாதிசைக்கு வெய்யவனேவேதகனும்
போந்துவருஞ்செவ்வாயே போதகனும்-காந்திசெறி
சந்திரனேகாரகனுந் தையலேதாரணியில்
மந்தனேபாசக னுமே.

வெள்ளிமகாதிசைக்கு வேந்தனேபோதகனும்
தெள்ளுபுதன்பாசகனுஞ் செங்கதிரும்-மெள்ளவரும்
காரகனேதானுகும் காரிகையேவேதகனும்
வாரணியுங்சொங்கை மயிலே

சனியின்றிசைக்குச் சசிபோதகனும்
யினியசெவ்வாய்வேதகனென் றேத்தும்-கனிமொழியாய்
வெள்ளியேபாசகனும் வேந்தனேகாரகனும்
தெள்ளுதமிழோருரைத்தசீர்.

ஒருவர்மகாதிசைக்கு ளுற்றபலனுண்ண
வருவர்நவக்கிரகர் மாதே-அவரவரில்
போதகனும்பாசகனும் போற்றுபொருள்காரகனும்
வேதகனுமாகி வருவார்.

இந்தப்படிநால்வர் யெய்தியொருவர்திசைக்குள்
வந்துபலனுண்ணும் வகையறிந்தே-சிந்தித்
துரைத்தபலனெத்திருக்கு மொண்டொடியேகேளாய்
தரைத்தமிழோர்தாமறியத் தாம்.

சாதகாலங்காரம் புத்திகளின்பலன்களை அறிய
விருத்தம்.

புத்தியின்பலன்கடம்மைப் பொதுமையாயுரைத்தாரேனும்
சித்தமாய்க்கோள்கணின்ற திரிகோணங்கேந்த்ரமுச்சம்
தத்திபவியமாறெட்டுப் பகைநீசந்தான்சேரம்சம்
ஒத்தநல்லாதிபத்தியம் வர்க்கமோடவஸ்தைகிரமம்.

பாவத்திற்கண்டயோகம் பவயோகந்தன்னைப்பார்த்துப்
பூவருமானேநல்ல பலன்களைப்புகலவேண்டும்
தாவருசித்திரமுட்சித் திரத்திற்கும்புத்திபோல
ஓவறப்பலன்கள்சொல்வ ருயர்மதிவல்லோர்தாமே.

கோசாரபலன்.

விருத்தம்.

ஓதியகோசரந்திசை சக்கரங்கடம்மில்
வுதித்தநவக்கிரகத்தா லுண்டாகும்பலன்கள்
ஆதவன்செவ்வாயிருவர்க் காதியிலேபலன்கள்
அம்புலிக்கும்புதனுக்கு மனுதினமும்பலனே
பீதகன்சுக்கிரன்பலன்கண் மத்தியத்திற்றருவர்
பெருகுசனிபாம்பிரண்டும் பிற்பலனேதருவர்
சூதுமதக்கரிகோட்டைக் கமலமாமுகையைச்
சுந்தரப்பொற்கிரியைவென்ற துணைமுலைமாமயிலே.

கோசார வேதை.

கலிவிருத்தம்.

இரவியைந்தின் மதிபெட்டிலேழிற்சேய்
பரவுமூன்றிற்பொன் பார்க்கவனாறிலும்
விரவுபுந்திநான் கொன்பானிருகுசுன
வுரவுசெனம முறிற்கடும்கேடுறும்.

சுலோகம்.

சந்திருஷ்டமஞ்ச தரணிசுத சப்தமஞ்ச
குரு நவஞ்ச சனிஜென்ம குரோர் திரிரிதியே
கேது அஷ்டமஞ்ச ரவி சப்தமஞ்ச
சௌமிய சுக்கிரஹ சஷ்டமஞ்ச
வதந்திகலு ஜாதகமிருத்தியு யோகாது
துவாதச அஷ்டமஜென்மஸ்தா
சனி அர்க்க அங்காரகோ குருவு

வசனம்.

ஜென்மம்-அ-கஉ-ல் அங்காரகன் சனி சூரியன் குரு ஆகாது.

சுலோகம்.

நீலத்துதியி சூலதரக்கிரீடி கிறுத்ரஸ்து
தத்ருஸ கதோ தனுஷ்மான் சதுர்புஜஹ
சூர்யஸுத தப்பிரஸாந்தஹ: ஸதாஸ்து
மைகம் வரமந்தகாமி.

கோசார நற்பலஸ்தானம்.

விருத்தம்.

கதிர்பதினொன்றுமூன்று கருதுபத்தாறினல்லன்
மதியொன்றுமூன்றோறு மன்னுமேழ்பத்துபன்னொன்றும்
பதிபுகழ்சேய்சுன்றுகு பதினொன்றுமூன்றாறும்
மதிமகற்கிரண்டோறு மன்னெட்டுப்பத்துபன்னொன்றே.

இதுமவுது.

பொன்னவன்பதினொன்றென்பான் பொருந்துமேழைந்திரண்டாந்
துன்னுசுக்கிறற்கொன்றாதி யைந்துமோரெட்டொன்பானும்
பன்னொன்றீருறுதன்னிற் பத்திடிநல்லறுவர்
அன்னமேவேதைக்கொள்க ளுறிற்றீயறுவரென்னே.

வேதை ஸ்தானம்.

விருத்தம்.

சூரியற்குரைத்தவீட்டிற் கேழினிற்கோணின்றாலும்
கூரியமதிக்கந்தொன்பான் குலவுமீறாரிரண்டும்
பேர்பெறுமொருநான்கெட்டு மிருகுசன்சேய்தமக்குக்
கார்பெருங்குழலாயைந்தீ றுரொன்பாறெனுங்கணக்காம்.

இதுவுமது.

புந்திக்கைந்தொன்பானென்றெட் டீறுறிற்புனிதப்பொன்னுக்
கந்தமாறெட்டுப்பத்து மூன்றுநான்கீறுறுகும்
சந்தமார்புகருக்கெட்டே ழொன்றுபத்தொன்பதைந்தும்
உந்துபன்னொன்றுமூன்றே றுறுமுன்மிறைக்கும்வேதை.

மகாதிசை ஆண்டு.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | ஆண்டு-சூ | | கார்த்திகை. |
| சந்திரனுக்கு | ,, | ய | ரோகணி. |
| குஜனுக்கு | ,, | எ | மிருகசீரிடம். |
| இருகுவுக்கு | ,, | கஅ | திருவாதிரை. |
| குருவுக்கு | ,, | கசு | புனர்பூசம். |
| சனிக்கு | ,, | கசூ | பூசம். |
| புதனுக்கு | ,, | கஎ | ஆயிலியம். |
| கேதுவுக்கு | ,, | எ | அசுவனி. |
| சுக்கிரனுக்கு | ,, | உய | பரணி. |

ஆகபாமரீயுசு-கஉய.

திசாபலன் அறியும்படி.

சூரியன்.

வூர்விட்டுப்போம் அர்த்தஹானி யுண்டாம், யிளைப்பும்பித்தமும் வரும்.

சந்திரன்.

அடியாரும் பந்துக்களும் அர்த்தலாபமும் ஸ்திரீயும்வுண்டாம்.

குஜன்.

பகையும் பசியும் பூசலும் வியாதியும் அக்கினிபயமுமுண்டாம்

இராகு

மரணமும் மாதுரு பிதுரு மாதுலன் கண்டம், பந்துமரணம் சிறை அர்த்தஹானி விஷகண்டமுண்டாம்.

குரு.

அர்த்தலாபம் வாகனசவுக்கியம் யிருசசிநேகமுமுண்டு.

சனி.

பக்ஷத்திரங்களும் அர்த்தமும் அடியாரும் கன்றுகாலியம்பொய்ப்பசியும் பகையும் தேசாந்திரமுமுண்டாம்.

புதன்.

அறிவும் கல்வியும் தர்மமும் தவசும் புத்திரரும் வுண்டாம்.

கேது.

பிணியும் மரணமும் விஷப்பிரயோகமும் மிருத்தீவு முண்டாம்.

சுக்கிரன்.

தர்மமும் ஸ்திரீசேர்த்தியும் புத்திரோற்பத்தியும் வேளாண்மையும் வுண்டாம் யிவையெல்லாம் ஜென்மலக்கினத்திற்குத் தனலாபன் கேந்திர திரிகோணங்களில் சுபக்கிரகங்கள் தேறிநின்றால் வெகுநன்மையாம் பாபக்கிரகங்கள் தேறிநின்றால் சிறிதுநன்மை கொடுப்பார்கள்.

சு-அ-கஉ-ஆ மிடம் பகை நீசம் அஸ்தமானங்களில்யிருந்த சுபக்கிரகம் சுபபலன் பாபக்கிரகமாகில் அற்பபலனுண்டாமெனவறிக.

அஷ்டகவர்க்கின் முன்பின் அறியவும்.

விருத்தம்.

அண்டுபன்னென் றிரண்டிற் றேறினர்முன்
னாறிரண்டிருநா லாறுமூன் றிற்கோல
கொண்டுதேறிற் பின்னையுசுகூட்டுகக்
கோலின்மூப்பிளமை நயங்கூறுமே

கண்டுநட்பாட்சி யுச்சநீசம்பகைக்
கடியகோள்சுபக் கோளெழுகோட்களு
முண்டவட்டகவர்க்கம் வீமேசர்தா
ளுளத்துறக்கண் டவர்போலுறையுமே.

வ - ம். கக-ஆ மிடம் உ-ஆ மிடத்திலிருந்த கிரகம் பலவானுகில் அவன்றிசை ஜென்னகாலத்தில் வரும் இதிற் கிரகமில்லாவிட்டால் கஉ-அ-சு-ஆ மிடத்திலிருந்தகிரகம் பலவானுகில் அவன்றிசை அஷ்ட வர்க்கம் வருஷமர்தத்தில்வரும், இப்படிக் கிரகபலன்கண்டு மூப்பிளமை யறிந்து ஆயுசுகூட்டுவது.

அப்போது நட்பாட்சி யுச்சம் பகை நீசம் அறிந்து சுபக்கிரகமாகில் சுபபலன், பாபக்கிரகமாகில் நிஷபலன் அந்தந்தக் கிரகங்களின் பலாபலன்கண்டு அஷ்டகவர்க்கு ஆயுசு யின்னதென்று கண்டுரைப்பதெனவறிக.

புதன் அஷ்டகவர்க்குபோட்டு பிந்ததிகம் வந்தருசியில் சனி வருகிறபோது சர்வபாக்கியமும் புத்திரலாபமுமுண்டாம்.

பிந்தில்லாதராசியிற் சனிவருகிறபோது புத்திரமித்திரநாசமாம்.

புதனிருந்தராசிக்கு சஷ்டாட்டம வியாதிபதி புதனுக்கு பகையாயிருந்தால் அவன் அந்திராந்திரதிசை வருகிறபோது மாதாபிதா பாட்டன் பாட்டி முதலான பந்துக்களுக்கு மரணமாம்.

இவை புதன் அஷ்டகவர்க்கின் திரிகோணசோதனையும் யேகாதிபத்தியசோதனையும் சோதித்துக் கழிபட்ட பிந்துகளாற் சொன்ன பலன்.

குரு அஷ்டகவர்க்குபோட்டு குருயிருந்தருசிக்கு ரு-ம்ருசியிலிருந்து பிந்துயெத்தனையோ அத்தனைபேரும் புத்திரர்கள்.

அந்தருசியிற் பகை நீச்சக்கிரகங்களிருந்தால் புத்திரநாசம்.

குருயிருந்த ருசியிலிருந்த பிந்துவும் குருவுக்கு ரு-ம் ருசியிலிருந்த யிந்துவும் புத்திரராம்.

அந்தருசியிற் பகைநீசக்கிரகங்களிருந்தால் புத்திரநாசம் அப்போது குரு தேறிநிற்கில் பாக்கியமைந்தருண்டாம்.

குரு அஷ்டகவர்க்குப்போட்டு திரிகோணசோதனையும் ஏகாதிபத்தியசோதனையும் சோதித்தபிறகு நின்றபிந்துக்களில் இரவி மதி குஜன் சனி இவர்களிருந்தருசியில் பிந்துக்களைவாங்கிப்போட்டு நின்றருசிகளில் இருந்த பிந்தெல்லாம் புத்திரர்கள்.

குரு இருந்தருசியும் அதற்கு ரு-கூ ஆம் ருசியும் ஆகிய ௩-ருசி பிந்தும் சமனுகயிருந்தால் சந்தானம் அற்பம்.

குருயிருந்தருசிக்கு ரு-ஆ மிடத்தில் புதன் அஷ்டகவர்க்கு பிந்துருசியோடதிகமாயிருந்து குரு நட்பாங்கிசத்திலும் ஆட்சி வுச்சத்திலும் பெலனுயிருந்தால் சர்வதோஷமும் பரிகாரமாய் மகத்தாகிய கொடுமையெல்லாம் நீங்கி தீர்க்காயுசுள்ள புத்திரருண்டாம்.

புதனஷ்டகவர்க்கில் அதிகபிந்திருந்தருசியில் சனிவருகிறபோது புத்திரசந்ததியுண்டாய் வாழும்.

குருயிருந்த ருசிக்கு கஷ்டாஷ்டமவியத்தில் மதிலக்கினமாக அவன் வங்கிசக்ஷயமாகும் ரு-ஆ மிடத்தில் பாபக்கிரக மிருந்து அதில் பிந்துவுங் கொஞ்சமாகில் புத்திரரற்பமாம்

குரு யெத்தனையானங்கிசத்திலிருந்தான் அத்தனையாம் வருஷத்தில் விவாகமாம் அத்தனையாம் வருஷத்தில் புத்திரர் வுற்பத்தியாம்.

சுக்கிரனஷ்டகவர்க்கில் ஸ்திரீலட்சணமறியும்படி.

சுக்கிரனிருந்த எ-ஆம் ருசிபாதிபதி எந்தருசியி லிருந்தான் அந்தருசியில் அவனுடையஸ்திரீ செனிக்குமென்றறிக.

அந்தஸ்திரீக்கு இவன் புருஷனுகில் தேசாதிபதியான பிரபலவேந்தனுவன்.

அந்தருசியில்லாவிட்டால் அந்தஸ்திரீக்குப் பெண்சந்ததியில்லை.

ஆண்கள்நோக்கப் பிள்ளைபிறந்தால் அந்தமாதுக்குப் பீடையென்பனவாம்

சுக்கிரனிருந்தருசிக்கு ரு-ஆம் ருசியில் யெத்தனைபிந்திருந்ததோ அத்தனையும் விவாகங்கள்.

சுக்கிரன் சனிவாங்கிசத்தில் சனியுடன் கூடியிருந்தாலும் சனி ஆட்சிருசிகளிலிருந்தாலும் நீச்சஸ்திரீயுடன் புணர்ச்சியுடையவன்.

சுக்கிரன் குஜன் ஆட்சிகளிலிருந்து குஜன் நவாங்கிசத்திலும் குஜனுடன் கூடியிருந்தால் அவள்விபசாரி, மேற்படி மூனுவிதமுந்தோற்ருவிடில் சொன்னபலன் நன்மையாம்.

மதி பாவாங்கிசத்திலிருந்து இலக்கினத்துக்கு எ-அ-ஆ மிடத்திலாதல் கஉ-ஆ மிடத்திலாதல் பாபக்கிரகங்களுடன்கூடி சுக்கிரனிருந்தால் அவனிடஸ்திரீ இஷ்டகிருத்தியங்கள்போலிருந்து பிரம்மையாய் புருஷனைக்கொல்லுவள்.

சுக்கிரன் எந்த அங்கத்திலிருந்தான் அந்த அங்கிசாதிபதி கிரகத்தின்குணம் வுருவமுதலானவை யெல்லாமுண்டு அஸ்திக்குந்தெரித்திரிகோணமும் யேகாதிபத்தியமுஞ் சோதித்தபிறகு இரவி குஜன்சனி மதி ருகு கேது யிருந்த ருசிபிந்துக்களை யெடுத்துப்போட்டு மற்றருசி பிந்துககளெததனை அத்தனை ஸ்திரீகளுடையவனுய் வாழ்குவன்.

சனி அஷ்டகவர்க்குப்போட்டு ஆயுசு பார்க்கும் அடைவு.

ஜென்மலக்கினமுதல் சனிநின்ற ருசிமட்டில் யெத்தனை பிந்திருந்ததோ அத்தனையாம் வருஷத்தில் தத்து.

சனியிருந்த ருசிமுதல் ஜென்மலக்கினமட்டெண்ணி யிந்தருசிகளில் பிந்தெத்தனை பிந்திருந்ததோ அத்தனையாம் வருஷத்தில் அர்த்தசேதமும் தேகபீடையு முண்டாம்.

சனி அஷ்டகவர்க்கில் திரிகோணசோதனையும் யேகாதிபத்தியசோதனையும் சோதித்துக் கழிப்பட்டுநின்ற பிந்துவெல்லாங்கட்டி ஆகயித்தனையென்றுகண்டு.

இலக்கினத்துக்கு அ-ஆ மிராசியில் பிந்தில்லாவிட்டால் திரிகோணசோதனையும் ஏகாதிபத்திய சோதனையும் சோதித்துக் கழிபட்டபிந்துவைக்கூட்டியிந்த அ-ஆம் ருசி பிந்துவாற்பெருக்கி உஎ-ல் கழித்துநின்ற சேஷம் பிந்துயெத்தனை என்று கண்டு அசுவனிமுதல்யிந்த பிந்து மட்டாக எண்ணி அந்த நட்சத்திரத்திற் சனி வருகிறபோது தாது ஓழிக்குங் காயத்தை பிந்தில்லாத ராசியில் யிரவிமதி வந்தாலும் சீணமாய் மாய்குவானெனவறிக.

பிதுர்கர்மம்.

பிதாபிறந்த ருசியாதிபதி அந்தருசியிலிருக்க அதுவே யிலக்கினமாகப்பிள்ளை பிறக்கில் அந்தப்பிள்ளை பிதுர்கர்மம் பண்ணுவன்.

பிதாருசிக்கு உ-மிருசியாதிபதி மதியுடன் கூடியிருக்கினும் யக-ஆ மிடத்திலாதல் ஜென்மதிலாதல் சுபக்கிரகங்களுடனாதல் கூடியிருக்கினும் பிதுர் கர்மஞ்செய்வன்.

இரவி அஷ்டகவர்க்கு பார்க்கும்வகை.

பிதுர்கிரகமாகிய யிரவிக்கு உ-ம் ருசியிற் பிறந்தால் பிதுர்தனமெல்லாம் பிதாவினதிபத்தியமெல்லாம் யிநதபிள்ளைகொள்ளும் யிந்தபிள்ளை பிதுர்க்கிரகத்துக்கு கூ-ஆ மிருசியிற் பிறந்தால் பிதுருக்குச்சமானமாயிருப்பன், பிதுர்கிரகத்துக்கு கூ-ஆம் யிடத்ததிபதி யிந்தப்பிள்ளை பிறந்த யிலக்கினத்தி லிருந்தால் பிதுரினு மிஞ்சியிருப்பன் பிதுருஸ்தானதிபதி யிலக்கினத்தைப்பார்த்தால் அவன் வங்கிசம் விர்த்திக்கும் இரவியிருந்தால் ருசியாதிபிள்ளை யிலக்கினத்தைப் பார்த்தால் யிவன் வங்கிசம் விர்த்திக்கும் இரவியிருந்த ராசியாதிபதி பிள்ளையிலக்கினத்தைப்பார்த்தால் பிதுரினும் பிரபலன்.

பிந்தில்லாத ருசிமாதங்களில் சுபகாரியங்களும் சுபமுகூர்த்தங்களும் யாத்திரைபோகவு மொண்ணுது.

மேஷ முதல் ௩ ருசியில் பிந்துவும் } இப்படி மும்மூன்று ருசி
கடக முதல் ௩ ருசியில் பிந்துவும் } யிலும் பிந்துக்கள் அதிகமா
மகர முதல் ௩ ருசியில் பிந்துவும் } னதில் தேவபூஜைகள் பூஷ
ணங்கள் வைப்பிடம் சயனதலத்திற்கு மாகுமெனவறிக.

இரவி யெந்தநவாங்கிசத்தி லிருந்தான் அந்த நவாங்கிசாதிபதி மகாதிசை அந்தராந்திர திசையில் பிதுருவுக்குப் பீடைவரும்.

அந்தந்த நவாங்கிசாதிபதி பகையாயிருந்தால் அவன்திசை அந்த ரந்திரதிசையில் பிதுருவுக்குப் பீடைவரும்.

விருத்தம்.

இனியதந்தை யிருசிக்கிரண்டினி
லெழுந்தசேய்பிதாவின் பொருள்கொள்ளுமே
தனையன்பானுவுக் கொன்பதிற்றேன் றிஞேன்
றந்தையொப்பனதிகோளுறமிஞ்சுவான்
கனியுமக்கோளவ்வோரையைநோக்கினுங்
கதித்துவாழ மவன்கிளைசூரியன்
வினவிருசி யதிபனற்கோளுமாய்
மிக்கசேயோரை நோக்கிறையன்பனே.

கவி.

பெற்றமேடாதி மூன்றுமுன்ஞேரையிற்
பெருக்கவந்திசை நலம்பித்தரே.

மேஷாதி மீனந்தமாகமும் மூன்றிராசியில் யிருந்தபிந்து அதிகமானதிக்கில் பூமிலாபம் வஸ்திரலாபம் சகலவஸ்துவும் வரும்.

விருத்தம்.

முன்னுசந்திர சோதனைக்கண்டபின்
னுடுபதிக்குநால் விந்துவாலேற்றியே
பன்னிரண்டிற் கழிவுறும்விந்திலாய்
பதிசுதன்றுய் பரமர்தாள்பற்றுமே.

வ-ம். மதிக்கு சோதனைசோதித்தபின்பு ச-ஆ மிருசியிலிருந்த பிந்துவாற்பெருக்கி கஉ-ற் கழித்துநின்றசேஷமெத்தனை அத்தனைமாதத்தில் மாதுருகெண்டம்.

பிந்தில்லாத சூன்யராசியில் சனிவருகிறபோது மாதாவுக்குப்பீடை இவை தீரும்படிக்கு ஆதிமூலத்தை நினைத்துதொழுவது.

மதி ஆட்சியில் ஒரு கிரகமிருந்தால் கண்ட ஆயுசு ஆண்டில்மூன்றத்தொன்று தள்ளுவது, மதியின்றுல் கண்டவருடத்திற் பாதிதள்ளு

வது, பாபக்கிரகம் பகை நீசபாயிருந்தால் யெட்டிலொன்று தள்ளு வது, பதி ஆட்சியில் உ-கிரசமிருந்தால் பாதிவாங்கிப்போடவும்.

அஷ்டகவர்க்கத்தில் சுபப்பெற்றகிரகம் கேந்திரமாகிய இலக்கி னம் ச-ஆ மிடம் எ-ஆ மிடம் ௰-ஆ மிடம் இந்த இடத்திலிருந்த கிர கத்தின ஆண்டு முந்தி ஜெனனகாலத்தில் வருமென்றறிவது சர்வபாப மொழிக்கும்.

திரிகோணஸ்தானமாகிய ரு-ஆ மிடம் கூ-ஆ மிடம் கக-ஆ மிடம் இருந்த கிரகம் பலவானுயிருந்தால் அவன் அஷ்டகவர்க்கம் ஆண்டு திசை ஜெனனகாலம் துவக்கிவருமெனவறிக.

சருவாஷ்டகவர்க்கம் அறியும்படி.

விருத்தம்.

மாற்றுமேழ்கோள்விந் தீராறும்வைத்தபின்
மருவுசென்மோரை முன்னுலதிகமே
யேற்றசெல்வ நாடுநாலதிகமே
யினியபின்னுலு மந்தத்திற்செல்வமாம்
சாற்றும்வ்யவிந் தேறக்கர்மம்வியந்
தாழ்ந்திடராச ராசாங்கயோகமே
யேற்றுமேல்விளே யாடும்வீமேசர்தா
ளிறைஞ்சுகவாட் டகமீதுரைப்பதே.

இரவிமுதல் எ-கிரகத்துக்கும் அவரவர்க்குக்கண்டபிந்துக்களைக் கூட்டி கஉ-இராசியிலும் இலக்கினமுதல் ச-இருசியிலும் பிந்ததிகமா னுல் இவனுக்கு ஆதியில் மகா ஐசுவரியமுண்டாம் ச-ஆ மிராசிமுதல் அ-ஆ மிராசிபரியந்தம் பிந்து அதிகமானுல் ஐசுவரியமுண்டாம்.

இலாபஸ்தானமாகிய கக-ஆ மிருசி பிந்து அதிகமாய் ௰-ஆமிருசி பிந்து கஉ-ஆ மிராசிபிந்தும் குரைந்திருந்தால் யிருஜயோகமாம்.

கக-ஆ மிருசி பிந்து குறைந்து கஉ-ஆ மிருசி பிந்து யேறியிருந் தால் வெகு செலவாகு மென்றறிக.

கக-ஆ மிராசி பிந்துயேறி ௰-ஆ மிராசிபிந்து குறைந்திருந்தால் இவன் செய்யும்தொழில் பசுப்பில்லாமல்வினைத்தகருமமும் முடியாமற் போம் ஜென்மயிராசிக்கும் யிவ்வடைவே பலனென்று அறிந்துக்கொ ள்வதெனவறிக.

பாலுக்கு பலன்கூறுகின்றன.

இப்படியே திக்குப்பாலுக்கும் ஆண்பெண் ருசிகளின் பாலுக் கும் உயர்ந்ததைப்பற்றி பலன்சொல்லவும்.

ധ-ஆ மிடம் கஉ-ஆ மிடம் பரல்குறைந்தும் கக-ஆமிடப்பரல் அதிகமாகவு மிருந்தால் ருஜயோகம்.

ധ-ல் பரல்குறைந்து கஉ-ல் அதிகமானல் வரவுக்கு மிஞ்சினசெலவாம்.

ധ-ல் பரல்குறைந்தும் கஉ-ல் அதிகமாகவு மிருந்தால் செய்தொழிலில். லாபமில்லை யிவனெடுத்தகாரியமுடியாது.

இலக்கினதிபதி இலக்கினத்திற்கு சு-ஆ மிருசியாதிபதி யெந்தெந்த ருசியில் எந்தெந்த அங்கிசத்திலிருந்தார்களோ அந்தந்த அங்கிசாதிபதி அஷ்டகவர்க்காண்டு வருகிறபோது அந்தந்த நட்சத்திரத்திற்சனிநின்றால் கண்டம்.

ஜெனனகாலத்தில் ஜென்ம யிராசிமுதல் சனிநின்ற யிருசிமட்டாக யெண்ணி அதிற் எத்தனை பிந்திருக்கிறதோ அத்தனையாம் வருடத்தில் கண்டம் இவைதீர சுவாமிக்கு திருமஞ்சனம்பண்ண சருவதோஷமும் நீங்கும்.

பரலுக்கு வேறுபலன் கூறுகின்றன

விருத்தம்.

மிக்கதோர்கர்மந்தன்னில் பரவிலாபத்தான்மீறில்
தக்கலாபங்களுண்டாம் லாபத்துக்கழிவுதாழில்
தொக்கனசிலவாமந்த சிலவுக்குலக்கினத்தான்மீறில்
திக்கெலாம்புகழவாழ்வார் தன்னிலுஞ்சிறக்குமாதே.

அஷ்டகவர்க்கப் பலாபலன்.

இரவிமுதல் எ-கிரகத்துக்கும் அவரவர்க்குப்போட்டுக் கண்டபிந்து இருசி கஉ-லும் திரிகோணசோதனையும் யேகாதிபத்திய சோதனையும் சோதியாமும் அந்தந்தருசியில் சு-பிந்து யிருக்கிறது சமபலன. சு-பிந்துக்கு மேற்படில் நன்மை. சு-பிந்துக்கு குறைந்தால் நஷ்டம்.

இன்னம் சுபக்கிரகமானலும் பாபக்கிரகமானலும்
பிந்துயிருந்தபடிக்கு பலாபலன்.

| | |
|---|---|
| பிந்து | க-ஆகில் திரவியநாசம் மனஸ்தாபம் |
| ,, | உ-ஆகில் அவமானம் பீடை துவேஷம் |
| ,, | ௩-ஆகில் சஞ்சலம் வித்தை நாசம் |
| ,, | ச-ஆகில் இலட்சுமிகரம் காரியசித்தி |
| ,, | ரு-ஆகில் தனப்பிராப்தி விவாகசவுக்கியம் |
| ,, | சு-ஆகில் வித்தை லாபம் இலட்சுமிகரம் |
| ,, | எ-ஆகில் ஐசுவரியம் அதிகலாபம் |

இப்படி பலன்காண்பதெனவறிக.

இரவிக்கு கண்டபிந்துவில் அந்தந்தபிந்து அதிகமானயிருசியில் இரவி வருகிறபோது வெகு நன்மைதரும்.

பிந்து குறைந்திருந்த யிருசியில் இரவிவருகிறபோது தீமையுண்டெங்க.

இந்த யிருசி இரவிக்கு பகைநீசமாகில் வெகுநஷ்டம், இப்படி அந்தந்தக் கிரகங்களுக்கும் அவரவர்க்குப் போட்டுப்பார்த்து கண்ட பிந்து ச-க்கு குறைந்தால் நஷ்டம், நி-சூ-ஆனல் அந்தந்தகிரகள்பிந்து அதிகமானருசியில் கிரகங்கள் வருகிறபோது தனதானியம் வெகுநன்மைதரும்.

திரிகோணசோதனையும் இருசியாதிபதி சோதனையும் சோதித்து கழிபட்டு மிகுந்த பிந்து யெத்தனைகண்டதோ யெவன்வாக்கியத்துக்கும் அந்தந்தக் கிரகங்கள்நின்ற நட்சத்திரமுதலாகயெண்ணிக்கண்ட கடைசி நட்சத்திரத்தில் சனிவருகிறபோது அந்தந்த கிரகத்துக்கு அடுத்தபோக்கும் பீடை, சுபக்கிரகம்வந்தால் நன்மை.

| | |
|---|---|
| இரவி - பிதா. | குரு - மக்கள். |
| மதி - தாய். | சுக்கிரன் - பெண்டீர். |
| குஜன் - பிருதா | சனி - தனக்கு. |
| புதன் - மாதுலன. | |

இப்படி அவரவர்க்கு அந்தந்த யிருசிகளில் பிந்து குறைந்த ருசிகளில் அந்தந்த கிரகத்துக்கு நட்பு ஆட்சி உச்சமானல் சிறிதுநன்மையுண்டு, பகை நீசமானல் பெரும்பான்மையுந் துன்பம்.

ஏறினயிருசு அந்தந்தக்கிரகங்களுக்கு நட்பாட்சி யுச்சமாகில் அப்போது வெகுநன்மைதரும், பகைநீசமாகில் சிறிதுநன்மை, சுபக்கிரகர்வரில் தீது, இவையெல்லாம்ஆதிமூலத்தை நினைத்துசொல்வது.

காரகர் ஸ்தானங்கள் அறிவது.

| | | |
|---|---|---|
| சூரியன் | பிதா | ஒன்பதாமிடம் |
| சந்திரன் | மாதா | நாலாமிடம் |
| செவ்வாய் | சகோதரம் | மூன்றுமிடம் |
| புதன் | மாமன் வித்தை | ரெண்டாமிடம் |
| வியாழம் | புத்திரன் | ஐந்தாமிடம் |
| சுக்கிரன் | களத்திரம் | ஏழாமிடம் |
| சனி | ஜாதகன் | எட்டாமிடம் |
| | | ஆறுமிடம் |
| | | பத்தாமிடம் |
| | | பதினேருமிடம் |
| | | பனிரண்டாமிடம் |

இப்படி அறிவது.

குரு பாக்கியகாரகன் காரகர் தானதிபதிதானத்தை பார்த்தவன் இருந்தவன் இவர்களுடைய திசைபுத்தி சித்திரங்களில் சூட்சித்து விபரீத முதலானது கோட்சாரவேதைகளும் அறிந்து சொல்லவும்.

முன்கண்ட நட்சத்திரருசியில் வியாழம் வருகிறநாள் முதல் போன நாளளவும் யிதுபோலென்றறிக.

இருசிகளிற் கிரகநிற்குங் காலம்.

சூரியனுக்கு ஒருமாதம்
சந்திரனுக்கு ரெண்டேகால்நாள்
செவ்வாய்க்கு ஒண்ணரைமாதம்
சுக்கிரனுக்கு ஒருமாதம்
புதனுக்கு ஒருமாதம்
குருவுக்கு ஒருவருடம்
சனிக்கு யிரண்டரைவருடம்
ருகு கேதுவுக்கு ஒண்ணரைவருடம் ஆகிநிற்கும்.

இதுவுமல்லாமல் ஜாதகன் திதிவாரம் நட்சத்திரம் கூடிவரும் போது நன்மை தீமை யோசித்துச்சொல்லவும்

மீனமுதல் ச-யிருசியும் பிரதமகண்டம்
கடகமுதல் ச-யிருசியும் துதிகைகண்டம்
விருச்சிகமுதல் ச-யிருசியும் திரிதிகைகண்டமென்பதாம்.

ஆகமூன்று யிந்தகண்டத்திலும்.

தலை கடை பெருத்து நடுசிறுத்தால் டமரயோகம்.
தலை கடை சிறுத்து நடுபருத்தால் மத்தளயோகம்.

முன் சிறுத்து நடுபெருத்து பின் அதிலும்பருத்தால் யெக்காள யோகம்.

முன் பருத்து நடுசிருத்து பின்கொஞ்சம் பருத்தால் வீணையோகம்.

முன் அதிகமாகப்பருத்து நடுவில்சிறுத்து பின் அதிலுஞ் சிறுத்தால் பருவதேயோகம்.

முன்சிறுத்து நடுவும்பின்னும் யேற்றத்தாட்சியாகில் வாசியோகம்

மூன்றுகண்டமுஞ் சரியாயிருந்தால் சர்வாங்கயோகம்.

சர்வாஷ்டகவர்க்கத்தில் பார்ப்பது.

திரிகோணயிருசி விந்துக்கள்வுயர்ந்தால் சுபபலன்
அதிகம்குறைந்தால் குறைவானபலன்.

மத்தத்தானங்களுக்கும்.

இலக்கினத்திரிகோணம் பந்துக்கள் சவுக்கியம்.
ரெண்டாந்திரிகோணம் சேவகாவிருத்தி.
மூன்றாந்திரிகோணம் ஜனங்களைரட்சிப்பன்.
நாலாந்திரிகோணம் ஜனங்களை வுபத்திரவம்பண்ணுவன்.

| | |
|---|---|
| ௯-ஆ மிடம் தர்மம் | ௭-ஆ மிடம் காமம் |
| ௨-ஆ மிடம் அர்த்தம் | ௮-ஆ மிடம் மோட்சம் |
| ௩-ஆ மிடம் கிரகம் | ௨-ஆ மிடம் ஆபரணம் |
| ௧௨-ஆ மிடம் வாகனம் | ௭-ஆ மிடம் கிரமமானநட்பு. |
| ௨-ஆ மிடம் கிரமமானவார்த்தை. | |

க ச எ ௰ ரு ௯ ஆக ஆறும் லோகசிந்தனை.
கக க௨ உ ௩ ௬ அ ஆக ஆறும் மோட்சசிந்தனை.

| | |
|---|---|
| ௩-ஆ மிடம் புசித்தல் | ௮-ஆ மிடம் நித்திரை |
| க௨-ஆ மிடம் லங்கனம் | ௭-ஆ மிடம் மைதுனம் |

உ ரு அ கக பூர்வஜென்மம் பிதா பாட்டன்,
க ச எ ௰ இந்தஜென்மம் புத்திரன்
க௨ ௩. ௬ ௯ வருகிற ஜென்மம் புத்திரன்

இரண்டாமிடமுதல் ௬-ஆ மிடவரைக்கும் ரு.

பிதுர்பாரம்பரை.

எட்டாமிடமுல் க௨-ஆ மிடவரைக்கும் ரு.

மாதுர்பாரம்பரை.

இவை ஒற்றைக்கு ரெட்டையானல் மாறிக்கொள்ளவும்.
இலக்கினம் புருஷன் ௭-ஆ மிடம் பெண்ணும்.

கிரகஙின்றவிந்து அதிகமானல் கிரகபெலமும் தானவிந்துகள் அதிகமானல் தானங்கள் பெலமும்.

குணங்கள் அறியும்படி,

செவ்வாய் சுக்கிரன் ருஜசகுணம்
சூரியன் புதன் சனி தாமதகுணம்
வியாழம் சந்திரன் சாத்மீககுணம்.

சகலகுணம் விந்துவினலே முன்சொன்னபலன்களெல்லாம் பார்த்துக்கொள்ளவும்.

# பெண்கள் ஜாதகம்.

---

## இலக்கணபலன்.

விருத்தம்.

செய்யபெணசாதகத்தைச் செப்பிடலக்கினத்தில்
வெய்யவன்செவ்வாய்நிற்கில் விதவையாய்தரித்ரியாவ
டுய்யபொன்புந்திவெள்ளி துடந்துறின்விதவையென்பர்
தையலேயிராகுநிற்கில் றனையரைப்பெற்றிழப்பாள்.

இதுவுமது.

உகந்தலக்கினத்திற்புந்தி வுச்சனுங்கூடிநிற்கில்
சுகந்தனமுடையாளாகுஞ் சொல்லியபாவந்தானே
தகவுச்சமாட்சி சார்ந்துநட்பாய்நின்றாலும்
பகருமோர்தோஷமில்லை பையரவல்குலாளே.

இதுவுமது.

இலக்கினஞ்சனிவீட தாய்வெள்ளி யிகல்சனிகூடியேயிருக்கப்
பலப்படுமைந்திற்சுபரோயிருக்கப் பார்க்கினுமலடியென் றுரைப்பார்
பெலப்படுந்தனுவுமீனமேயுதிப்பப் பெட்புருகுருவிருந்தக்காற்
சொலப்படும்புத்ரபவுத்திரஞ்செல்வஞ்சொந்தமாயனுபவிப்பாளே.

இதுவுமது.

கடகவில் லுதையமென்னு மைந்தாங்காதலனுங்
காதலிக்குமனஸ்தாப மிக்கவனுஞ்சிங்க
மிடபவிருச்சிகங்கன்னி யிலக்கினமேயாக
வேற்றுமைந்தில்மதியிறக்கி லற்பபுத்திராளாம்
படருமொன்றேடேழெட்டிற் பாக்கியத்திற்பாவர்
பதிந்திருக்கிலென்னேர முந்துக்கப்பலனும்
படருமிந்தத்தருணத்திற் சுபர்நிற்கில்மானே
யனுதினமுஞ்சந்தோஷ பலனாகுமென்னே.

இதுவுமது.

அரையும்லக்கினத்தோன் தன்னை யரிஞ்சன்பொன்வெள்ளிபாற்கில்
குறைவிலாச்சுகமும்பொன்னுங் குவிந்திடுங்கோதைமாதே
நிரையிலக்கினத்திற்காரி நின்றிடிற்றரித்ரியாவள்
பிரையதுதானேநிற்கிற் பேதையற்பாயுளென்பார்.

மேற்படிபலனுடன்-௨.-ஆ மிடப்பலன் அறியும்படி.

கிட்டும்லக்கினத்திற்பாலக் கிரகங்களிருக்குங்காலே
தொட்டுறுநட்போடாட்சில் சொலுமுச்சத்திருக்குமேனும்
மட்டிடுந்தோஷமில்லை வருமிரண்டாமிடத்திற்
றட்டுருஞ்சுபர்சேய்ருகுந் தானிற்கிற்றரித்திரியாமே.

மேற்படிபலனுடன் ௩-ஆ மிடப்பலன்.

வெள்ளிபொன்புந்திவாக்கின் மேவிடிற்றனத்தையுள்ளாள்
கிள்ளைவெண்மதியுநிற்கிற் பெண்ணினைப்பெருவளென்பர்
வள்ளியமூன்றிற்பாநு மதிபுதன்புகர்பொன்னிற்கிற்
றள்ளொணாப்பிள்ளையுண்டாம் தானியவிர்த்தியுண்டாம்.

மேற்படிபலனுடன் ௪ மிடப்பலன்.

ஒருமூன்றிற்சனிசேய்ருகு முற்றிடிற்றுணைவரில்லை
யருணலிற்கதிரோநிற்கி லர்ப்பமாஞ்சுகமென்றோதும்
பொருதுசேய்நிர்க்கிலர்ப்ப புத்திரர்தனக்குதோஷம்
சருவியருகுநிற்கின் தத்துண்டாமென்றுசொல்லே.

மேற்படிபலனுடன் ௫-ஆ மிடப்பலன்.

கூறியவைந்தில்வெள்ளி குருவுறத்தருமதானம்
வீரியமகிழ்ச்சியோடு வெகுசவுக்கியமுமுண்டாம்
தேரியவைந்திற்பானு சேய்நிற்கிற்பெற்றிழப்பள்
மாறிலாப்புந்திநிற்கின் மைந்தருந்தனமுண்டாமே.

மேற்படிபலனுடன் ௬-ஆ மிடப்பலன்.

பிஞ்சினிற்சனியிருகு வமர்ந்திடின்மலடியாவள்
ஐஞ்சுவெண்மதியும்நிற்கின் பெண்ணினைப்பெருவளென்பர்
தஞ்சமாமாறிற்பானு சனிசெவ்வாயிருகுவெள்ளி
வஞ்சமில்குருவும்நிற்கில் மைந்தரும்பகையுண்டாமே.

மேற்படிபலனுடன் ௭-ஆ மிடப்பலன்.

அம்புவியாறிநிற்கில் அழகுண்டாம்புந்திநிற்கிற்
றென்புடனழிப்புண்டாகும் சிசிநிற்கத்தனமுண்டாகும்
வம்பியவேழிற்காரி தன்னில்வெண்கொலையிற்சாவள்
விம்பமாய்ச்செவ்வாய்நிற்கில் விதவையென்றறைவாய்மாதே.

இதுவுமது.

நீடியவேழிற்பொன்னோ நின்றிடில்சிறையிருப்பள்
காடியபுந்திநிற்கிற் றகைச்சேதமிருகுநிற்கில்
நாடியவுற்றூர்நாச நண்ணியகதிரோனிற்கிற்
றேடியவியாதியாவள் சேய்நிறக்கண்ணினுளே.

இதுவுமது

உண்ணும்வெண்மதியும்வெள்ளி ஒரேழாமிடத்திநிற்கின்
மன்னுதேசாந்திரத்தின் மரணமேயாவளென்ப
மின்னுறுமெட்டிற்புந்தி வேந்தனுமுவந்துநிற்க
பன்னுறுங்கணவனோடே பரவியேமரணமாவள்.

இதுவுமது.

கிட்டியேவேழிற்புகர்மதிநிற்கிற் கிழவனைமணம்புரிந்திடுவள்
மட்டிடும்பாலர்கூடியேநிற்கில் வாலிபவிதவையாயிருப்ப
ளொட்டியகாமமேடஞ்சானுதிப்ப வுயர்மதிப்புகருடன்பாவர்
கட்டினின்றிடினுமெட்டினிற்பாவர்கலக்கினுவித்தையென்றுரையே.

இதுவுமது.

இருமையாமேழிற்பாவரேயிருக்க விரண்டினில்சுபரிருந்தக்காற்
புருடனுக்கேமுன்மரணமேயாவாள் புலிவிடைவிருச்சிகந்தானே
எருவியபுத்திரத்தானமதாக மதிநிற்கிலாண்பிள்ளையற்பம்
கரிதியகாமம்வெள்ளிவீடாகிற் காமுகப்புருடனையடைவள்.

இதுவுமது.

வீசியக்காமம்புந்திவீடாகில் வித்துவான்றனைமணஞ்செய்வள்
காசிலாக்குருவின்வீடெனினல்ல கணவனையடைந்துவாழ்ந்திருப்பள்
மாசிலாக்கதிர்வீடாகின்மத்திபமாம் வயதினில்விதவையாமதிலே
பேசியப்பாவர்கூடியேபார்க்கப் பிணியுளகணவனையடைவள்.

இதுவுமது.

அடைந்திடுமிவரைசுபரவர்நோக்கக் காலேந்தினபுருடனையடைவ
ளிடம்பெறவல்லான்மலடியேயாவ லேழிடந்தான்சராசித்
தடம்பெருமேழோனசராங்கிசமன்றிச் சராசிதன்னலேயிருக்கிற்
குடம்பெறுந்தனத்தாற்கற்புடையளெனக் கூறுவர்மலேபூங்கொடியே.

இதுவுமது.

மிகையிலாவெழிற்சனிசெவ்வாயிருக்க வீடதுப்பகைவர்வீடாகப்
பகைவரேபார்க்கில்வித்தையாமேழிற் பண்புளசுபரும்பாபருமே
திகையுறக்கூடப்பார்க்கவேபாபர் திரிட்டியேயதியமாயிடினும்
வகையொடுநிதமும்பாபுருடனையே மருவியேயிருப்பள்மாமயிலே.

இதுவுமது.

எலுமோரேழிற்சனியனேமூட மெய்திடிற்பாபரேபார்க்கி
நாலுபேரறியும்புருடனைப்பிரிந்தே நாட்டினில்விபசரித்திடுவள்

பாலுறுமேழாமிடஞ்செவ்வாய்வீடாய்ப் பாபர்பார்த்திடவுடனிறுக்கிற்
காலுறும்புவிமேற்றரித்திரவானக் கணவனையடைவளென்றுரையே.

இதுவுமது.

அலகிலாவேழாமிடங்குருவீடா மதிற்குருசுபவர்க்கம்பெற்றே
பெலமுடனுச்சாங்கிசத்தினிலிருக்கிற் பேரறிவுடன்குணமழகும்
பலபலகலவிதிர்வியஞ்செல்வம் படைத்திடுங்காமுகனான
திலகியதோர்கணவனையடைவள் செரிப்பரந்தகண்மயிலே.

இதுவுமது.

தடம்பெறுமேழாமிடஞ்சசிவீடாய்ச்சனிசுபாங்கிசம்பெற்றிறுக்கி
லடைக்குருமூமைப்புருடனையடைவளருள்காமம்புந்திவீடாகத்
துடங்குவெண்மதியுஞ்சுக்கிரனிறுக்கத்துன்னெனபார்க்கினுந்தானே
இடம்பொருளேவல்சவுக்கியமுடையவிரைவனைமணம்புரிபவளே.

இதுவுமது.

வினவியகாமத்திவர்வனுக்கேழில்வெள்ளி நின்றிடப்புகற்கொன்பான்
சினமுறப்பாவரிருந்திடக்கணவனிரந்திடவிபசரித்திடுவள்
கனசுபர்பார்க்கிற்பிரறறியாமற்களவிலேவிபசரித்திடுவள்
வனமுறுஞ்சுபரும்பாபரும்பார்க்கில் வடிப்பமாய்விபசரித்திடுவள்.

இதுவுமது.

கருதுலக்கினத்திற்கேழிற் கதிர்நிற்கிலேம்பத்தைந்தாம்
திருமதியிருக்கிலேழாஞ் சேய்நிற்கிற்பதினாறுண்டா
மருள்புதனிறுபதாம்பொன் னவன்முப்பதாரும்வெள்ளிச்
சவுரிமோரேழெட்டொன்பான் சநியென்பதருபதாமே.

இதுவுமது.

நெருங்கியயிராகுகேது நிகருமோரேழிநிற்கி
லிருக்குமோரெழு தெல்லா லெழுபத்தைந்தென்பதாண்டாம்
வருக்கமாம்வயதுபெற்ற மருகனையணைந்துவாழ்வள்
பொருழ்பெறுகணிதநூலோர் புகன்றதிவ்வாறதாமே.

மேற்படிபலனுடன் அ-ஆ மிடப்பலன்.

எட்டினிற்பாவர்தானே யிருக்கினுமிவர்தன்வீடா
யொட்டினில்விதவைபாவ ளொன்புதனிறிக்கிற்கொண்டோன்
சுட்டிடமரிப்பன்முன்னஞ் சுபரும்பாபருமேபார்க்கின்
மட்டிடக்கணவனோடே மாதமூன்றினில்மரிப்பள்.

இதுவுமது.

அட்டமந்தன்னிற்குருபுதனிறக்கி லனுமானந்தனை அவள்
வட்டவெண்மதியஞ்சுக்கிரனிருத மரிவிலாப்பாய் என்றுரைப்பர்
திட்டமாங்கதிரோனுறியடிகுண்டாம் சேய்நிற்கின் வயென்றரை
வட்டமாஞ்சனியுமேவிடின்மெத்தத் தகயர்கள ண்டாமே. [வர்

ஒன்பதாமிடப்பலன்.

ஒன்பதிலிரவிபுகர்செவ்வாய்மால் பொன்னு டிற்சுகந்தனமுண்
மன்புருரவிசேய்கூடியேநிர்க்கின் மைந்தரைப்பெற்றிகழ்ந்திடுவ
ளன்பினுருதுநிற்கிறத்துண்டா மதிற்சனி டிற்பிணியாம்
பின்புபெற்றிழப் ன்மதிநிற்கின்மானே பெண்மகப்பெரப்பேரே.

பத்தாமிடப்பலன்.

பத்தினிற்கதிரோன்சனிநிற்கின்மிகவும் பாவமாம்புந்தியாமிருகு
வொத்துரைநிற்கில்வித்தையாமதிக முரைத்திடிற்றூன்பிரதாபி
சித்தியாம்வெள்ளிநின்றிடிலறிட்டம் சேய்புதன்குருவுமேநிற்கில்
றத்தபொன்னுண்டாம்வக்கிரனிறுக்கிற்றகையருண்டாமெனசாற்றே.

பதினோராமிடப்பலன்.

மிக்கலாபத்திரவியேநிற்கில் வெகுபுகராண்மதிநிற்கிற்
றக்கபொன்னுண்டாம்வக்கிரனிற்கில் றகயருண்டாம்புதநிர்க்கிற்
முக்கியப்பொருளுண்டாங்குருநிற்கின் முற்றுந்தீர்க்காயுளுமுண்டாஞ்
சக்கிரநிற்கிற்செல்வமாஞ்சனியன் துடந்தூழலழகுசெல்வமுமே.

பனிரெண்டாமிடப்பலன்.

வியத்திற்பொன்னிற்கிற்றனமதுண்டாகும் நிரவிகண்ணுந்தரித்திர
கயப்பில்வெண்மதியமுறிற்றகச்சேத கண்ணியபாம்புதானிற்கில்
செயப்புவிமீதில்விபசரித்திடுவ டிணம்புகரிற்பதிவிரதை [வே.
வயப்புதனிருக்கில்வெகுமந்தர்சனிசேய் வரிற்சுபர்கண்ணினேடென

கோள்களினேக்கங் கூறுகின்றது.

எல்லாக்கோள்களுந் தாந்தாமாயிருக்கும்யிடத்துக்கு எ-ஆமிடத்தைப்பார்ப்பார்கள் யிவைகளில் விசேஷமாய்சனி ௩ எ ௰ வியாழம் ரு எ கூ செவ்வாய் ச எ அ இம்மூவரும் நிரனிறைய யிடங்களைப்பார்ப்பார்கள் விசேஷபார்வையென்றறிக.

எல்லாக்கோள்களுடைய நன்மைதுன்மை கூறுகின்றது.

இலக்கினத்துக்கு ரு கூ ஆமிடத்துக்கு அதிபராய் எந்தக்கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத யின்பப்பலனைக் கொடுப்பார்கள் இலக்கினத்துக்கு ௬ கூ கக-ஆமிடத்துக்கு அதிபராய் எந்தக்கிரகங்கள் வந்தாலும் மட்டில்லாத துன்பபலனைக் கொடுப்பார்கள்முன்சொன்ன

௩ ௬ ௧௧-ஆ மிடங்களிலிருக்கிறவர்கள் பாபபலனைக் கெடார்களென்றறிக.

கோள்களுக்குரித்தாகுஞ் சுபகேந்திரமும்
பாபகேந்திரமும் கூறுகின்றன.

பாபக்கிரகங்களாகிற சூரியன் செவ்வாய் சனி இவர்கள் கேந்திரங்களாகிற ௧ ௪ ௭ ௰-ஆ மிடங்களுக்கு அதிபரானால் சுபபலத்தைக் கொடுப்பார்கள்.

சுபக்கிரகங்களாகிற குரு சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் கேந்திராதிபதிகளானால் பாபபலத்தைக் கொடுப்பார்கள்.

முன்சொன்ன யெல்லாக்கோள்களும் ஒன்றுக்கொன்று விசேஷ பிரபலராவர், அஃதாவது ௫-மிடத்ததிபதிக்கு ௯-மிடத்ததிபதிபிரபலன்.

இலக்கினதிபதிக்கு ௪-ஆ மிடத்ததிபதி பிரபலன், அவனுக்கு-௭ ஆ மிடத்ததிபதி பிரபலன், அவனுக்கு ௰-ஆ மிடத்ததிபதி பிரபலன், ௩-ஆ மிடத்ததிபதிக்கு ௬-ஆ மிடத்ததிபதி பிரபலன், அவனுக்கு-௧௧ ஆ மிடத்ததிபதிபிரபலனுமெனவறிக.

உரைத்ததானமொன்பதிற்கு முயர்விழிவாற்
பலனுரைக்கின்றது.

தானத்ததிபதிகளாகிய எல்லாரும்மேன்மேலாய்த் தங்களுக்குப் பொருந்திய சுபாசுபபலன்களைக் கொடுப்பார்கள் அன்றியும் ௫-ஆ மிடத்ததிபதியைப் பார்க்கிலும் ௯-ஆ மிடத்ததிபதி அதிகபலனைக் கொடுப்பன் இலக்கினகேந்திராதி பதியைப்பார்க்கிலும் சதுர்த்தகேந்திராதிபதி அதிகபலனைக்கொடுப்பன் ௩-ஆ மிடத்ததிபதியைப்பார்க்கிலும் ௬-ஆ மிடத்ததிபதி அதிகபலனைக்கொடுப்பன் அவனைப்பார்க்கிலும் ௧௧-ஆ மிடத்ததிபதி அதிகபலனைக்கொடுப்பன் ஒழிந்ததானதிபதிகட்கும் இவ்வளவே கொள்கயென்பதாம்.

குருசுக்கிரன் புதன்சந்திரன் சுபர்களிவர்கள் கேந்திராதிபதிகளானால் சுபபலனைக்கொடார்கள்.

சூரியன் செவ்வாய் சனி பாபிகள் இவர்கள் கேந்திராதிபதிகளானால் அசுபபலனைக் கொடார்களெனவறிக.

13

இரண்டபென்னிரண்டிற் கிறைவரியல்பு [illegible]

இலக்கினத்திற்கு இரண்டுபக்கமாகிய [illegible]தானுதிபதிகள் தங்கள் தங்களுடனே சேர்ந்தகோள்களுக்கு[illegible] தங்களுக்கு வேருமிடத்திற்கும் நேருகிய சுபபலன்களை [illegible] கிரகசம்பந்தமும் இருசிசம்பந்தமும் இல்லாமலிரு[illegible]வில் தங்கள் தங்கள் பொசிப்பிற்கு ஒத்தபலன்களை [illegible]றதலெனக் கொள்க.

எட்டுக்கிறைவ னியல்புகூ[illegible]கின்[illegible]

அ-ஆ மிடத்ததிபதி பாக்கியத்தா[illegible]வியத்தானுதிபதியான பாவத்தினுலேநன்மை பெருக்கமில்லாத து[illegible]த்தைக்கொடுப்பன் அந்த அ-ஆ மிடத்ததிபதிதானே இலக்கினுதிபதியானல் மாறுபாட்டின்பத்தைக் கொடுப்பன் அ-ஆ மிடத்ததிபதியைப்போல மிகவுந் துன்பபலத்தைக் கொடானெனவறிக.

கேந்திருதிபத்திய தோஷத்தைக் கூறுகின்றது.

கேந்திருதிபதி பத்தியதோஷத்தில் குருவும் சுக்கிரனும் மிகவும் பலவான்கள் இவர்கள் நீங்காமல் ஆயுளுக்கு வியத்தானமாகிய உ-எ-ஆ மிடங்களில் நின்ருருகில் சந்தேகமில்லாமல் ஆயுவியஞ்செய்வார்கள் மாரகத்தானுதிபதியைப் பார்க்கிலும் அந்த மாரகத்தானததிலிருப்பவர்கள் பலவான்களெனக்கொள்க இவர்கட்குக் கேந்திருதிபத்திய தோஷத்தாற் கூறப்படுவதெனவறிக.

புதன் சசிஇரவிக்குண்டான குணங்கூறுகின்றது.

குரு வெள்ளிக்குப்பின்னர் அந்தக் கேந்திருதிபத்தியதோஷத்தில் புதன்பலவான் புதன்பின்னர் அவன்றந்தையாகிய சந்திரன்பலவான் அ-ஆ மிடத்ததிபத்தியத்திலுண்டான மட்டில்லாத பெரியபாவம் சூரியசந்திரர்கட்குச்சேராது யென்பதாம் ஒழிந்தோர்க்குச்சேருமென்பதாயிற்று கேந்திருதிபத்திய தோஷமுள்ள பின்னுல்வரையும் சேரக்கூறுததனுல் குருதோஷத்தில் சுக்கிரதோஷம் சுக்கிரதோஷத்தில் புதமேதாஷம் புததோஷத்தில் சந்திரதோஷமும் குறைதலெனக் கொள்கமற்றை அ-ஆ மிடத்ததிபதிகளைப்போல சூரியசந்திருதிகளுக்குத் தோஷமில்லையெனவறிக.

செவ்வாய்குணங் கூறுகின்றது.

செவ்வாய்க்கு ஆதிக்கத்தினுலே தசமகேந்திருதிபத்தியத்திலுண்டான சுபத்துவம் திரிகோணுதிபத்தியத்தி லுண்டானபடியினுலேசிற

ப்பைப்பெ[illegible]சமகேந்திருதி பத்தியத்தினலே மாத்திரம் சிறப்பை ப்பெருது [illegible]னயாகிய கடகத்திற்குண்டாகிய சிறப்பென்பதா மெனவறி[illegible].

[illegible]க்களி னியல்புகூறுகின்றது.

இரு[illegible]ற்றைக்கோள்கள்போல் ஆதிபத்தியமில்லாத படியினு[illegible]னத்திலிருந்தார்களோ எந்தளந்த பாவாதி பர்களுட[illegible] அவ்வவர்கட்கேற்ற சுபாசுபபலன்களைக் கொடுப்ப[illegible]டுமெவர்கள் பலராயுள்ளளவில் அதில்பலவானுக்கே ற்ற பலனீவர்க[illegible]னவறிக

பொதுச்சுபயோகம் புகல்கின்றது.

திரிகோணுதிபதியும் கேந்திருதிபதியும் ரு-சு-அ-கக-ஆ மிடங்களுக்கு அதிபதிகளுடன்கூடாமல் தங்கடங்கள் சம்பந்தமான வேறே ரிடத்தாதிபத்திய தோஷமில்லாமல் இருவருங்கூடல் ஒருவரையொருவர்பார்த்தல் ஒருவரிலொருவரிருத்தலான சம்பந்தமுற்றுருகில்இவ் வுலகத்தோருக்கு விசேஷசுபபலனைக் கொடுப்பார்கள் தான்விசேஷத் தால் சுபபலனைக் கொடுப்பவரானுலும் ஒருவருக்கொருவர் சம்பந்தத் தால் விசேஷபலனைக்கொடுப்பார்க ளென்றறிக.

குருபலன் கலிவிருத்தம்.

இடபமேடநண் டிம்மூன்றிராசியும்
அடலம்லக்கின மாகவதனுளே
தொடருமாவிட குருறச்சூழ்ந்திடப்
படருமுத்தம மென்றுபகர்வரே.

மீனம் கடகலக்கினத்தில் குருதிசைபலன்.

விருத்தம்.

பேசும்லக்கினமீனண்டிற் பிறந்தவர்தங்கட்கெல்லாம்
பாசமாய்மகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது
தேசுறுகரியபாம்பின் றிசைவரிற்பாக்கியங்கள்
தூசுபொன்சோபனநற் சுபபலன்பெறுவர்தாமே.

மகரம் கன்னி லக்கினத்தில் கேதுதிசைபலன்.

தார்செறிமகரங்கன்னி தனிற்பிறந்தோர்கட்கெல்லாம்
பார்செறிமகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது

சீர்பெறுகேதுகோளின் றிசைவரும்போதுசெல்வம்
ஊர்திசாருஜாராற்சன் மானமுண்டாங்கண்டீரே.

ஈனயோகப்பலன் கூறுகின்றன.

இரவியும் ஒன்பதாமிடத்ததிபதியுங் கூடிநிற்க ரு-ஆ மிடம் சுபக்கிரகங்கள்நிற்க ௬-கூ-ஆ மிடம் பாபக்கிரகம் [illegible] னத்தொழில் செய்வனெனவறிக

உயிர்ப்பியோகம் கூறுகின்றன.

சனி கேந்திரத்திலிருக்க லக்கினத்தில் மதியிருக்க ௰உ-ஆமிடத்தில் குருவிருக்க பிட்சையெடுத்து ஜீவிப்பனெனவறிக.

பரதேசயோகம் கூறுகின்றன.

இலக்கினதிபதிக்கு கூ-அ-ஆ மிடத்தில் பாபக்கிரகம்நிற்க கூ-ஆ மிடத்ததிபதியுஞ் சுபக்கிரகங்களும் கூ-ஆ மிடத்தில்லாதிருக்கில் பரதேசவாசனுய்த் திரிவனெனவறிக.

ஊனயோகம் கூறுகின்றன.

குருசுக்கிருள் நீசஸ்தானத்திலிருக்க சனிநவாங்கிசத்தில் நிற்க இவர்களைச் சனிபார்க்கில் பிள்ளையுந்தாயும் விலைப்படும் இரவிசேக்ஷத்திரத்தில் சனிநிற்க மதிக்ஷேத்திரத்தில் இரவிநிற்க இரண்டுபேரும் ஒருருசியிலிருக்கில் சரீரத்திலூனமுடையவன் துர்ப்பலன்.

இலக்கினத்திற்கு அ-ஆ மிடத்தில் இரவிபெலவானுய் வுச்சமாயிருக்க அவனுடன் சுபக்கிரகங்கள் கூடிநிற்கினும் கண்ணூனமாம்௬-ரு-கூ-கக-ஆமிடம் பாபர்நிற்கில் சுபக்கிரகங்கள் நோக்கினும்பெலவானுயிருக்கினும் காதுகெட்டுப்போம் அல்லாதிருந்தால் காதுக்கூனமாம் எ-ஆ மிடத்திற் பாபர்நிற்கில் பல்லூனமாமெனவரிக.

விருத்தம்.

ஜாதகலக்கினமுதலாய் லக்கினுதி
　　தானிருந்தவீடளவு மெண்ணிக்கண்ட
ஓதுதொகைலக்கினு திபனைத்தொட்டே
　　வுடனெண்ணிக்கண்டமனை பாவர்வீடேல்
ஏதமுறுந்தரித்திரயோ கங்களாகும்
　　யினிமையுள்ளோர்வீடாயிற்றனவானுவன்
போதுஜன்மந்தனக்கைந் தீராறிரண்டும்
　　புனிதர்மனையாகிற்பொன் னுளனேயாவன்.

வேறு விருத்தம்.

கண்டுபொ[illegible]யாயெட்டாறிற் கருதுமூன்றிற்பன்றென்றில்
மீண்ட[illegible]ந்நலக்கினத்தைப் பாருதிருக்கின்மிகுசெல்வம்
கொண்[illegible]தற்கனுசாரி குலவியிந்நால்வருநீசம்
அண்டி[illegible]ருங்கி[illegible]சர்மனை யணுகிற்றனவானுவானே.

வேறு விருத்தம்.

செல்வந்தரு பத்தாமதி பன்ஜென்மாதிபனும்
வல்வந்த குடும்பாதிபன் வளரங்கிசைமன்னும்
செல்வந்திக மூங்கேந்திர மதனிற்சுபர்காணில்
நல்வஞ்சிறு வயதிற்றன பதியாகவுநண்ணும்.

வேறு விருத்தம்.

வருஞ்சன்மலக்கினத்து மாமதியிருந்தவீட்டும்
இருபுறந்தன்னிநல்லோ ரிருந்திடிற்றனவானுவன்
ஒருமனை தன்னினுற்று லோதியபலனிற்பாதி
தருமொருபுறத்தினிற்கிற் றனமுங்காற்பங்கதாமே.

நிதிசேர்வகை கூறுகின்றன.

விருத்தம்.

அணுகுநிதிசேர்வகையா தவனுற்றுதையர்பொன்
அன்னைக்கம்புலிசெவ்வாயாற் றனதுபொருளே
றணுகுபுதனுற்பகைஞர் பொருளரசன்றன்னால்
நல்லுறவோர்நிதிசுங்க னுக்குமனைவியரால்
பணமருவுங்காரியினு லடிமையுளோர்பொருளும்
பண்பொடுசேவித்தவர்பொன் பாங்குடன்வந்தடையும்
குணமொடுலக்கினஞ்சோமன் றனக்குப்பத்தாகும்
குடிவீட்டுக்குடையோனைக் கொண்டுபலன்கூறே.

கவி.

கூறியலாபாதி யொன்பதாமதிபனுடனே
கூடினுற்பழையதனங் குறுகவந்துசேரும்.

இருசயோகம்கூறுகின்றன.

இலக்கினத்தில் குரு ௪-குஜன் புதன்-௰-ல் மதி ௧௧-ல் சனியிக்கு
கில் இராஜனும்.

உ-க்கு அஷ்டமபவன சுபஆ [illegible]த்திலிருக்கில் [illegible]வன் தன்றந்தை யிலன்கொள்ளுவனெனவறிக.

[illegible]காலகாரம் யோகபலன் கூறுகின்றனர்.

[illegible] மதிரகிரக்க [illegible] [illegible]
[illegible] நின்றிருக்கின்ற [illegible] யோக
மற்றதற்பலன்றீர்க் காயுளுங்கீர்த்தி ம[illegible] வளமும்
[illegible] கதிர்காலவர் மருவிமூலமறுமிடத்திருந்தப்
பெற்றவ [illegible] கங்கு யாக்கிசங்கள் பெறின் மகாராசயோகந்தான்
பெருமையின்ளுல்லர் ஜென்மமிதிருக்கவின்றகனா [illegible] தரிற்புவியில்
குற்றமிலாத மகாராஜன் மெய்யிற் குறைவறநிறைமதியிருக்கக்
[illegible] தக்தனைக்காணக்கொற்றவனுமெனக்கூறும்.

இராகினின்றராசிக்கு மூன்றாமிடம் கிரகம் ... [illegible] வாசியோக [illegible] சுக்கிரன் [illegible] பராதாரமோகியாய் [illegible] மதற்கு தயிரியவானுஞ் சாஸ்திரசம்பன்னனுமிருப்பனென வறிக.

விருத்தம்.

இ[illegible] கம்ராவிமூன்றுஜ
[illegible]வர்த்தகன் தீரன்மகவுளான்
[illegible] தாமீபோகிகல்விமான்
[illegible] வத்திர தானதர்மஞ்செயுங்
[illegible] பராதாரமோகிபூண்
[illegible]
[illegible] ... வதுத்திரு
[illegible] சாஸ்திரியனே.

[illegible]னிற் சுபக்கிரகம் நிற்கில் கமலயோகம் இதற்குப்பலன் [illegible] வெற்றியுமாயன் பிறந்தசெயன்னனென [illegible]

[illegible]யோகம் கூறுகின்றனர்.

[illegible] நிற்கில் கமலயோகம் இதற்க் [illegible] சாஸ்திரங்களுக்கு [illegible] கேட்பவனுமாயிருப்ப னென வறிக.

அசுவினியோகம்.

இலக்கினத்துக்கிரகமுன் சுபக்கிரகம் நிற்கில் அசுவினியோகம் இதற்குப்பலன் தனவான் இராஜ்யமாளுவன் சொன்னமொழி [illegible] பின்னை [illegible] மதைகவயோகதர்மி.

[illegible] பத்திரயோகம் அங்கிசயோகம்.

[illegible] நிசீனறண விருத்தம்.

நருஞ்சியாட்சி யுச்சநாற்கேந்திரங்
குவலத்லட்ச யோகம்பெருத்தவ
ரேரும்பூமி திடமேனிகீர்த்தியா
னேயஞானி பூடணம்விருப்புவன்
பாரின்மாலுறப் பத்திரயோகமாம்
பரவுசோதிடங் கல்விசத்தப்பிரியன்
சேரும்பொனாலுமி லங்கிசயோகமாக்
தேவதோத்திரஞ் செல்வஞ்செருக்குமே.

குஜன் ஆட்சி யுச்சங்கேந்திரங் ளில் நிற்கில் அட்சயோகம் இதற்குப்பலன் பெருந்தனமுடையவன் பூமியையுடைய திடவான் ஞானி பூஷணமுடையவன் கீர்த்தியுடையவன்.

இந்தப்படி புதனிற்கில் பத்திரயோகம் இதற்குப்பலன்ஜோதிஷமறிந்தவன் கல்விமான் பகலுபகாரியாயிருப்பன்.

குருநிற்கில் அங்கிசயோகம் தேவபூசை யுடையவன் புத்திருடையவன் புண்ணியவானாயிருப்பன்.

இலக்கினாதிபதி கட்டாட்சியுச்சம்பெற்று சுக்கிரனுடன் கூடிநிற்கினும் [illegible]வன்.

குரு பெலவானாயிருந்து மதி கட்பாங்கிசத்தில்நிற்க அவனைச்சுக்கிரன் பார்க்கினும் குருமதியைப்பார்க்கினும் இராஜனாவன்.

சுக்கிரகம் வுச்சத்தில் நிற்க அவனை மித்துருகிரகம்நோக்கில்தன பதியாயிருப்பன்.

சோதிட மர்மசாஸ்திரம்

முதற்பாகம் முற்றிற்று.

அனுபவமானது!! பிரசித்தியடைந்தது!! சஞ்சீவிபோன்றது!!

# அயக்காந்த திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வமருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது. இதை அனேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினலாவது கெட்ட சகவாசத்தினலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலத்தைத் தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேயமுறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல்நோய்கண்டு அவஸ்தைப்படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டேவேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனல் தீரக்கூடிய அநேகவியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.

நரைத்தமயிரைக் கறுப்பாக்கும். உஷ்ணத்தினலாவது புழு வெட்டினலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும். நீர் வியாதிகள் தீரும் கண்ணெரிச்சல் கைகால் காந்தல் இவை தீரும். முகவசீகரத்தை உண்டாக்கும், தேகஅசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிகவலுவைத்தரும், தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும், வாதபித்த சிலேத்துமத்தாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுகளுக்கும் நல்ல பலத்தைத்தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் சாப்பிட்டால் இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடியடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

## திராவகம் உட்கொள்ளவேண்டிய முறை.

அரிக்கால் ஆழாக்கு சுத்தஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7-துளி அதில்விட்டுக் கலக்கிக் குடித்துவிடவேண்டும். பத்தியமேகிடையாது இதைப்பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 1 4 0 டஜன் 1-க்கு ரூபா—12.

ஒரு மண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டியின் விலை
ரூபா 2 0 0 டஜன் 1-க்கு ரூபா—21.

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்